# தமிழரசு

மே 2005




## 4 ஆண்டுச் சாதனைகள்


GOVERNMENT OF TAMIL NADU
Department of Revenue Administration,
Disaster Management and Mitigation
World Bank Supported
Emergency Tsunami Reconstruction Project
at a cost of Rs. 1852.74 crores
Launched by
Selvi J JAYALALITHAA
Hon'ble Chief Minister of Tamil Nadu
18.5.2005
Chennai

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
சித்திரை – வைகாசி
மலர்: 36 இதழ்: 11
மே 2005 – விலை ரூ.10

இந்த இதழில்...

★ அகிலம்போற்றும் உள்துறை ........ 2
★ நிதித்துறை ........ 5
★ பொதுப்பணித்துறையின் சீர்மிகு பணிகள் ........ 6
★ சாதனைப் பயணத்தில் நெடுஞ்சாலைத்துறை ........ 7
★ மக்கள் நலன் காக்கும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை ........ 9
★ கிராம முன்னேற்றத்தில் ஊரக வளர்ச்சித்துறை ........ 12
★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ........ 14
★ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ........ 16
★ கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை ........ 19
★ உயர்கல்வித் துறையின் உன்னதப் பணிகள் ........ 24
★ பள்ளிக்கல்வித்துறை ........ 25
★ மானுடம் போற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ........ 27
★ நெசவாளர்கள் நலன் போற்றும் கைத்தறி மற்றும் துணிநூல்துறை ........ 30
★ மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ........ 34
★ நிதிவளம் பெருக்கும் வணிகவரித்துறை ........ 35
★ தொழில்துறை ........ 38
★ சட்டத்துறை ........ 39
★ தகவல் தொழில்நுட்பத்துறை ........ 41
★ வளர்ச்சிப் பாதையில் வரலாற்றுச் சாதனைகள் ........ 45
★ வருவாய்துறை ........ 53
★ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ........ 57
★ சுற்றுச்சூழல் மேம்பாட்டுத்துறை ........ 60
★ சிறுதொழில்துறையில் சீரிய வளர்ச்சி ........ 65
★ மின்உற்பத்தியில் தன்னிறைவு பெறும் எரிசக்தித்துறை ........ 67
★ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை ........ 70
★ போக்குவரத்துத்துறையின் மகத்தான சாதனைகள் ........ 73
★ திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை ........ 75
★ விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வரும் வேளாண்மைத்துறை ........ 77
★ செய்தி மற்றும் சுற்றுலாத்துறை ........ 81
★ பொருளாதாரப் புரட்சிக் காணும் கூட்டுறவுத்துறை ........ 85
★ மகளிர் நலன் காக்கும் சமூகநலத்துறை ........ 88
★ தமிழகத்தில் தரணி போற்றும் தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை ........ 90
★ இளைஞர்கள் நலன் போற்றும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை ........ 94

## அட்டைப்பட விளக்கம்

இரண்டாம் பக்க அட்டை :
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 18.5.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# அகிலம் போற்றும் உள்துறை

இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முதலிடமாக அமைந்திடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு தலைமையில், தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழவும், மக்கள் வாழ்வில் நல்ல வளர்ச்சியினைப் பெற்றிடவும் செயலாற்றி வரும் தமிழக அரசின் காவல் துறை, உலக நாடுகள் போற்றும் சிறந்த துறையாக விளங்குகிறது.

நாட்டின் பொது அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையைக் காத்து, பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் அடக்கி மக்கள் நலனைக் காத்து வருகின்ற தமிழக காவல்துறை, மாறிவரும் சமூகச் சூழ்நிலைக்கேற்ப புதுமையும் திறமையும் பெற்ற அங்கமாகவும் மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டும் செயலாற்றி வருகிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயலாற்றி, காட்டுக்கொள்ளையன் வீரப்பனின் அத்தியாயத்திற்கு முடிவு கட்டி, உலக வரலாற்றில் சிறப்பானதொரு பெயர் பெற்ற துறையாக தமிழக காவல்துறை விளங்குகிறது.**

## காவல்துறையின் சாதனைகள்

★ 2003–ஆம் ஆண்டில் 1,47,521 வழக்குகளும், 2004ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் வரை 1,30,709 வழக்குகளும் முடிவு செய்யப்பட்டுள்ளன.

★ கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2004–ஆம் ஆண்டில் குற்ற நிகழ்வுகள் 5.1 விழுக்காடு குறைந்துள்ளது. மாநிலத்தில், இது ஒரு ஆரோக்கிய மான நிலவரமாகும்.

★ 2003–ஆம் ஆண்டில் 72.13% ஆக இருந்த திருடுபோன சொத்து மீட்பானது, 2004ஆம் ஆண்டில் 80% ஆக உயர்ந்துள்ளது.

★ 2001–2002ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 942 பெண் உதவி ஆய்வாளர்களில், தகுதி உடைய 881 பேர் அடிப்படைப் பணிப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

★ கருணை அடிப்படையிலான பணி நியமனத்தின் கீழ், பணி நியமனம் செய்யப்பட்ட 183 நபர்கள் இரண்டாம் நிலைக் காவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கும் 262 ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சென்னை நகரில் குற்றத் தடுப்புப் பிரிவு உதவி ஆய்வாளர்களுக்கென 513 மோட்டார் சைக்கிள்களும், சென்னை நகர போக்குவரத்துப் பிரிவில், உதவி ஆய்வாளர்களுக்கு 100 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டுள்ளன.

★ 292 விஎச்எஃப் ஸ்டேட்டிக் கருவிகளும், 901 விஎச்எஃப் மொபைல் கருவிகளும், 1,407 விஎச்எஃப் கையடக்க கருவிகளும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.



★ காவல் நிலையங்கள், உட்கோட்டங்கள், மாவட்டங்கள் ஆகியவற்றிற்கென ரூபாய் 17.5 கோடி செலவில், 2,705 கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம்**

★ 2003–2004ஆம் ஆண்டில், நூற்றாண்டு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 3,609 மாணவர்களுக்கு ரூ.1,32,57,000ம், காவல்துறையினரின் 229 குழந்தைகளுக்கு கல்விப் பரிசாக ரூ.10,22,000 வழங்கப்பட்டுள்ளது.

★ காவல் நிலையங்களைத் தரம் உயர்த்தும் வகையில், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில், ரூபாய் 296 இலட்சம் மதிப்பீட்டில் 25 காவல் நிலையப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ 2002–2003 இல், ரூபாய் 24 கோடி மதிப்பீட்டில் 200 காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ ரூபாய் ஆறு கோடி செலவில் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட காவல் அலுவலகங்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

★ ரூபாய் 72 இலட்சம் செலவில் விழுப்புரம், ஈரோடு, திண்டுக்கல், கோவை, விருதுநகர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், சேலம், தேனி, புதுக்கோட்டை, நாமக்கல் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் காவல் துறையினருக்கான தங்கும் அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ காவல் வானொலி தொழில்நுட்பப் பிரிவுக்கு, சென்னை, ராஜா அண்ணா மலைபுரத்தில் ரூ. 51 இலட்சம் செலவில் தொழில்நுட்பப் பயிற்சி மையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

★ ரூ.1.15 கோடியில், தஞ்சை, நாமக்கல், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் காவல் வானொலி தகவல் பரிமாற்ற வளாகங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

★ ரூபாய் 1.69 கோடி செலவில், 12 மாவட்டங்களில் துப்பறியும் பிரிவு நாய்களை உரிய முறையில் பராமரிக்கும் வகையில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ ரூ.5.13 கோடி செலவில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள், ஆயுதப் படை, பெண் காவலர் மற்றும் காவலர்களுக்கென தனித்தனியே 570 ஒய்வறைகளும், குளியல் அறைகளும் கட்டி முடிக்கப்பட்டன.

★ ரூபாய் 75 இலட்சம் மதிப்பில், ஆவடி, உளுந்தூர்பேட்டை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கென பாதுகாப்பு வளையம் அமைப்பதற்கான பணி முடிவடைந்துள்ளது.

★ ரூ.3 கோடி மதிப்பில், 25 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கென புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**காட்டுக் கொள்ளையன் வீரப்பன் அத்தியாயத்திற்கு முடிவு**

★ சிறப்பு இலக்குப் படை வீரர்கள், வீரப்பனைப் பிடிப்பதற்காக பல்வேறு வகையான வியூகங்களை வகுத்து, இரவும் பகலும் பாராமல் தொய்வின்றிப் பணியாற்றி, வீரப்பனுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில், காவல் துறையினர் வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் சுட்டுக் கொன்றனர். இருபதாண்டுகளுக்கும் மேலாக மனித உயிர்களைக் கொன்று, காட்டு வளங்களைச் சூறையாடி வந்த வனக்குற்றவாளி வீரப்பனின் அத்தியாயத்திற்கு முடிவு கட்ட சிறப்பு இலக்குப் படையினர் ஆற்றிய பணியானது மிகவும் பாராட்டுதலுக்கு உரியதாகும்.

★ வீரப்பனைப் பிடிக்க சிறப்பு இலக்குப் படையினர் புரிந்த வீரதீரச் செயல்களையும், அப்படையில் பணியாற்றியவர்கள் ஆற்றிய தகுந்த பணியினையும் பாராட்டி, அங்கீகரிக்கும் வகையில், அவர்களுக்கு பதவி உயர்வு, பதக்கங்கள், ரொக்கப் பரிசுகள், விரும்பிய இடத்தில் மனைப்பட்டாக்கள் போன்றவை அரசால் வழங்கப்பட்டுள்ளன.

**காவல்துறையை நவீனமயமாக்குதல்**

★ தமிழ்நாடு காவல்துறையை மாறிவரும் தேவைகளுக்கேற்ப நவீனப்படுத்துவதில் இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. கணினிமயமாக்குதல், அதிநவீன தகவல் தொடர்பு, ஆயுதங்கள், வாகன மற்றும் பயிற்சி அளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.427.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

**காவலர் வீட்டுவசதி மற்றும் கட்டடங்கள்**

★ காவல் பணியாளர்களின் வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்ய குடியிருப்புகள் கட்டப்படுவதை உறுதி செய்வதில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. இதுவரை, 6,315 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சென்னைப் பெருநகர காவல் ஆணையரகம்-**

★ பொது அமைதியை காத்திடவும், மக்களுக்கு நிம்மதியான சூழ்நிலையை உருவாக்கித் தரும்பொருட்டும் ரூ.22.40 கோடி செலவில் சென்னைப் பெருநகர காவல் ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர காவல் ஆணையரகத்தில், 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உள்ளடக்கி மொத்தம் 155 காவல் நிலையங்கள் உள்ளன.

**சிறைத் துறை**

★ சிறைகளையும், நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் திட்டம் 1.7.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மத்திய சிறைகளையும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் வகையில் 78 இடங்களில் வீடியோ மூலம் இணைக்கும் முறையினை (Video Conferencing System) அறிமுகப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

★ பெண் குற்றவாளிகளுக்கென தனிக் கிளைச் சிறை ஒன்றை திருச்சிராப்பள்ளியில் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**மகளிர் காவலர்கள்**

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கிணங்க, நாட்டிலேயே முதல் முறையாக மகளிர் காவலர்களுக்கு அதிரடிப்படை பயிற்சியளிக்கும் வகையில், 352 மகளிர் காவலர்கள் சிறந்த முறையில் இப்பயிற்சியை முடித்துள்ளனர்.

★ மாநில காவல்துறையில், 130 மகளிர் காவலர்களைக் கொண்ட மகளிர் அதிரடிப்படை இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

★ இரு மகளிர் அதிரடிப்படை அடங்கிய 1,078 மகளிர் காவலர்களைக் கொண்ட அனைத்து நிலை மகளிர் காவல் படை அமைக்கப்பட்ட முதல் மாநிலமாக இந்தியாவிலேயே தமிழ்நாடு திகழ்கிறது.

★ 196 காவல்துறை உட்கோட்டங்கள் அனைத்திலும் ஒவ்வொரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை உருவாக்கி யுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பது சிறப்புக்குரியதாகும்.

**பாலினர் வேறுபாடின்றி அனைவரையும் கையாளும் பயிற்சி**

★ ரூ. 123 இலட்சம் செலவில், அனைத்து காவல் துறையினருக்கும் ஒவ்வொரு குழுவிற்கும் பாலினர் வேறுபாடின்றி அனைவரையும் கையாளும் பயிற்சி ஆறு நாட்கள் அளிக்கப்பட்டது. மகளிர் காவலர்களுக்காக இதற்கான சிறப்புப் பயிற்சியும் நடத்தப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலை ரோந்துப் பணி**

★ நெடுஞ்சாலை ரோந்துப் பணி மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ், 160 நெடுஞ்சாலை ரோந்துப்பணி அணிகள் ஏற்படுத்தப்பட்டு 80 முக்கிய இடங்களில் 80 புதிய "குவாலிஸ்" வாகனங்கள் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

**மின்னணு ஒளி, ஒலி இணைப்பு**

★ ரூ.8.61 கோடி மதிப்பீட்டில், சிறை வளாகத்தில் இருந்தபடியே கைதிகளின் விசாரணைக் காலத்தை நீட்டிக்க உதவும் வகையில், "தொலைக்காட்சி மூலம் நீதி வழங்கல்" (Tele Justice) முறை உருவாக்கப்பட்டு, 9 மத்திய சிறைகளும், 270 நீதிமன்றங்களும் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

**தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

★ ஆகஸ்ட் திங்கள் 2004–இல் இத்துறையில் உள்ள காலியிடங்களை



பூர்த்தி செய்ய ஏதுவாக, தீயணைப்போர் மற்றும் நிலைய அலுவலர் நேரிடை நியமனங்கள் செய்வதில் இருந்த தடை ஆணை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

★ கும்பகோணத்தில் ஒரு பள்ளியில் ஏற்பட்ட கோரமான நிகழ்வினைத் தொடர்ந்து பள்ளிகளில் தீ பாதுகாப்பினை மேலும் அதிகரிக்கும் பொருட்டு இத்துறை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது :

(அ) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தீ பாதுகாப்பு குறித்த கட்டாய ஆய்வு;

(ஆ) தீ விபத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் கட்டாயப் பயிற்சி;

(இ) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலிருந்து தடையின்மைச் சான்று வழங்குதல்;

(ஈ) தீ பாதுகாப்பு குறித்து ஆசிரியர்களுக்கு தீவிர பயிற்சியளித்தல்.

**மாநிலத்தில் விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு**

★ பதினொன்றாம் நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தமிழ்நாட்டில், 49 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு, நவம்பர் திங்கள் 2001 மற்றும் பிப்ரவரி – மார்ச் 2002–லிருந்து செயல்பட்டு வருகின்றன.

★ இவ்விரைவு நீதிமன்றங்களுக்கான முழு நிதியையும் மைய அரசு வழங்கியது. இத்திட்டத்திற்கு 2000–2005 உள்ளிட்ட காலத்திற்கு ரூ.14.12 கோடியை மாநிலத்திற்கு மைய அரசு ஒதுக்கீடு செய்தது. 49 விரைவு நீதிமன்றங்களும் சிறப்பாகச் செயல்பட்டு 1,23,503 வழக்குகளை முடித்து வைத்துள்ளன.

★ பொதுமக்களின் நலன் மற்றும் நிலுவையில் உள்ள 26,455 வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண, 49 நீதிமன்றங்கள் ஒராண்டிற்கு, தொடர்ந்து செயல்பட ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ ★ ★

# நிதித் துறை

நாட்டின் வளர்ச்சியும், முன்னேற்றமும், நாட்டின் தேவைக்காகச் செய்யப்படும் செலவீட்டுத் தொகையின் மதிப்பீட்டை வைத்தே அமையும். அரசின் முறையான நிதிப் பங்கீட்டை வைத்தே அரசுத் துறைகளின் செயல்பாடும் முன்னேற்றமும் திருப்திகரமாக அமைகின்றன.

ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு துறையின் முக்கியத்துவத்திற்கும் ஏற்ப, நிதியினை ஒதுக்கி, வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் நிதித்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

நிதி ஆதாரத்தையும், பண வருவாயையும் பெருக்கி, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி, இந்தியாவிலேயே தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உருவாக்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தை ஒளி மிகுந்த பாதையில் முன்னேற்றி வருகிறார்கள்.

★ நிதிநிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தை இயற்றி, அதில் குறிப்பிட்ட இலக்குகளை எய்தியுள்ள ஒருசில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. ஏழை எளியோர், நிதிநிலைமைச் சமன்பாட்டு நடவடிக்கைகளினால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்து, பொருளாதார வளர்ச்சிக்கும் பொது நிதியின் வளத்திற்கும் ஏற்றதொரு மத்திய தரக் கால நிதிநிலை சீரமைப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

★ கடந்த நான்காண்டுகளில், தமிழ்நாட்டில் மிகவும் சிக்கலானதொரு பொருளாதாரச் சீரமைப்பு மற்றும் நிதிநிலைச் சமன்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில், ஏழை எளியோர் எந்தவித பாதிப்பிற்கும் எள்ளளவும் உள்ளாகாத வண்ணம் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதனால் இந்த நடவடிக்கை இலகுவாக அமைந்துவிட்டது. 2001ஆம் ஆண்டு மே திங்களில் காணப்பட்ட குழப்பமான கையறு நிலைமைகளை தமிழ்நாடு இன்று வெற்றிகரமாகத் தகர்த்தெறிந்துவிட்டது. இந்தியாவின் முதன்மை மாநிலம் எனும் இலக்கினை நோக்கி தமிழ்நாடு பீடுநடை போட்டுச் செல்கிறது.

## அரசின் சாதனைகள்

★ 2000–2001 ஆம் ஆண்டின் நிதி நிலைமை சீர்குலைவுடன், மாநிலத்தின் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான வளர்ச்சிப் பணிகளின் புறக்கணிப்பும் பின்னிப் பிணைந்திருந்தது. தொடர்ந்து வந்த கடுமையான வறட்சி நிலைமைகள் பொருளாதார மீட்சிக்குத் தடையாக இருந்தன. 'மனிதநேயம் கொண்ட பாரபட்சமற்ற வளர்ச்சி' என்பதனை அடிப்படையாகக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையிலான புதுமையான பொருளாதாரக் கொள்கை முற்றிலுமான திருப்பத்தை உறுதி செய்துள்ளது. பொருளாதார நிலையில் வளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது. 2004–2005ஆம் ஆண்டில் தமிழ்நாடு 8 சதவிகிதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை எய்தும்.

★ 2002–2007 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட பத்தாவது திட்ட காலத்திற்கான திட்ட இலக்கை ரூ.40,000 கோடி எனும் அளவிற்கு பெரும் வளர்ச்சித் திட்டத்தை இவ்வரசு தயாரித்துள்ளது. அச்சுறுத்தும் நிதி நிலைமையை நேர்கொண்ட போதிலும், 2002–2003ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டிலும் திட்ட இலக்குகள் எய்தப்படுவதோடு மட்டுமல்லாது அவை விஞ்சப்படுவதையும் இவ்வரசு உறுதி செய்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.9,100 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2001–2002 ஆம் ஆண்டின் இலக்கைவிட 75% வளர்ச்சி கொண்டதாகும்.

★ 2001–2002 ஆம் ஆண்டில் பட்டிகளுக்கு தொகை கொடுக்காமல் விடப்பட்டு செயற்கையாக குறைத்துக் காட்டப்பட்ட ரூ. 2,739 கோடி அளவிலான வருவாய்ப் பற்றாக்குறை 2004–2005ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளின்படி ரூ.1,687 கோடி அளவிற்கு குறைந்துவிட்டது. 2005–2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, இது ரூ.1,404 கோடி எனும் அளவிற்கு மேலும் குறையும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

★ 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.1,777.91 கோடி எனும் அளவிலிருந்து வருவாயீட்டும் சொத்துக்களை உருவாக்கும் மூலதனச் செலவு 2005–2006ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டக் கணிப்பின்படி ரூ.4,791.64 கோடி அளவிற்கு உயரும்.

★ ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கு 2005–2006ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.7,528.09 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

★ சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பிற் கான ஒதுக்கீடு 2001–2002 ஆம் ஆண்டிலிருந்த ரூ.1,681.72 கோடி அளவிலிருந்து 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.3,364.88 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

★ ரூ.2,160 கோடி செலவிலான தமிழ்நாடு சாலைப் பகுதித் திட்டத்திற்கு உலக வங்கி ஏற்பளித்துள்ளது. ரூ.597.15 கோடி ஒதுக்கீடுடைய தமிழ்நாடு சுகாதார முறைகள் திட்டம் உலக வங்கியின் ஏற்பைப் பெற்றுள்ளது. ரூ.567.42 கோடி ஒதுக்கீட்டிலமைந்த தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்-II செயல்படுத்தப் படுவதற்கு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம், மற்றும் நீராதார ஒருங்கிணைப்புத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாடுத் திட்டம் – III மற்றும் தமிழ்நாடு அதிகாரமளித்தல் மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டமான 'புதுவாழ்வு' ஆகியன உலக வங்கியால் பரிசீலிக்கப்பட்டு விரைவில் ஏற்பளிக்கப்படவுள்ளன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அயராத முயற்சியில் தமிழக நிதித்துறை வளர்ச்சிப் பாதையில் செல்கிறது.** ★

# பொதுப்பணித் துறையின் சீர்மிகு பணிகள்

மக்களுக்கான அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளைச் செய்வது பொதுப்பணித்துறை ஆகும். அரசின் நிருவாக அலுவலகங்கள், மக்களின் பல்வேறு பயன்பாடுகளுக்கான கட்டடங்கள், நீர்வள ஆதார அமைப்புகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டடங்களைக் கட்டுவதுடன் அவற்றைப் பராமரிக்கவும் செய்கிறது.

இத்தகைய இன்றியமையாப் பணிகளைச் செய்துவரும் பொதுப்பணித்துறையில் தனிக்கவனம் செலுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை நிறைவேற்ற ஊக்கமளித்து வருகிறார்கள். பாசனப்பணிகள், தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டங்கள், சிறுபாசன நதிகளை நவீனப்படுத்துதல், கண்மாய்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களைத் தூரெடுத்துப் புனரமைத்தல், தேசிய கடற்கரைப் பாதுகாப்புத் திட்டங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பெரும் பணிகளை பொதுப்பணித்துறை சிறப்பாகச் செய்து வருகிறது.

## அரசின் சாதனைகள்

### நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்

* **உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.1,083 கோடி செலவில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் தமிழகத்தில் தகுதியான இடங்களில் செயலாக்கப் பட்டுள்ளது.**
* நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் II –க்கான ரூ.2,900 கோடி மதிப்பீட்டிலான கருத்துருவின் மீது நிதியுதவி பெற உலக வங்கியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.
* ரூ.52.33 கோடி மதிப்பில் 15 சிறு பாசனப் பணிகள், ரூ.4.66 கோடி மதிப்பில் 14 சிறப்பு சிறுபாசனப் பணிகள் 2004–2005க்கான பகுதி–II திட்டமாக ரூ.9.30 கோடி மதிப்பில் 9 திட்டங்கள், ஆர்ஐடீஎப்–ன் கீழ் ரூ.10.71 கோடி மதிப்பில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் 10 திட்டங்களின் பணிகள் தொடங்கப் படவுள்ளன.

### நபார்டு வங்கி நிதியுதவி

* ரூ.198.36 கோடி மதிப்பில் 14 பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கி அனுமதி அளித்துள்ளது.

### ஹட்கோ நிதியுதவியுடன் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

* ஹட்கோ நிதியுதவியுடன் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.56.17 கோடி மதிப்பில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், நடுக்குப்பத்தில் ரூ.90 இலட்சம் மதிப்பில் கடலரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.
* வடசென்னையிலுள்ள எண்ணூர் துரித வழித் தடத்தில் 2.38 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.57 கோடியில் கடலரிப்புத் தடுப்புப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

### சென்னை குடிநீர் வழங்கும் திட்டம் – 2

* **சென்னை மாநகருக்கான குடிநீர் வழங்கலை அதிகப்படுத்தும் திட்டம்–2க்கு ரூ.124 கோடி தமிழக அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.**



ஏரிகள் தூர்வாரும் பணி

* வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ரூ.105 கோடி மதிப்பீட்டில் 1,750 ஏரிகள் தூர்வாரப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

### லாரி லோடு மணல் விலை குறைப்பு

* தமிழக ஆற்றுப் படுகைகளில் வரைமுறையின்றி மணல் எடுப்பதைத் தடுத்து நேரடியாகப் பொதுப்பணித்துறையின் மூலம் 239 குவாரிகளில் மணல் எடுத்து 171 இடங்களில் சேகரித்து ரூ.1,000 வீதம் விற்கப்பட்ட ஒரு லாரி அளவு மணல், தற்போது பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி ரூ.600 என்று விலை குறைத்து விற்பனை செய்யப்படுகிறது.
* **பல்வேறு அரசுத் துறைகளுக்காக பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய கட்டடங்களை கட்டிப் பராமரித்திடும் வகையில், பொதுப்பணித் துறையின் கட்டட அமைப்பின் மூலம், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.411.52 கோடியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.** ✶



# சாதனைப் பயணத்தில் நெடுஞ்சாலைத் துறை

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, கட்டமைப்பு மேம்பாடு வழி வகுக்கிறது. மாநிலத்தில் உள்ள கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த சாலைக் கட்டமைப்பு வசதிகள் பெரிதும் துணைபுரிகின்றன.

இந்தியத் திருநாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் உள்ளதைவிட தமிழ்நாட்டில்தான் அதிக அளவிலான சாலைக் கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

மாநில மக்கள்தொகையில் பெரும் பகுதியினர் கிராமப் புறங்களில் வசிக்கின்றனர். கிராமப் புறங்களுக்கு சிறந்த சாலை இணைப்பு வசதிகளை அளிப்பதில் தமிழக அரசு தற்போது அதிக கவனம் செலுத்தி வருகிறது. கிராமங்களை இணைப்பது, பயண நேரம், வாகன இயக்கச் செலவு ஆகியவற்றைக் குறைப்பது போன்ற நோக்கங்களுடன் ஊரகச் சாலைகளைப் பிரதான சாலைகளுடன் இணைத்து ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினை ஏற்படுத்தி நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தமிழக அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

சாலைகளை, பல்வேறு பகுதிகளை இணைக்கும் அமைப்பு மட்டுமே எனக் கருதாமல், அவற்றை மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான தேவைகள் என்பதை உணர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழக அரசு, நெடுஞ்சாலைத் துறையில் சாதனைப் பயணம் மேற்கொண்டு வருகிறது.

## அரசின் சாதனைகள்

★ **நெடுஞ்சாலைத் துறையில், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.2,688 கோடி மதிப்பீட்டில் பல்வேறு சாலைப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.**

### நபார்டு வங்கி மூலம் சாலை வசதிகள்

★ நபார்டு வங்கி கடனுதவியுடன், ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியைக் கொண்டு, 4 ஆண்டுகளில் 2,126.19 கி.மீ. அளவிலான சாலைப் பணிகள் மற்றும் 400 பாலப் பணிகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

★ நபார்டு வங்கியின் கடனுதவியுடன் 500 முதல் 1,000 வரை மக்கள்தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் அடிப்படையில், ஊரகச் சாலைகள் திட்டம், சிறப்பு உறுப்புத்திட்டம் மற்றும் பேருந்துச் சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஆகிய குறைந்தபட்ச சேவைகள் திட்டங்களின் கீழ், 2,781.08 கி.மீ. அளவிலான சாலைப் பணிகளும், 57 பாலப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### பழுதடைந்த சாலைகள் சீரமைப்பு

★ தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக, பொதுமக்களிடமிருந்து பங்குப் பத்திரங்கள் வாயிலாகத் திரட்டப்பட்ட நிதியினைக் கொண்டு ரூ.175.10 கோடி மதிப்பீட்டில், 2,618 கி.மீட்டர் அளவிற்கு, மாவட்டங்களில் பழுதடைந்த இதர சாலைகளைச் சீரமைக்கும் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.



★ சென்னைப் பெருநகர் எல்லையில் உள்ள உள்கட்டமைப்பு வசதியினை ரூ.18,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் மாபெரும் திட்டம் உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாகப் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்த 86.30 கி.மீ. அளவிலான 29 பணிகள் ரூ.33.71 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### ஊரகச் சாலைகள் மேம்பாட்டுப் பணிகள்

★ ரூ.150 கோடியில் ஊரகச் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், 3,038 கி.மீ.

நீளமுள்ள சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 885.87 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் ரூ.47.26 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

**முழுமையான சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு வளர்ச்சித் திட்டம்**

★ முழுமையான சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதரச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளின் கீழ், கடந்த நிதியாண்டில், ரூ.100 கோடி மதிப்பில் 563.86 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள், ரூ.100 கோடி மதிப்பில் 663.56 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலை மேம்பாட்டுப் பணிகள், ரூ.250 கோடி மதிப்பில் 4,545 கி.மீ. நீள மாவட்ட இதர சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், ரூ.87 கோடி மதிப்பில் 1,484.54 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**பல்வேறு திட்டங்களின் கீழ் சாலை பழுதுபார்ப்புப் பணிகள்**

★ **முதலமைச்சரின் சிறப்புச் சாலை பழுதுபார்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ.578 கோடி மதிப்பீட்டில் 12,699 கி.மீட்டர் அளவிலான சாலைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.**

★ சாலைகளின் மேல்தளம் புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ், ரூ.91.74 கோடி மதிப்பீட்டில் 2,295 கி.மீட்டர் அளவிலான சாலைகளின் மேல்தளம் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

★ பேருந்துத் தடச் சாலைகள் புதுப்பிக்கும் பணித் திட்டத்தின் கீழ், ரூ.150 கோடி மதிப்பீட்டில் 3,078 கி.மீட்டர் அளவிலான சாலைகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

**சாலை மேம்பாட்டுப் பணிகள்**

★ பகுதி – 2 திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 72.60 கி.மீட்டர் அளவிலான சாலைப் பணிகளும், 48 பாலப் பணிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**நபார்டு வங்கி கடனுதவியுடன் பாலங்கள் மேம்பாட்டுப் பணி**

★ காவிரிப் பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள பழைய 204 பாலங்களை ரூ.200 கோடி மதிப்பீட்டில் திரும்பக் கட்டும் ஒரு மாபெரும் திட்டத்தின் முதற்கட்டமாக 94 பாலங்களை நபார்டு வங்கியின் கடனுதவியுடன் திரும்பக் கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இவற்றில் 90 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்**

★ தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.343.13 கோடி மதிப்பீட்டில் 1,184.31 கி.மீ. அளவில் சாலைப் பணிகளும், 23 பாலப் பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன.



★ இருப்புப்பாதை பணிகள் திட்டத்தின் கீழ், 6 சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1 சாலை கீழ்ப் பாலம் கட்டப்பட்டுள்ளது.

**ஹட்கோ கடனுதவியுடன் சாலைப் பணிகள்**

★ ஹட்கோ கடனுதவியுடன், ரூ.513.92 கோடி மதிப்பீட்டில், 36 சாலை மேம்பாலம் / கீழ்ப் பாலம் கட்டும் பணிகள் எடுக்கப்பட்டு, 32 சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

★ ஹட்கோ கடனுதவியுடன் ரூ.112 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள் எடுக்கப்பட்டு, 76.50 கி.மீ. அளவிலான சாலைப்பணிகளும், 48.86 கி.மீ. அளவிலான சாலைப்பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன.

★ ஹட்கோ கடனுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 60 பாலங்களை திரும்பக் கட்டும் பணி எடுக்கப்பட்டு, 27 பாலங்களின் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. ★

# மக்கள் நலன் காக்கும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை



மாநகர மற்றும் நகரத்தில் வாழ்கின்ற மக்கள் நலனைக் காக்கும் பணியில் மாநகராட்சி மற்றும் நகராட்சி நிருவாகம் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற பணியினை சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் மேற்கொண்டு வருகிறது. ஒரு நகரத்தின் தூய்மை, நாட்டின் தூய்மையாகும். அதன்படி நகராட்சிகளும், மாநகராட்சிகளும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பணிகளை செய்து வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்த 15 அம்சத்திட்டத்தின் அடிப்படையில், நகர்ப்புற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்துதல், பாதுகாப்பான குடிநீர் கிடைக்கச் செய்தல், நகர்ப்புற ஏழைகள் வாழ்வை வளப்படுத்துதல், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான சேவைகளை அளித்தல், கழிவுநீரை மறு சுழற்சிக்கு உட்படுத்துதல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டு செயல்படுத்தப்படுகின்றன. மேலும், நகராட்சி மற்றும் மாநகராட்சி நிருவாக முறைகளில் கணினி வசதி சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

## அரசின் சாதனைகள்

### குடிநீர் விநியோகப் பணிகள்

★ கடந்த 4 ஆண்டுகளில், நகர்ப்புறப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிட ரூ.16.16 கோடி மதிப்பீட்டில் 1,635 பணிகள் எடுக்கப்பட்டு, அதில் 1,269 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

### புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

★ தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கரூர், கும்பகோணம், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.575.30 கோடி, மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### வெள்ளநீர்த் தேக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கை

★ வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, சென்னையைச் சுற்றியுள்ள 8 நகராட்சிகளில் புதிய வடிநீர்க் குழாய்கள் அமைத்தல், ஏற்கெனவே பழுதடைந்துள்ள சாலைகளைச் சரிசெய்தல் ஆகிய 175 பணிகள், ரூ.31.12 கோடி செலவில் உடனடி நிவாரண நடவடிக்கையாக அடிப்படை வசதி கட்டமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் முடிக்கப்பட்டுள்ளன.

★ பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம், நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புறக் கூலி வேலைவாய்ப்புத் திட்டம், தேசியக் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ரூ.213 கோடியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### நகராட்சி நிருவாகத்தில் கணினி செயல்பாடுகள்

★ நகராட்சி செயற்பாடுகளைக் கணினி மூலம் செயல்படுத்த 18 வகையான கணினி மென் பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவைபிறப்பு, இறப்பு, சொத்துவரி, குடிநீர்க் கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனம், கட்டட வரைபடி ஒப்புதல் மற்றும் பல பணிகளும் இவற்றுள் அடங்கும். 18 வகையான மென்பொருள்களில், 14 வகையான முக்கிய மென்பொருள்களின் பயன்பாடு அனைத்து நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் செயல்முறைப்படுத்தப் பட்டுள்ளன.

★ நவம்பர் 2003இல் அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சி நிருவாகத் துறை மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களின் இயக்குநரகம் ஆகியவற்றிற்கு கூடுதலாக கணினிகள், மென் பொருள்கள், கணினி உதிரி பாகங்கள் ரூ.17 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. இவற்றினை நிறுவி, செயலாக்கும் பணி, மார்ச் 2004இல் முடிக்கப்பட்டுள்ளது.




### ஒருங்கிணைப்புச் சுகாதார வளாகங்கள்

★ 'வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா' திட்டத்தின் கீழ் 525 ஒருங்கிணைப்புச் சுகாதார வளாகங்கள் ரூ.52.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

### குடிசைப் பகுதிகளுக்குச் சுகாதாரக் கழிப்பறைகள்

★ குடிசைப் பகுதிகளுக்கு 905 சுகாதாரக் கழிப்பறைகள் ரூ.36.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட நடவடிக்கைகள் மேற்கொண்டு அதில் 426 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### நகராட்சி – மாநகராட்சிகளில் 11–ஆவது நிதிக்குழுவின் கீழ் சாலை வசதிப் பணிகள்

★ 11ஆவது நிதிக்குழுத் திட்டத்தின்கீழ், நகர்ப் புறங்களில் ரூ.113.56 கோடி மதிப்பீட்டில் 1,592 கி.மீ. நீளத்திற்கான சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

★ 2001–02, 2002–03, 2003–04ஆம் ஆண்டுகளில் 11ஆவது நிதிக்குழு பரிந்துரையின் கீழ் விடுவிக்கப் பட்ட ரூ.107.38 கோடி மானியம், நகராட்சி மற்றும் மாநகராட்சியிலுள்ள கல்வி, சுகாதாரம், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்டது.

### மழைநீர் சேகரிப்பு

★ இந்திய நாட்டிற்கே முன்னோடியாய் நிறைவேற்றப் பட்டுவரும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ், 7,647 அரசுக் கட்டடங்கள், 23,15,520 தனியார் வீடுகள், வணிக வளாகங்கள், 36,977 நீராதாரங்கள், 2,546 சாலையோரங்கள், 99 நடைபாதைகள், 2,335 தெருக்கள், 409 மாநகராட்சி, நகராட்சிக் குளங்கள், 365 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் உட்பட 23,65,898 இடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### வரலாறு காணாத வகையில் நகர்ப்புறங்களில் குடிநீர் வசதி

★ கடந்த 4 ஆண்டுகளில், 176 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.1,740 கோடி மதிப்பீட்டில் 58 நகரங்கள் மற்றும் 10,428 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 88.26 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், ரூ.804 கோடி மதிப்பீட்டில் தனி மின் விசைத் திட்டங்களின் மூலம் 16,089 குடியிருப்புகளில் வாழும் 40 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ ரூ.202 கோடி மதிப்பீட்டில், 33,821 கையிறைப் பான்கள், தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறிய மின்னிறைப்பான் திட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.

★ ரூ.20 கோடி மதிப்பீட்டில், 19,833 அரசுப் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

★ 167 நகரங்களில் வாழும் 50.46 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.534 கோடியில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### சென்னைக்கு நிரந்தரக் குடிநீர் வசதி

★ சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கி, சென்னை நகர மக்களின் தினசரி குடிநீர்த் தேவையான 180 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கும் பொருட்டு, ரூ.720 கோடி மதிப்பீட்டில், சென்னை குடிநீர் வழங்கல் மேம்பாடுத் திட்டம் அரசால் உருவாக்கப்பட்டு சென்னை நகர மக்களுக்கு தொடர்ந்து குடிநீர் வழங்கி வருகிறது.

### சிறப்புச் சிற்றூராட்சிகளில் சிறப்பான பணிகள்

★ 4 ஆண்டுகளில், ரூ.704 கோடி மதிப்பீட்டில், சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள், கழிப்பிடங்கள் போன்ற 92,774 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கிராமப்புறப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### டி.என்.டி.எப்.

★ கிருஷ்ணா நதிநீர் திட்டத்தின் கீழ் அருகாமையிலுள்ள 12 பகுதிகளான பம்மல், மீனம்பாக்கம், அனகாபுத்தூர் கௌல் பஜார், பொழிச்சலூர், புழுதிவாக்கம், உள்ளகரம், ராமாபுரம், வளசரவாக்கம், மதுரவாயல் , போரூர் மற்றும் ஆலந்தூர் பகுதிகளுக்கு ரூ.26.54 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டு பணி நிறைவேற்றப்பட்டுள்ளன.



★ அனைத்து நகராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சி நிருவாகத்துறை மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களின் இயக்குநரகம் ஆகியவை ரூ.17 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**வளசரவாக்கம் குடிநீர்த் திட்டம்**

★ டி.என்.டி.எப். ரூ.21.92 கோடி நிதியுதவியுடன் 12 அருகாமையிலுள்ள ஊராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்படும் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

**சென்னை நகர நதிகள் பாதுகாப்புத் திட்டம்**

★ தமிழக அரசு, மத்திய அரசுடன் இணைந்து நகரின் குடிநீர் வழிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கவும் மேலும் அவற்றைச் சுத்தமாக வைத்திருக்கவும் ரூ.1,700 கோடி செலவில் சென்னை நகர நதிகள் பாதுகாப்புத் திட்டத்தை வகுத்தது. மத்திய சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையும், தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு நிறுவனம் நீர் வழிகளில் கழிவுநீர் கசிவைத் தடுப்பதற்கு தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்திலிருந்து ரூ.491.52 கோடியை மானியமாக அளித்துள்ளன. இத்துடன் சென்னைக் குடிநீர் வாரியத்தின் நிதி ரூ.228.63 கோடியையும் சேர்த்து ரூ.720.15 கோடி செலவில் திட்டப் பணிகள் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**கடல்நீரை நன்னீராக்கும் நிலையம்**

★ சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பருவமழை பொய்த்து வருவதால், எல்லாக் காலங்களிலும் குடிநீர் வழங்குவதற்காக, கடல்நீரை நன்னீராக்கும் நிலையம் அமைக்க அரசு முடிவெடுத்து இதற்கென மீஞ்சூர் அருகே 60 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் அமைக்க ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன.

**இணைய தளத்தின் மூலம் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி மற்றும் கட்டணங்கள் வசூல்**

★ சென்னைக் குடிநீர் வாரியம், தனது 10 பகுதி அலுவலகங்கள், 70 பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் உள்ள வசூல் மையங்களில், கணினி அமைப்பின் மூலம் குடிநீர், கழிவு நீரகற்று வரி மற்றும் கட்டணங்களை வசூல் செய்கிறது. இதுதவிர, 22 கனரா வங்கி கிளைகள் மூலமாகவும் வசூலிக்கப்படுவதுடன் ஐசிஐசிஐ வங்கியின் இணையதள ONLINE மூலமாக பற்று அட்டை கொண்டு வரிகள் மற்றும் கட்டணங்களைக் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், செப்டம்பர் 2003 முதல் ஜனவரி 2005 வரை ரூ.4.53 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரம் அளித்தல்**

★ சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் I திட்டத்தில் வரி இல்லாத இணைப்புப் பத்திரங்கள் வெற்றி அடைந்ததால், வாரியம், 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவு சுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஒரு பகுதி நிதிக்கு இந்திய அரசின் ஒப்புதலுடன் ரூ.50 கோடி வரி இல்லாத முனிசிபல் இணைப்புப் பத்திரங்கள் வழங்குவதற்கு 2004-2005இல் திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ இந்தியாவிலேயே முதன்முதலாக பட்டியல் மற்றும் வசூல் ஆகியவற்றிற்கு இஆர்எஸ் சிப்பங்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தில்தான் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. கணக்குகள், மின்கம்பி தகவல் தொழில்நுட்பத்தில் இயக்கப்படுகின்றன.

**இந்தியா மார்க் 2 பம்புகள்**

சென்னை மாநகரில், தேவைப்படும் வெவ்வேறு இடங்களில் 1,258 எண்ணிக்கையிலான இந்தியா மார்க் 2 பம்புகள் வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றுடன் ஆழ்துளைக் கிணறுகள் கட்டுமானம் ஆகியவை ரூ. 6 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**குடிநீர்த் தொட்டிகள் நிறுவுதல்**

ரூ.3 கோடி தோராயமான செலவில், 2,000 எண்ணிக்கையிலான HDPE பிளாஸ்டிக் தொட்டிகள் வாங்கப்பட்டு சென்னை மாநகரின் வெவ்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகளின் செயல்பாட்டினாலும் மற்றும் ஆதாரங்கள், விநியோகம் மற்றும் தொடர்ந்த முறையில் நீர் பகிர்மானத்தினாலும் அனைத்துக் குடியிருப்புவாசிகளுக்கும் சரிவிகித குறைந்தபட்ச அளவு நீர் வழங்குதல் உறுதி செய்யப் பட்டுள்ளது.

★ ★ ★

# கிராம முன்னேற்றத்தில் ஊரக வளர்ச்சித்துறை

இந்தியாவின் இதயம் கிராமங்களில் உள்ளது என்றார் மகாத்மா காந்தியடிகள். நாட்டின் பெரும் பகுதியாகத் திகழ்கின்ற ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு, வாழ்கின்ற இடம் வளமானதாகவும், சுகாதாரமாகவும் இருக்க வேண்டியது அவசியம். கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் தன்னிறைவு பெற்று விளங்குகின்றன.

ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தையும், கிராமப்பகுதிகளில் சாலை வசதிகள், மின் வசதி, தெருவிளக்குகள் வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி, கிராமங்களை முன்னேற்ற "நமது கிராமம்" எனும் திட்டத்தினையும் செயல்படுத்தி, தமிழகத்தை வளமான பாதையில் வழி நடத்தி செல்கிறார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்.

இது தவிர, வறுமை ஒழிப்பு, ஊரகக் குடியிருப்பு, குடிநீர் ஊருணிகளைப் புனரமைத்தல், சுகாதார மேம்பாடு, வேலைக்கு உணவுத் திட்டம், வீட்டுவசதி உள்ளிட்ட ஏராளமான பணிகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளை கிராமங்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் கிராம ஊராட்சிகளைக் கணினிமயமாக்கல், செல்லிட தொலைபேசிகள் வழங்கல் என புத்தாக்க நடவடிக்கைகளும் செயல்படுத்தப்படுகின்றன.

**நான்காண்டு சாதனை விவரங்கள்**

**"நமது கிராமம்" – கிராம வளர்ச்சித் திட்டம்**

★ அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் செயல்படுத்தி கிராமங்களின் தரத்தை முன்னேற்றும் வகையில், ரூ.200 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிந்தையில் உதித்த திட்டமான "நமது கிராமம்" திட்டம் உருவாக்கம்.

**கிராம ஊராட்சிகள் கணினி மயம்**

★ ரூ.10.37 கோடி செலவில் 1,113 கிராம ஊராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும், 29 உதவி இயக்குநர் அலுவலகங்களும், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரகமும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**மாதிரி கிராம பயிற்சி மையங்கள்**

★ மாதிரி கிராம பயிற்சி மையத் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்டம் அரண்மனை புதூர் கிராம ஊராட்சித் தலைவருடன் வீடியோ கான்பரன்சிங் நிகழ்ச்சியில் உரையாடி தொடங்கி வைத்தார்கள். கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் மற்றும் சிறந்த செயல்பாடுகள் குறித்த பகிர்வுகளுக்கு உதவிடும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மின்னணு தொடர்புகள் தேசிய அளவில் சிறந்த நடவடிக்கைகளாக உருவாக்கப்பட்டுள்ளன.



**ஊரகப் பகுதிகளில் எரிசக்தி திறன் மிகுந்த அமைப்புக்களை ஏற்படுத்துதல்**

★ தமிழகத்தில் புதுப்பிக்கதக்க எரிசக்தித் திட்டத்தின் கீழ், ஊரக வளர்ச்சித்துறை மூலம் 11 எரிசக்தி கலன்கள், 1,274 கழிப்பறையுடன் இணைந்த கரிம வாயுக் கலன்கள், 1,587 கரிம வாயுக் கலன்கள், 3,003 சூரிய ஒளியில் இயங்கும் தெருவிளக்குகள், 304 சூரிய ஒளியில் செயல்படும் வீட்டு மின் விளக்குகள் மற்றும் 22 சூரிய ஒளியில் இயங்கும் பம்புகள் போன்றவற்றை செயல்படுத்தி, தமிழக அரசு, தேசிய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது.

**முழுச் சுகாதாரத் திட்டம்**

★ **முழுச் சுகாதாரத் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 28 மாவட்டங்களில், திட்டச் செயலாக்கத்திற்கு மத்திய அரசின் அனுமதி பெற்று, அதன்படி நாட்டிலேயே அதிக மாவட்டங்களில் முழுச் சுகாதாரத் திட்டத்தினைச் செயலாக்கும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.**

**மழைநீர் சேகரிப்பு**

★ ஊரகப் பகுதிகளில், 66 இலட்சத்து 61 ஆயிரத்து 965 கட்டடங்களில், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, 1,36,026 திறந்தவெளி மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**ஊருணிகள் சீரமைப்பு**

★ கிராமப்புறங்களில் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் வகையில், 246 பழமையான ஊருணிகள் ரூ.7.38 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

**நெசவாளர்கள் துயர்துடைக்க சிறப்புத் திட்டம்**

★ 13 மாவட்டங்களில் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்த சுமார் 25,000 நெசவாளர் குடும்பங்களின் துயர்துடைக்க ரூ.25 கோடி மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

★ உடல் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, இராமநாதபுரம், கோவை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சுய தொழில் மேம்படுத்திட ரூ.8.11 கோடி அளவில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



**மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி**

★ ரூ.66.71 இலட்சம் செலவில், 95,293 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

★ நிலத்தடி நீரை மேம்படுத்தும் நோக்கில், ரூ.124 கோடியில் 12,398 கிராமக் குளங்கள் பல்வகை பயன்பாட்டிற்கென மேம்படுத்தப்பட்டுள்ளன.

**மரபு சாரா எரிசக்தி மூலம் செயல்பாடுகள்**

★ சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தும் திட்டத்தின் கீழ் 1,219 கி.மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுடன் கூடிய தார்ச்சாலை மற்றும் 3,090 சூரிய ஒளியால் இயங்கும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும், 1,274 தனி நபர் கழிப்பிடங்கள் சாரா எரிவாயுக் கலன்களுடன் இணைக்கப்பட்டன.

**வேலைக்கு உணவுத் திட்டம்**

★ சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ.1,153.10 கோடி மதிப்பீட்டில், 2,87,960 பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் வாயிலாக 12.76 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டன.

★ வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு கூலியாக 5 இலட்சம் மெ.டன் அரிசியும், ரூ.85.48 கோடி ரொக்கமும் வழங்கப்பட்டன.

★ ரூ.83.57 கோடியில், 13,928 கதிரடிக்கும் நெல் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ ரூ.128.72 கோடியில், 12,872 மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்காக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**தொகுப்பு வீடுகள்**

★ ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டுகளில் ரூ.450.28 கோடி செலவில், 1,49,838 புதிய தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. ரூ.78.94 கோடி மதிப்பீட்டில் 75,201 கச்சா வீடுகள் மேம்பாடு செய்யப்பட்டன.

★ பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.90.91 கோடி மதிப்பீட்டில், 26,298 வீடுகள் கட்டித் தரப்பட்டன.

**பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

★ பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 4,42,531 குடும்பங்கள் பயன்பெறும் வகையில், 1,76,672 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.80.61 கோடி மதிப்பிலான சுழல்நிதியும், 3,19,747 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 27,591 சுயஉதவி குழுக்களுக்கு ரூ.106.45 கோடி மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய பொருளாதார உதவிகளும் வழங்கப்பட்டு, அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்**

★ ரூ.294 கோடியில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான 13,064 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.589.38 கோடியில், 34,221 பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள்**

★ 12,422 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், ரூ.101.55 கோடி மதிப்பீட்டில் 5,726 பல்வேறு அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ ★ ★

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

சமுதாயத்தில் நலிவுற்ற நிலையில் வாழும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி அரவணைத்துப் பாதுகாத்து வருகிறது தமிழக அரசு.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உன்னத நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுகின்றன. கல்வி உதவிகள், வேலைவாய்ப்பு வசதிகள், பொருளாதார உதவிகள் போன்ற வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப் படுகின்றன.

ஆதிதிராவிட மாணவிகளின் கல்வியறிவு வளர்ச்சி பெற வேண்டும் என்னும் உயரிய நோக்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயிலும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் அம் மாணவிகள் கல்வி கற்றலை நிறுத்திவிடாமல் தொடர்ந்து படித்து தம் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.



இலவசப் பாடநூல்கள், சீருடைகள், தாட்கோ மூலம் வீட்டுவசதி, உயர்கல்விக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள், விடுதி வசதி என அனைத்துவித வசதிகளும் ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு செய்து தரப்பட்டுள்ளன.

### அரசின் சாதனைகள்

### உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை

* 2002–2003ஆம் ஆண்டுமுதல், கல்விக் கடன் உதவித்தொகைத் திட்டம் மானியமாக மாற்றப்பட்டு, உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை என வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ரூ.22.59 கோடி மதிப்பில், 32,156 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ், ரூ. 91.50 இலட்சம் செலவில், 4,883 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
* பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, மருத்துவத் துறை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேற்படிப்புகள் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் அதிக அளவில் பயனடைந்திடும் வகையில், மேற்படிப்புப் பயின்றிட ஏதுவாக உரிய நிதி உதவிகளைப் பெறும் வகையில், விதிமுறைகள் எளிதாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

### பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம்

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்களின் கல்வியை ஊக்குவிக்கவும், இடை நிற்றலைத் தடுத்துத் தொடர்ந்து கற்றிடும் வகையிலும், 3–ஆம் வகுப்பிலிருந்து 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 60,000 மாணவிகள் ஆண்டொன்றிற்கு தலா ரூ.500 வீதமும், 6–ஆம் வகுப்பு கல்வி பயிலும் 30,000 மாணவிகள் ஆண்டொன்றிற்கு ரூ.1,000 வீதமும் ஊக்கத் தொகை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

### இலவச மிதிவண்டி

* தொலைதூர இருப்பிடங்களிலிருந்து கல்வி பயில வரும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகள் இடைவெளி விடாமல் தொடர்ந்து பயில்வதை ஊக்குவிக்கும் அடிப்படையில், இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சிந்தனையில் உருவான இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.31.32 கோடி செலவில் 2,03,566 மாணவிகள் இதுவரையில் பயனடைந்துள்ளனர்.

### நலவிடுதிகள்

* ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்கள் நலனுக்காக ரூ.155.30 கோடி செலவில் 493 விடுதிகள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டு, 264 விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. மற்றவை பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

### அறிவியல் ஆய்வுக்கூடங்கள்

* கடந்த நான்காண்டுகளில், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள், ரூ.3.43 கோடி மதிப்பில் கட்டப்பட்டு மாணவ/மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

### ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை

* ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புப்

பொதுத் தேர்வுகளில் அதிக அளவில் தேர்ச்சி யடைந்திடும் வகையில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 1,110 ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**இலவச வீட்டுமனை**

✶ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் திட்டத்தின் கீழ் 56,805 நபர்களுக்கு ரூ.14.78 கோடி செலவில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**இலவச வீடுகள்**

✶ ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், ரூ.54.10 கோடி செலவில் 66,642 நபர்களுக்கு இலவச வீடுகள் மற்றும் கச்சா வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

✶ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில் மயானம் மற்றும் மயானப் பாதைகள் அமைத்துத் தருவதற்காக ரூ.200.49 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**தாட்கோ நிறுவனத்தின் சாதனை**

✶ தாட்கோ நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, மானியத்துடன் கூடிய வங்கிக் கடன், சிறு–குறு விவசாயக் கடன் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் தொழில் தொடங்கும் வகையில், 5,96,949 நபர்களுக்கு, ரூ.527.61 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**பழங்குடியினர் நலத்துறையின் மூலம் நான்காண்டுகளில்...**

✶ ரூ.2.95 கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டம் வெள்ளிமலையில் பழங்குடியினர் மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது.

✶ கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.49.54 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி மின்வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

✶ பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கு சாலை, குடிநீர், மின்வசதிகள் போன்றவை ரூ.752.77 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளன.

✶ ரூ.150 இலட்சம் மதிப்பில், 2 மாணவர் விடுதிகளும் மற்றும் 9 மாணவியர் விடுதிகளும் கட்டப்பட்டுள்ளன.

✶ ஒவ்வொரு ஆண்டும், பழங்குடியினர் நல பொருளாதார மற்றும் அடிப்படைக் கட்டுமான வசதிகளுக்காக ரூ.323.32 இலட்சம் செலவில் பழங்குடியினர் துணைத்திட்டத்தின் சிறப்பு மைய நிதியாகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



✶ ரூ.372.75 இலட்சம் செலவில் பழங்குடியினர்களுக்கு வீடுகள், சாலைவசதி, குடிநீர் வசதி மற்றும் மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

✶ உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில், ரூ.120 இலட்சம் மதிப்பில், ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

✶ உதகையில், பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.106.05 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

✶ ஆதிதிராவிடர் மற்றும் அரசின் உண்டி உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கு ரூ.6.21 கோடி மதிப்பீட்டில் பாடப்புத்தகங்கள் வழங்கியதில் 10,31,736 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

✶ ரூ.5.86 கோடி மதிப்பீட்டில் குறிப்பேடுகள் வழங்கியதில் 9,21,560 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

✶ **பொதுப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்காக இலவசமாக அரசுப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில், ரூ.10.79 கோடி செலவில் 12,17,998 மாணவ, மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர்.**

✶ ரூ.29.94 கோடி செலவில் பொதுப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு குறிப்பேடுகள் வழங்கியதன் மூலம், 47,45,650 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

✶ **ஆதிதிராவிடர் மற்றும் அரசின் உண்டி உறைவிடப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் 13,38,612 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 16.05 கோடி செலவில் இலவசமாகச் சீருடைகள் வழங்கப் பட்டுள்ளன.**

✶ தாட்கோ மூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, ரூ.481 கோடி செலவில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள், சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள், ஏழை – எளியவர்களுக்கு நிலம் வழங்குதல், சுகாதாரப் பணியாளர்கள் மறுவாழ்வு அமையும் வகையில் தனிநபர் கடன் போன்ற நலத்திட்டங்கள், 7,19,146 ஆதிதிராவிட மக்கள் பயனடையும் வகையில் நிறைவேற்றப் பட்டுள்ளன. ✶

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

சமூகநீதியைப் பேணுவதில் முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்கு ஏராளமான உதவிகளை தமிழக அரசு செய்து வருகிறது.

இடஒதுக்கீட்டைப் பேணுதல், மாணவர் விடுதிகளுக்குக் கட்டடம் கட்டிக்கொடுத்தல், கல்வி உதவித்தொகை வழங்குதல், இலவசத் தொழிற்கல்வி, இலவசத் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் வழங்கல், வேலைவாய்ப்புப் பயிற்சி, இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் என பல்வகைப் பயன்களையும் பெறும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பிற்படுத்தப் பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தினார்கள்.

சிறுபான்மையின ஏழை மக்கள் பயன் பெறும் வண்ணம் தர்காக்களில் அன்னதானத் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்து சிறப்புற நடத்தி வருகிறார்கள். மேலும், உலமா ஒய்வூதியத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## அரசின் சாதனைகள்

### மாணவ – மாணவியர் விடுதிகள்

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்களுக்காக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் துறைகளால் நடத்தப்படும் 972 விடுதிகளில், 770 விடுதிகள் அடிப்படை வசதிகளின்றி தனியார் கட்டடங்களில் இயங்கி வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில், 312 விடுதிகளுக்கு கட்டடம் கட்டப்படுகின்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு 202 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 110 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை தவிர சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி 33 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2005–2006ஆம் நிதியாண்டில், ரூ.100 கோடி செலவில் 318 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.



* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு மின்வசதி, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் ரூ.1.24 கோடி செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

### மாணவ – மாணவியர் விடுதிகளில் தரமான உணவு

* பள்ளி மாணவ/மாணவியர் விடுதிகளில் வழங்கப் பட்டு வரும் உணவின் தரத்தை மேம்படுத்த மாதாந்திர உணவுக் கட்டணம், 1.10.2001 முதல் ரூ.225லிருந்து ரூ.300 ஆக ரூ.2.17 கோடி கூடுதல் செலவில் உயர்த்தப்பட்டது. அரசால் அங்கீகரிக்கப் பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கியுள்ள

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்கள் உணவுக் கட்டணம் 1.6.2004 முதல் ரூ.150லிருந்து ரூ.200 ஆக உயர்த்தப்பட்டு 1,920 மாணவர்கள் பயனடையும் வகையில் ரூ.9.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதி**

* கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு குடிநீர் வசதி, கழிப்பறை மற்றும் மின்வசதி அளிக்கும் மிகுவிரைவு திட்டத்தின் கீழ், ரூ.3.79 கோடி செலவில் அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 2005 – 2006 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும் ரூ.20.11 கோடி செலவு செய்யப்படும்.



* இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்று உருவாகியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ரூ.10.25 கோடி செலவில் சாலை, தெருவிளக்கு, குடிநீர் மற்றும் வடிகால் போன்ற அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**மகளிர் சிறுதொழில் தொடங்க கடன் உதவி**

* தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரைச் சேர்ந்த பயிற்சி பெற்ற 5,000 பெண்கள் சிறுதொழில் தொடங்க, ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 வீதம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5 கோடி கடன் உதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**வயது வரம்பு அதிகரிப்பு**

* அரசுப் பணியில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியுடைய பிற்படுத்தப்பட்டோருக்கு அதிகபட்ச வயது வரம்பு 30–லிருந்து 32–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

**விடுதிகளில் விளையாட்டு உபகரணங்கள்**

* ஒவ்வொரு விடுதிக்கும் ரூ.1,000 வீதம் ரூ. 9.72 இலட்சம் செலவில் 972 விடுதிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

**விடுதிகளில் உள்ள நூலகங்களுக்கு நூல்கள்**

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினரால் நடத்தப்படும் ஒவ்வொரு விடுதிக்கும், ரூ.3,000 வீதம் ரூ. 29.16 இலட்சம் செலவில் 972 விடுதிகளில் உள்ள நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2004–2005இல் 59 பிற்படுத்தப்பட்டோர், 29 மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 4.40 இலட்சம் செலவில் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

* மலைப் பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு ரூ.17 இலட்சம் செலவில் இரண்டு அடுக்கு மரப்படுக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் குறைந்த வட்டியில் மகளிருக்குக் கடன்**

* தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், இதுவரை, 76,218 மகளிருக்கு சிறுதொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.15.25 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

* ரூ.1.15 கோடி செலவில் 300 விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**இலவச தையல் இயந்திரம்**

* பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதாரத்தை மேம்படுத்த இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 3,189 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### இஸ்லாமிய இளைஞர்களுக்கு கடனுதவி

* ✶ 1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க பயிற்சி அளிக்கப்பட்டு, இதில் 208 இளைஞர்களுக்கு கடனுதவியாக ரூ.68.07 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* ✶ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 2004–05இல் ரூ.1.86 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
* ✶ சிறுபான்மையினர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000க்கு மேற்படாமல் சிறு கடன் வசதி திட்டத்தின் மூலம் 231 நபர்களுக்கு ரூ.23.10 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### இலவச மிதிவண்டிகள்

* ✶ அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 2,50,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவிகளுக்கு ரூ. 47.36 கோடி செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. 2005–06இல் +1 பயிலும் 1,26,800 மாணவிகளுக்கு ரூ.24.50 கோடி செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படும்.

### மாணவர்களுக்கு உதவித்தொகை

* ✶ பல்வேறு கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் 2003–04இல் 15,20,000 மாணவர்களுக்கு ரூ.79 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டது. 2004–05இல் 13,72,000 மாணவர்களுக்கு ரூ. 86.12 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டது.

### கணினி மயம்

* ✶ அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களும் ரூ.25.52 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.



* ✶ 2004–2005–ஆம் ஆண்டில், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள்/ஆய்வுக் கூடங்கள் கட்ட ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேனி மாவட்டம் உத்தமபுரம் அரசு கள்ளர் மேனிலைப்பள்ளி மற்றும் திண்டுக்கல் மாவட்டம் கொண்டமாநாயக்கன்பட்டி அரசு கள்ளர் மேனிலைப்பள்ளியில் ஆய்வுக்கூடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.
* ✶ 2003–2004 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 தர்காக்களில் நன்கொடையாளர்கள் வழங்கும் தொகை மூலம் உணவு அளிக்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.
* ✶ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இதுவரை ரூ.40 இலட்சம் வழங்கப்பட்டு, சென்னையில் 10,000 சதுர அடி பரப்பளவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.
* ✶ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மசூதிகள் மற்றும் தர்காக்களைப் பழுதுபார்க்க இதுவரை ரூ.210 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* ✶ தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் நிருவாகச் செலவுகளுக்காக 2004–2005ஆம் ஆண்டில் ரூ.40 இலட்சம் அரசால் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.
* ✶ தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் நிருவாகச் செலவுகளுக்காக 2004–2005ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* ✶ உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் பேஷ் இமாம், அரபு ஆசிரியர் ஆகியோராகப் பணியாற்றியவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1,804 பயனாளிகளுக்கு 2004–05 ஆம் ஆண்டில் ரூ.1.20 கோடி வழங்கப் பட்டுள்ளது.
* ✶ முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கம், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இயங்கி வருகிறது. இச்சங்கம் திரட்டும் நிதிக்கு இணையான தொகையைத் தமிழக அரசு மானியமாக வழங்குகிறது. 2004–2005ஆம் ஆண்டிற்காக ரூ.3,82,900 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

✶ ✶ ✶

# கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை



விவசாயப் பெருமக்களுக்கு உதவியாக இருப்பதாலும் உழவுத் தொழிலின் ஓர் அங்கமாக விளங்குவதாலும் தான் கால்நடைகள் ''செல்வம்'' என்று பெருமைப்படுத்தி அழைக்கப்படுகின்றன.



வேளாண் துறையில் புதிய தொழிற்கருவிகள் வந்துவிட்ட போதிலும் கால்நடைகளின் பங்கு இன்னும் முதன்மையாகவே கருதப்படுகின்றது. இத்தகைய கால்நடைகளின் நலன் பேணுவதே கால்நடைப் பராமரிப்புத் துறையின் பணியாகும்.

கால்நடைகள் அபிவிருத்தி, கோழியின வளர்ச்சி மற்றும் பால் உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களைத் தீட்டி கால்நடை மருத்துவப் பணிகளுக்கு ஊக்கமளிக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு செயல்திட்டங்கள் வழியாக இத்துறைக்குப் புத்துயிர் அளித்துள்ளார்கள்.

கால்நடைகளைப் போலவே மீன்வளமும் ஒரு செல்வமாகும். விதைக்காது விளையும் கழனி என்பது போல, அதிக முதலீடில்லாமல் இலாபம் ஈட்டித் தரக்கூடியது மீன்வளம் ஆகும். உள்நாட்டு மீன்வள உற்பத்தியைப் பெருக்க மீன் பண்ணைகள், இறால் பண்ணைகள் ஏற்படுத்துதல், மீனவர் நலன் காக்க நிவாரண உதவிகள், மானிய வசதிகள், வீட்டு வசதி ஏற்படுத்தித் தருதல் என வாழ்வாதார ஒத்துழைப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மீன்வளத்துறை மூலம் நல்கி வருகிறார்கள்.

## அரசின் சாதனைகள்

### டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்

★ கால்நடைப் பராமரிப்பு முறைகளில் பயிற்சி அளித்து, இலக்கு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில், டென்மார்க் நாட்டின் நிதி உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 18 மாவட்டங்களில் உள்ள 6,473 ஊராட்சிகளில் 6,410 தொடர்புப் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் மூலம் 1,47,900 இலக்கு விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

### கால்நடை மருத்துவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி

★ பசு மற்றும் எருமையின அபிவிருத்தி குறித்த புத்தாக்கப் பயிற்சி 675 கால்நடை மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு அடிப்படைப் பயிற்சி

★ 147 வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்குப் பசு மற்றும் எருமையின அபிவிருத்தி குறித்த அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 200 கிராமப்புற இளைஞர்களுக்கு, செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

### கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

★ கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில், ரூ.808.32 இலட்சம் செலவில் 19,242 முகாம்கள் நடத்தப்பட்டு 225.13 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

### மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

★ மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு, பணியாளர் பராமரிப்புச் செலவு மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க பல்வேறு பயிற்சிக்கான செலவு போன்றவை ரூ.132.42 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

★ மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் கால்நடைப் பண்ணையில் உள்ள உறைவிந்து வங்கியை வலுப்படுத்தவும், மாவட்டக் கால்நடைப் பண்ணை மற்றும் உதகமண்டலத்தில் நீர்நிலை ஆதாரங்களை

மேம்படுத்தவும், கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் நோய் புலனாய்வுப் பிரிவுகளை மேம்படுத்தவும், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.55.30 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

**தீவனம் உற்பத்தி**

★ கிராமங்களில் உள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு, வேலிகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்றவைகள் ரூ.168.366 இலட்சம் செலவில் 2,725 ஏக்கர் நிலத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இதன் மூலம் 25,500 மெட்ரிக் டன் தீவனம் ஒரு வருடத்திற்கு உற்பத்தி செய்யப்படவுள்ளது. மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் தற்சமயம் 560 ஏக்கரில் 35,980 டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது.

**கால்நடைகளுக்கு மருத்துவம்**

★ வறட்சியின் காரணமாக கால்நடைகள் தொற்று நோய்களினால் பாதிப்புக்குள்ளாகி விவசாயிகளுக்கு ஏற்படும் பெரும் பொருளாதார இழப்பினைத் தடுப்பதற்காக, கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காத்திட, ரூ.170 இலட்சம் செலவில் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

**மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைகள் இலவசமாக வழங்குதல்**

★ 3,000 எக்டேர் நிலப்பரப்பில் பயிர் செய்வதற்கு, இலவசமாக 120 மெட்ரிக் டன் மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைகள் ரூ.24 இலட்சம் செலவில் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

**சுனாமியால் பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை**

★ சுனாமியால் உயிரிழந்த கால்நடை உரிமையாளர் களுக்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்க ரூ.2,80,11,150 ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 4,774 பயனாளிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,74,75,400 வழங்கப்பட்டுள்ளது.

**கால்நடைகள் பெருக்கம்**

★ பகுதி–2 திட்டங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் உறைவிந்து உற்பத்தி நிலையம், கால்நடை மருந்தகங்கள் திறப்பு, புறக்கடை கோழி வளர்ப்பிற்கு கோழிகளை விநியோகித்தல், கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாக நிலை உயர்த்துதல் போன்ற பல்வேறு பணிகள் ரூ.599.72 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகள்**

★ கடந்த நான்கு ஆண்டுகளில், மூன்று பன்முக மருத்துவமனைகள் மற்றும் 306 கால்நடை மருந்தகங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம், தற்போது இந்நிலையங்களின் எண்ணிக்கை 1,323 ஆக உயர்ந்துள்ளது.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், 638.01 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள், 24.64 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம், 994.80 இலட்சம் கால்நடை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி, 545.64 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், 120.77 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ கடந்த நான்கு ஆண்டுகளில், ரூ.123.32 இலட்சம் மதிப்பீட்டில் கோமாரி நோய் தடுப்பூசி கொள்முதல் செய்யப்பட்டு ஏழை விவசாயிகளின் கால்நடைகளுக்குப் போடப்பட்டுள்ளது.

★ செம்மறி ஆடுகளை நோய் தாக்குதலிலிருந்து காக்கும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.40 இலட்சம் செலவில் குடற்புழு நீக்க மருந்துகள் மூலம் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு வருகிறது.

**கால்நடை நலம்**

★ கால்நடைகளுக்கு முழு மருத்துவ வசதி மற்றும் பாதுகாப்பு அளித்ததன் பயனாக, தமிழ்நாட்டில் பால் உற்பத்தி 35.24 இலட்சம் டன்னிலிருந்து 47.53 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. முட்டை உற்பத்தி, 2,919 மில்லியனிலிருந்து 3,784 மில்லியனாக அதிகரித்துள்ளது. இதேபோல் ஒருவருக்கு ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பாலின் அளவானது 173 கிராமிலிருந்து 209 கிராமாகவும், ஒரு வருடத்திற்கு உட்கொள்ளும் முட்டைகளின் எண்ணிக்கை 52 லிருந்து 61 ஆகவும் அதிகரித்துள்ளது.

## பால் பெருக்குத்துறை

**புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள்**

✶ மே 2001 முதல் மார்ச் 2005 வரை, 142 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கிய 825 புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



✶ பால் பெருக்குத்துறையின் கட்டுப்பாட்டில், 31.3.2005 வரை, தமிழகத்தில் இயங்கும் 7,521 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் இலாபத்தில் செயல்படுகின்றன.

#### பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி

* "பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி" என்ற திட்டத்தின் கீழ், 2002–2003 முதல் 2004–2005 நிதி ஆண்டு வரை 142 பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 9,928 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

#### கறவை மாடு வாங்க கடன் திட்டம்

* "ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் 1,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்" கீழ் இதுவரை 14,803 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப் பட்டுள்ளன. 3,02,778 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் இதுவரை 2,79,828 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

#### பால் இணையம்

* இணையம், மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்க அரிய சாதனையாகும். இணையம் ஈட்டியுள்ள ரூ. 34.01 கோடி இலாபத்தில், ரூ.15.37 கோடியினை ஒன்றியங்களுக்கு 2002–2003ஆம் ஆண்டு விலை வித்தியாசமாக இணையம் வழங்கியுள்ளது.

#### பால் விற்பனை

* 2002–2003ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றிற்கு 6.54 இலட்சம் லிட்டராக இருந்த சென்னை மாநகர பால் விற்பனை, விளம்பரம் மற்றும் புதிய வியாபார யுத்திகளினால் 8.08 இலட்சம் லிட்டராக மார்ச் 2005இல் உயர்ந்துள்ளது.

#### வெப்பம் தடை செய்யப்பட்ட பால் விநியோக வண்டிகள் அறிமுகம்

* சென்னை மாநகர பால் விற்பனையில் முதன்முதலாக அனைத்து பால் விற்பனை வழித்தடங்களிலும் $65^0$ வெப்பம் தடை செய்யப்பட்ட பால் விநியோக வண்டிகள் அறிமுகம் செய்யப்பட்டுப் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

#### சிங்கப்பூருக்கு பால் ஏற்றுமதி

* முதன்முறையாக, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தினால் கடந்த 2004ஆம் ஆண்டில் 18,000 லிட்டர் டெட்ரா பால் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் கிடைத்த நல்ல வரவேற்பைத் தொடர்ந்து இதுவரையில் 46,800 லிட்டர் டெட்ரா பால், 1,000 லிட்டர் நெய் மற்றும் 2,750 கிலோ பால் பவுடர் ஆகியவை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.

#### நெய் விற்பனை

* 'ஆவின்' வரலாற்றில், முதன்முறையாக, திருமலை–திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூ.22.82 கோடி மதிப்புள்ள 2,000 டன் நெய் விற்பனை செய்ய அனுமதி கிடைக்கப்பெற்று, இதுவரை 1,400 டன் நெய் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

#### ISO - 9001 தரச்சான்றிதழ்

* தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இரண்டிற்கும் ISO 9001 தரச் சான்றிதழ் பெற்றமை, சாதனைகளில் மைல்கல்லாகும்.

#### சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழா

* சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழாவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 06.07.2003 அன்று தொடங்கி வைத்து, கால்நடை மற்றும் பிராணிகள் குறித்த தகவல்கள் அடங்கிய "தொடுதிரைக் கணினியை" துவக்கி வைத்தார்கள்.

#### வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் திட்டம்

* தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதன்படி 1,113 எக்டேர் தரிசு நிலப்பரப்பில் 5,235 வேளாண் குடிமக்கள் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

#### கலப்பின ஆடுகளை உருவாக்கத் திட்டம்

* நம் நாட்டு வெள்ளாடுகளின் தரத்தினை உயர்த்த ஆப்பிரிக்க போயர் இன ஆடுகளுடன் கலப்பினப் பெருக்கம் செய்து அதிக எடை கொண்ட கலப்பின ஆடுகளை உருவாக்கும் திட்டம் காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

#### பறவையின நோய் ஆய்வகம்

* தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் லெப்டோஸ்பைரோ நோயறி ஆய்வகப் பிரிவானது, ISO - 9001 தரச்சான்றிதழைப் பெற்றது சாதனைகளின் மைல்கல்லாகும்.

* சேலம் மாவட்டம், தலைவாசலில் பறவையின நோய் ஆய்வகம் ஒன்றும், மேல்மருவத்தூரில் கால்நடைப் பல்கலைக்கழக ஆராயச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றும் 2003–இல் தொடங்கப்பட்டுள்ளன.

#### நெருப்புக்கோழி வளர்ப்புப் பற்றிய ஆய்வு

* தமிழ்நாட்டின் பல்வேறு வேளாண் தட்ப வெப்பப் பிரிவுகளில், நெருப்புக்கோழிகளை வளர்க்க உள்ள வாய்ப்புகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.



**ஆட்டுக் கொள்ளை நோயைத் தடுக்க புதிய தடுப்பூசி கண்டுபிடிப்பு**

✶ ஆடுகளைத் தாக்கும் "ஆட்டுக் கொள்ளை நோயைத் (PPR)" தடுப்பதற்காக வீரியம் குறைக்கப்பட்ட தடுப்பூசி கடந்த நான்காண்டு தீவிர ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

✶ நீலநாக்கு மூன்று வகை நோய்க்காரணி தடுப்பூசி தயாரிக்கப்பட்டு இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த்தடுப்பியல் மருத்துவ நிலையத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**மாடுகளில் காசநோய் கண்டறிதல்**

✶ காமா இண்டர்ஃபெரான் அளவீடு முறை மூலம், மாடுகளில் காச நோயினை 100 சதவிகிதம் துல்லியமாகக் கண்டறிதல் உறுதி செய்யப் பட்டுள்ளது.

**கோழிகளைத் தாக்கும் நோயைக் கண்டறிய புதிய முறை**

✶ கோழிகளைத் தாக்கும் நோய்களைக் கண்டறியவும், நோய் எதிர்ப்புத் திறனை அளவிடவும் ஐ.ஜி.எம். எலிசா முறை உருவாக்கப்பட்டுள்ளது.

✶ அப்ளோ நச்சு பி–1 கண்டறிய மறைமுக எலிசா முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

**நுண்ம எதிரி அறியும் சாதனம்**

✶ இந்தியாவிலேயே முதன் முறையாக முட்டை வீழ்ச்சி நோய்–76 நோய் எதிர்ப்புப் பொருளைத் துல்லியமாகக் கண்டறிய தொடர் தொழில்நுட்ப முறைப்படி முட்டை வீழ்ச்சி நோய்–76 தரமான நோய் நுண்ம எதிரி அறியும் சாதனம் கண்டறியப்பட்டுள்ளது.

## மீன்வளத்துறை

**மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம்**

✶ மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தில், 2001–2002ஆம் ஆண்டு மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள், 90 ஆழ்துளைக் கிணறுகள், 4 சமுதாயக்கூடங்கள் கட்ட மொத்தம் ரூ.834 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவற்றுள் 9 கடலோர மாவட்டங்களில் 1,906 வீடுகள் கட்டப் பட்டுள்ளன. 12 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

✶ 2004 – 05 ஆம் ஆண்டில் மாநில அரசின் திட்டத்தின் கீழ் ரூ.1,565 இலட்சத்தில் 4,000 வீடுகள் கடல் மீனவர்களுக்கு கட்டித் தருவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் மேற்கொள்வதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

**சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

✶ கடந்த 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில், சேமிப்பு நிவாரணத் திட்டங்களின் கீழ் 5,55,030 மீனவர்களுக்கு ரூ.57.27 கோடி வழங்கப்பட்டது. 42,992 மீனவ மகளிருக்கு ரூ.3.10 கோடி வழங்கப் பட்டது. 2004–05ஆம் ஆண்டில், ரூ.18.22 கோடி மதிப்பில் 1,64,453 மீனவர்களுக்கும், ரூ.5.72 கோடி செலவில் 49,282 மீனவ மகளிருக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

**மீனவர் குழுக் காப்புறுதித் திட்டம்**

✶ மீனவர் குழுக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 579 பயனாளிகளுக்கு காப்புறுதி நிவாரணமாக ரூ.2,51,27,500/– வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர் மகளிர் காப்புறுதித் திட்டம்**

✶ மீனவர் மகளிர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 120 மீனவ மகளிருக்கு ரூ.17,32,500 வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டம்**

✶ மீனவர் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 123 பயனாளிகளுக்கு ரூ.103.12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

✶ 1.1.2005 முதல் 31.12.2005 ஆண்டுக்கு மீனவர் தனிநபர் விபத்துக்குழுக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 11,420 மீனவர்/மீனவ மகளிர்களுக்கான ரூ.3,99,700 பிரிமியத் தொகையை அரசு செலுத்தியுள்ளது.

**டீசல் மானியம்**

✶ மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் மானிய திட்டத்தின் கீழ், 2004–2005ஆம் ஆண்டுக்கு மைய அரசு ஒரு லிட்டருக்கு ரூ.1.20 பைசாவும் மாநில அரசு ரூ..0.30 பைசாவும் ஆக மொத்தம் ரூ.1.50 மானியமாக வழங்கவுள்ளது. இவ்வாண்டு ரூ.4,57,80,000 மானியத் தொகையாக வழங்கப்படவுள்ளது.

**வெளிப்பொருத்தும்/உட்பொருத்தும் இயந்திரங்கள் வாங்க மானியம்**

✶ கடந்த 3 ஆண்டுகளில், 3,283 உட்பொருத்தும்/ வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் 183 மீன்பிடி வலைகள் ரூ.310.62 இலட்சம் மதிப்பிலான மானியத்தில் வழங்கப்பட்டன.

**இலங்கை கடற்படையினரால் பிடிபடும் தமிழக மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம்**

✶ இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டு இலங்கையில் காவலில் வைக்கப்பட்ட தமிழக மீனவர்

குடும்பங்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 251 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.9,86,270 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கைப் படையால் பிடித்துச் செல்லப்பட்ட 883 மீனவர்கள் மீட்கப்பட்டனர்.

**மீன் இறங்கும் தளங்கள்**

✱ மீன் இறங்கும் தளங்கள் தமிழகத்தில் புன்னைக்காயல், முடசலோடை, ஜெகதாப்பட்டினம், சேதுபாவாசத்திரம், பழவேற்காடு ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம், மண்டபம், சோழியக்குடி, ஆற்காட்டுதுறை ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

**மீன்பிடித் துறைமுகங்கள்**

✱ பழையாறு மீன்பிடித் துறைமுகம் ரூ.10.60 கோடியிலும், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் ரூ.7.50 கோடியும், தேங்காய்பட்டினம் புதிய மீன்பிடித் துறைமுகம் ரூ.39.70 கோடியிலும் அமைக்கப் படவுள்ளன.

**மீனவர் அங்காடி அமைத்தல்**

✱ நீலாங்கரை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய ஆறு இடங்களில் மீனவர் அங்காடிகள் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

**மீனவ மகளிருக்கு மீன்வளர்ப்புப் பயிற்சிகள்**

✱ மீனவ மகளிருக்குக் கூட்டுறவுத் துறை, மத்தியஅரசின் பணியாளர் கல்வி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்ட அலுவலகம் மற்றும் கால்நடை ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் மூலமாக 476 மீனவர் மகளிருக்கு மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்புத் தொடர்பான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**உள்நாட்டு மீனவர்களுக்கு உதவிகள்**

✱ உள்நாட்டு மீனவர்கள் பயனடையும் வகையில் ரூ.15.50 இலட்சம் செலவில் மூன்று மானியத் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன .

**புதிய வலைகள் விநியோகம்**

✱ 25 விழுக்காடு மானியத்தில் புதிய வலைகள் வாங்குவதற்கு ரூ.12.50 இலட்சம் மதிப்பில் 619 உள்நாட்டு மீனவர்களுக்கு மானியம் வழங்கப் பட்டுள்ளது.

**மிதிவண்டிகள் விநியோகம்**

✱ 25 விழுக்காடு மானியத்தில் மிதிவண்டி வாங்குவதற்கு ரூ.2.25 இலட்சம் மதிப்பில் 491 உள்நாட்டு மீனவர்களுக்கு மானியம் வழங்கப் பட்டுள்ளது.

**அலுமினியப் பாத்திரங்கள் விநியோகம்**

✱ 531 மீனவ மகளிருக்கு 50 விழுக்காடு மானியத்தில் அலுமினியப் பாத்திரங்கள் வாங்க ரூ. 0.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த மீன்வளத்தினைப் பிரபலப்படுத்தும் திட்டம்**

✱ மீன் வளர்ப்போரை ஊக்குவிக்க வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கின்ற குளம் மற்றும் குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன்வளத்தினைப் பிரபலப்படுத்தும் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 800 எக்டேர் நீர்ப்பரப்பில் மீன்வளர்ப்பு அபிவிருத்தி செய்திட அரசு மானியமாக ஒரு எக்டேருக்கு ரூ.1,875 வீதம் வழங்கியுள்ளது.

**குளிர்பதனப் பெட்டிகள் விநியோகம்**

✱ 2003–2004ஆம் ஆண்டில் மீன்விற்பனை செய்வோருக்கு 250 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.5 இலட்சம் மதிப்பில் அரசு மானியமாக தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம் மூலம் வழங்கும் திட்டத்தில் இதுவரை 210 குளிர்பதனப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தருதல்**

✱ உள்நாட்டு மீனவர்களுக்கு 500 வீடுகள் கட்டப்பட்டு வழங்கும் திட்டத்தின்கீழ் 404 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சேத்துப்பட்டில் மாநில அளவிலான ஆராய்ச்சிக் கூடம்**

✱ 2002–2003ஆம் ஆண்டில் நன்னீர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி செய்ய மாநில அரசின் 25 சதவிகித பங்கும், மத்திய அரசின் 75 சதவிகித பங்குமான ரூ.33.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் நீர் மற்றும் மண் ஆராய்ச்சி பரிசோதனை உபகரணங்கள் வாங்கப்பட்டு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் சேத்துப்பட்டில் மாநில அளவிலான ஆராய்ச்சிக் கூடம் கட்டப்படவுள்ளது.

**மீன்பிடிஇடு பொருட்கள் வழங்குதல்**

✱ 2001–2002, 2003–2004 மற்றும் 2004–2005 ஆகிய 3 ஆண்டுகளில் ரூ.14.06 கோடி மதிப்பில் 4,382 மீன்பிடிஇடு பொருட்கள் வழங்கப்பட்டன.

**கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு**

✱ கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 852 இரால் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

**மீனவ மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடு**

✱ தமிழகத்தில் முதல் முறையாக புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராமிய குளங்களில் சுய உதவிக் குழுக்களின் மூலம் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, 44 சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள 206 மகளிர், 36 கிராமிய குளங்களில் மீன்வளர்ப்பினை மேற்கொண்டனர்.

✱ காஞ்சிபுரம் மாவட்டம் நீலாங்கரை மற்றும் தூத்துக்குடியில் கட்டப்பட்டுள்ள மீனவர் அங்காடிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களால் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. ★★★

# உயர்கல்வித்துறையின் உன்னதப் பணிகள்

எழுத்தறிவித்தவன்
இறைவன் ஆவான்.



– என்ற முதுமொழிக்கேற்ப, கல்வி என்பது உலகத்தினை அறிந்து கொள்வதற்காக மட்டுமன்று; உலகத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முழுமையாக மாற்றி யமைக்கக்கூடிய வலிமை படைத்த கருவியுமாகும். முழுமையான கல்வியை ஒரு நாடு பெற்றிருந்தால் அந்நாடு வல்லரசாகிவிடும். முழுமையான கல்வியினைப் பெற்றிருந்தால் மட்டுமே புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை செய்திட முடியும். உயர்நிலைக் கல்வியால் தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். உயர்நிலைக் கல்வியுடன் தொழிற்கல்வியும் இணைந்து உள்ளதால் அனைத்துத்துறைகளின் வளர்ச்சிக்குத் தூணாக இருப்பது உயர்கல்வியே. இத்தகு உயர் கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற் கல்வியின் வளர்ச்சிக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உன்னதக் கொள்கையின் மூலம் உயர்கல்வித்துறை கடந்த 4 ஆண்டுகளில் உயரியப் பணிகளை ஆற்றி வருகிறது.

## அரசின் சாதனைகள்

### புதிய பாடப்பிரிவுகள் தொடக்கம்

★ அரசு உறுப்புக் கல்லூரிகளில், 41 புதிய இளங்கலை / அறிவியல் பாடப்பிரிவுகள் மற்றும் 68 முதுகலை அறிவியல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

### உறுப்புக் கல்லூரிகள்

★ ஆண்டிபட்டி, சாத்தான்குளம் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### வேலைவாய்ப்பிற்கான ஆலோசனை மையங்கள்

★ வேலைவாய்ப்பு மற்றும் ஆலோசனை வழங்கும் மையங்கள் அனைத்து அரசு உறுப்புக் கல்லூரிகள் மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் நிறுவப் பட்டுள்ளன.

### தமிழகத்தில் கல்லூரிகளின் தர நிர்ணயம்

★ தமிழ்நாட்டில் 134 கல்லூரிகள் தேசியத் தகுதி மற்றும் தரநிர்ணயக் குழுவால் தரநிர்ணயம் செய்யப் பட்டுள்ளன.

### தன்னாட்சிக் கல்லூரிகள்

★ 15 அரசு உறுப்புக் கல்லூரிகள், 45 அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதிக் கல்லூரிகளுக்கு தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது.

### பார்வையிழந்த மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி

★ சென்னை மாநிலக் கல்லூரியில் பார்வையிழந்த மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கும் கணினி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### வயது வரம்பு நீக்கம்

★ 2004–2005–ஆம் கல்வி ஆண்டு முதல், கிராமப்புற மாணவர்கள் பயனடைவதற்காக, பி.இ./பி.டெக். பட்டப்படிப்புகளில் மாணவர்கள் சேர்க்கையின்போது கடைப்பிடிக்கப்பட்டு வந்த வயது வரம்பு மற்றும் கூடுதல் முயற்சிகள் எண்ணிக்கை குறித்த வரம்புகள் நீக்கப்பட்டுவிட்டன.

★ 2004–2005 ஆம் கல்வி ஆண்டு முதல் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு வயது உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

### பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தம்

★ தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஆங்கிலத்தில் நல்ல முறையில் பேசவும், எழுதவும் ஆற்றல் மிக்கவர்களாக ஆக்கும்பொருட்டு பயிற்சி அளிப்பதற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், பிரிட்டிஷ் கவுன்சிலுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் பிரிட்டிஷ் துணை ஹைகமிஷனர்

முன்னிலையில் 25.8.2004 அன்று சென்னையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memorandum of Understanding) கையொப்பமிட்டுள்ளது. வர்த்தக ஆங்கிலக் கல்விச் சான்றிதழ் தேர்வு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் உள்ளூர் தேர்வுக்குழு மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டுத்திட்டம்**

★ உலக வங்கி நிதியுதவியுடன் இந்திய அரசு, பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில், தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காகத் திட்டம் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தில், இரண்டாவது கட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஏழு மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தில் பங்குபெறும் கல்லூரிகளுக்கு (ஐந்து அரசினர் பொறியியற் கல்லூரிகள், மூன்று அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்லூரிகள் மற்றும் மூன்று அரசினர் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்) முதற்கட்டமாக ரூ.63.21 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது.

★ அண்ணா பல்கலைக்கழகம் இணைப்புவகைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டதையடுத்து, நாட்டிலேயே மிகப்பெரிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்கிறது.

★ அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளுக்கு மிகத் தரம் வாய்ந்த விரிவுரைகள் அளிப்பதற்கு, கல்விக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள எடுசாட் (Edusat) எனப்படும் செயற்கைக் கோளை அண்ணா பல்கலைக்கழகம் பயன்படுத்தி வருகிறது.

★ முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைக் கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற வட்டார மையங்களுக்கு வரவழைத்து, அந்நிறுவனங்களில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை அண்ணா பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.

**பல்கலைக்கழகக் கல்வி**

★ அனைத்துத் தரப்பு மக்களும், உயர் கல்வி பெறத்தக்க வகையில், சென்னையில் "தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்", 2002–2003ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, பல்வேறு பாடப்பிரிவுகளில் 20,000 மாணவர்களுடன் இயங்கி வருகிறது.

★ திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பிரிவினர் அதிக அளவில் கல்வி வசதி பெறுவதற்காகத் திருவள்ளுவர் பெயரால், புதிய பல்கலைக்கழகம், 2002–2003 ஆம் ஆண்டில் வேலூரில் தொடங்கப்பட்டுள்ளது. ★

# பள்ளிக் கல்வித்துறை

**தொ**ட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

– திருவள்ளுவர்

நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாததாகிறது. இத்தகு கல்வியை நாட்டில் அனைவரும் பெற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழகத்தில் பள்ளிக்கல்வித்துறை செயல்பட்டு வருகிறது.

2007–க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் 5 ஆண்டுகள் கல்வியை அளிக்கச் செய்தல், 2010க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே தடுத்தல், பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்துதல், குறைந்தபட்சக் கல்வி கற்றலை உறுதி செய்தல் போன்றவை கல்வித்துறையின் தொலைநோக்குக் கொள்கைகளாகும்.

## அரசின் சாதனைகள்

**அனைவருக்கும் கல்வித் திட்டம்**

★ தமிழ்நாட்டில், 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி வழங்கிட, "அனைவருக்கும் கல்வித் திட்டம்" 2001–2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.1,649 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 31.3.2004 வரை , பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள், மேலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல் ஆகியவை ரூ.357.15 கோடி செலவில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

**100 விழுக்காடு அளவில் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி வசதிகள்**

★ 2001–2005 ஆண்டுகளில், 1,112 தொடக்கப் பள்ளிகள், 2,106 நடுநிலைப் பள்ளிகள், 295 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 335 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, தொடக்கப் பள்ளி வசதி மற்றும் நடுநிலைப் பள்ளி வசதி செய்து கொடுத்தல் என்ற இலக்கு 100 விழுக்காடு எய்தப்பட்டுள்ளது.

**நபார்டு வங்கி நிதியுதவியோடு பள்ளிகளில் கூடுதல் வசதிகள்**

★ முதல்முறையாக கல்வித்துறைக்காக 'நபார்டு' வங்கியிடம் நிதியுதவி பெற்று மூன்று கட்டங்களாக 605 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.182.74 கோடி செலவில் பணிகள் தொடங்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளன. மேலும் 549 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்

பள்ளிகளில் ரூ.232.10 கோடி செலவில் இத்திட்டப் பணிகளை நிறைவேற்ற நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

**ஒற்றைச் சாளர முறை**

★ ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

**ஆசிரியர் பயிற்சி**

★ அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று, பாதிக்கப்பட்ட சுமார் 20,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 15,670 மாணவர்கள் பயிற்சியினை முடித்துள்ளனர். அடுத்தகட்டமாக, 3,576 மாணவர்கள் 2004–05ஆம் ஆண்டில் பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றனர்.

**உடனடி மறுதேர்வு**

★ 10 ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொது தேர்வுகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்கள் வரை தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறுதேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

**அதிகபட்ச வயது வரம்பு நீக்கம்**

★ பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களை, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பகம் மூலம் நியமிக்கப்படும் இடைநிலை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பினையும் அரசு நீக்கியுள்ளது.

**மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பார்வையிட தனி இயக்ககம்**

★ மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டு அப்பள்ளிகள் வரையறுக்கப்பட்டுள்ள வசதிகளுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கிராமப்புற நூலகங்கள்**

★ 867 கிராமப்புற நூலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னையில் கன்னிமாரா நூலகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம்**

★ இசை, கலை, பேச்சுத்திறன் போன்றவற்றில் திறமையுள்ள மாணவர்களைக் கண்டறிந்து, அதனை வெளிக்கொணர இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**அறிவியல் தமிழ் பாடம்**

★ தமிழ்நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் தமிழ் கற்பதை உறுதி செய்யும் நோக்குடன் அறிவியல் தமிழ் என்ற பாடம் மாநிலத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12–ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குத் தனி வகுப்புகள்**

★ பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்த கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு தனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடங்கள்**

★ ஆங்கிலத்தில் மாணவர்களின் திறனை மேம்படுத்த 2003–2004ஆம் ஆண்டு முதல் புதியதொரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 600 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடங்கள் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது.

**விருப்பத்திற்கேற்ற தலைப்பெழுத்து**

★ குழந்தைகளின் பெயருக்கு முன்பாக அவர்களுடைய தந்தையின் பெயரின் முதல் எழுத்து மட்டுமே தலைப்பெழுத்தாகக் குறிப்பிட்டு வந்த நடை முறையினை மாற்றி, பெற்றோர்களின் விருப்பப்படி தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும், அதனையடுத்துத் தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் அல்லது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையோ தலைப்பெழுத்தாகப் பயன் படுத்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

**75 விழுக்காடு வருகைப் பதிவு இருப்பின் தேக்கமின்றித் தேர்ச்சி**

★ 2004–2005 ஆம் ஆண்டு முதல், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் அனைத்திலும் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 75 விழுக்காடு வருகைப்பதிவு இருக்கும்பட்சத்தில் தொடக்கக் கல்வியின் தரமும் உறுதி செய்யப்பட்டு, தேக்கமின்றித் தேர்ச்சி அளிக்கப்படும்.

**ஆதரவற்றோர், தெருவோரக் குழந்தைகளுக்குப் பள்ளி சேர்க்கை விதிகள் தளர்வு**

★ பள்ளிகளில் சேராத குழந்தைகள், ஆதரவற்றோர், தெருவோரக் குழந்தைகள், எய்ட்ஸ்/ எச்.ஐ.வி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் மற்றும் பாலியல் சுரண்டலால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளை – பிறப்புச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் போன்றவற்றினை வற்புறுத்தாமல் – பள்ளிகளில் எந்த நேரத்திலும் சேர்ப்பதற்காகச் சேர்க்கை விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

★ தொடக்கப் பள்ளிகளில், மாணவர்கள் இடைநிற்றல் விகிதம், 2001–2002ஆம் ஆண்டில் 16 விழுக்காடு என்ற நிலையிலிருந்து 2003–2004ஆம் ஆண்டில் 8 விழுக்காடாகக் குறைந்தது. 2004–2005ஆம் ஆண்டில் இது 6 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதே போன்று நடுநிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதமும், 2004–2005ஆம் ஆண்டில் 9 விழுக் காடாகக் குறைந்துள்ளது. ★

# மானுடம் போற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை



**நோ**யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

– முதுமொழி

சமுதாயத்தில் மக்கள் திறம்பட உழைத்து, வாழ்வில் முன்னேறி முழு மனிதனாக மாறி, உன்னதமான உலகைப் படைத்திடும் வகையில் மனிதனின் ஆரோக்கியத்தை வளர்த்திடும் வகையில் மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் பெரும் அக்கறை கொண்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசு, தமிழ்நாட்டின் சுகாதார குறியீடுகள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலேயே முதன்மை இடத்தை எட்டத் தொடங்கும் வண்ணம் செயலாற்றி வருகிறது.**

கடந்த நான்கு ஆண்டுகளில், மக்கள் நல்வாழ்வுத் துறையில், நகர்ப்புறங்களுக்கு இணையாக கிராமப் புறங்களிலும் மருத்துவ வசதிகளைப் பெருக்கி, தமிழக மக்களை ஆரோக்கியச் சூழலில் வாழ வழி வகுத்து, தமிழக அரசு, மருத்துவத் துறையில் ஒரு மகத்துவம் புரிந்து வருகிறது.

✶ கன்னியாகுமரியில் 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையுடன் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றது. தேனி மற்றும் வேலூரில் புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது.

✶ கீழ்ப்பாக்கம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய 5 மருத்துவக் கல்லூரிகளில் ஏற்கெனவே 435ஆக இருந்த மாணவர் சேர்க்கை ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் தலா 150 இருக்கைகள் வீதம் 750 ஆக உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது.

✶ சென்னை அரசு மனநலக் காப்பகத்தினை நிலை உயர்த்தும் முகமாக ரூ.1.05 கோடி செலவில் நிருவாகப் பிரிவிற்கானப் புதிய கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

**பார்வையிழப்புத் தடுப்புத் திட்டம்**

✶ அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகளிலும் கண்பார்வை சிகிச்சைக்கென ரூ.1 கோடி செலவில் கண் பார்வை சிகிச்சைப் பிரிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**சென்னை அரசு பொது மருத்துவமனையில் புதிய இரண்டு அடுக்கக கட்டடங்கள்**

✶ சென்னை அரசு பொது மருத்துவமனையில் 7 மாடிகள் கொண்ட இரண்டு அடுக்கக கட்டடமும், நவீன சமையல் கூடமும் ரூ.104.47 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுத் திறக்கப் படவுள்ளன.

✶ தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் ரூ.4.50 கோடி செலவில் சிடிசி அட்லாண்டா ஒதுக்கீடு பெறப்பட்டு நோய் அறியும் வசதிகள் மேம்படுத்தப் பட்டு வருகின்றன.

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

✶ அரசு மாவட்ட, வட்ட, தலைமை மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் உள்ள 119 அறுவை அரங்குகளுக்கு குளிர் சாதன வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

✶ அரசு மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளுக்கு மின்னாக்கி வசதியினை ஏற்படுத்தி தடையற்ற மின் வசதி அளிக்கும் பொருட்டு, 11 மருத்துவமனைகளுக்கு 75 கே.வி.ஏ., 40 கே.வி,ஏ., திறனுள்ள மின்னாக்கிகள் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தேசிய நெடுஞ்சாலையில் விபத்து மற்றும் அவசர மருத்துவ சிகிச்சை வசதிகள்**

* கடந்த 4 ஆண்டுகளில், ஓமலூர், கிருஷ்ணகிரி, கோவில்பட்டி, ஆம்பூர், பெரம்பலூர், திண்டிவனம் மற்றும் விழுப்புரம் ஆகிய மருத்துவமனைகளில் ரூ.7.55 கோடி செலவில், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் புதியதாக உருவாக்கப் பட்டுள்ளன.

**"மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள்"**

* நவீனப் பரிசோதனைக் கருவிகள் கொண்ட "மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள்" திருவண்ணாமலை, விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய 7 இடங்களில் ரூ.21 கோடி செலவில் அமைக்கப் பட்டுள்ளன.
* ஏழை எளிய மக்களின் மகப்பேறுக்காக, பிறந்த குழந்தைகளுக்கு 24 மணி நேரமும் மிகச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க 51 மருத்துவ மனைகளிலும், 11 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும் முழுமையான அவசர மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
* வட்ட மருத்துவமனைகளுக்கு ரூ.1.44 கோடி செலவில் கதிர் வீச்சுக் கருவிகள் வாங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்**

* 12 செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க நிதி ஒதுக்கீடு.
* ஏற்கெனவே உள்ள 9 செவிலியர் பயிற்சிப் பள்ளியில், மாணவியரின் எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
* 5 மருத்துவமனைகள் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை

**ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்வு**

* நான்கு ஆண்டுகளில் 105 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டன. புதியதாக 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,060 மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.
* நான்காண்டுகளில் 1,295 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதில் 26.93 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.
* நான்காண்டுகளில் 16,55,636 நபர்களுக்கு குடும்பநல அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அனைத்து மருத்துவமனைகளிலும் பேறுகாலத்தின் போது கர்ப்பிணி பெண்ணின் உறவினர் ஒருவர் பிரசவ அறையினுள் துணையாக இருப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

* இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் மூலம் கடந்த ஆண்டுகளில் ரூ.2.87 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டியும், மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது.
* மத்திய அரசின் நிதியுதவி ரூ.1 கோடி செலவில், 4 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில், சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப் பட்டுள்ளன. 16 வட்ட மருத்துவமனைகளில் ரூ.160 இலட்சம் செலவில் சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
* 2003–04ஆம் ஆண்டில் ரூ.8.18 கோடி செலவில் பல்வேறு மருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.
* பெண் சிசுக்கொலையை ஒழித்திடும் வகையில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
* போலி மருந்துகளைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. போர்ட்வின், காம்போஸ், ஆல்ப்ராக்ஸ் போன்ற போதை மற்றும் மனநிலை பாதிக்கும் மருந்துகளின் தவறான விற்பனையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

* கடந்த நான்காண்டுகளில், அரசு மருத்துவ மனைகளுக்கு ரூ.458.18 கோடி செலவில் பல்வேறு மருந்துகள் மற்றும் மருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.
* கடந்த நான்காண்டுகளில் அரசு மருத்துவ மனைகளுக்கு ரூ.64.55 கோடி செலவில் பல்வேறு மருத்துவக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.
* கடந்த நான்காண்டுகளில், ரூ.11.50 கோடி செலவில் மருந்துக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.
* நான்காண்டுகளில், டானிடா திட்டத்தின் கீழ், ரூ.20.88 கோடி செலவில், பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

**எம்.ஆர்.ஐ. ஸ்கேன் – சி.டி. ஸ்கேன் கருவிகள்**

* மதுரை ராஜாஜி மருத்துவமனை மற்றும் சென்னை பொது மருத்துவமனைகளில் ரூ.9.58 கோடி செலவில்

2 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளும், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.13.16 கோடி செலவில் 18 சி.டி. ஸ்கேன் கருவிகளும் நிறுவப்பட்டுள்ளன.

**புற்று நோய் கண்டறியும் கருவிகள்**

* மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.50 கோடி செலவில் 3 புற்றுநோய் கண்டறியும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

* சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில், ரூ. 2 கோடி செலவில் கோபால்ட் சிகிச்சைப் பிரிவு உருவாக்க அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மருத்துவமனைகளில் ரூ.90 இலட்சம் செலவில் 3 மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டம்**

* 2005 முதல் 2010 வரையிலான ஐந்தாண்டுகளில், உலக வங்கி உதவியுடன், ரூ.597.16 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவுள்ள தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் கீழ் இயங்கும் 270 மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்படவுள்ளது. மருத்துவக் கருவிகள் மற்றும் மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கி நிறுவப்படவுள்ளது.

## தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம்

* தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் தொண்டு நிறுவனங்களின் மூலமாக 64 திட்டங்களைத் தற்போது செயல்படுத்தி வருகிறது.

* தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் மொத்தம் 42 தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் மூலம் எச்.ஐ.வி. நோயாளிகள் பரிசோதனை செய்து கொள்ளவும், பரிசோதனை முடிவு ரகசியமாக வைக்கப்பட்டு அந்நோயாளிகள் தன்னம்பிக்கையுடன் அதனை ஏற்று வாழவும் வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

* தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் எச்.ஐ.வி. எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்க்கு அன்பும், ஆதரவும் அளிப்பதற்காக இரண்டு சமுதாய நல மையங்களைத் தொடங்கியுள்ளது. அவற்றில் ஒன்று வேலூரிலும், மற்றொன்று கோயம்புத்தூரிலும் செயல்பட்டு வருகின்றன.

* 2003–2004ஆம் ஆண்டில் முதல் முறையாக 8,417 அரசு மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம் செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்திற்கு யுனிசெப் மற்றும் அபேக் நிறுவனங்கள் தங்களுடைய ஆதரவை அளித்தன.

* 2003–ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 14,889 இடங்களில் தேவையான பல்முனை விளம்பரங் களுடன் குடும்பநல விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் பயனாக இம்முகாம்களில் பால்வினை நோயாளிகள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதில் 2002ஆம் ஆண்டில் 6,63,330லிருந்து 2003ஆம் ஆண்டில் 11,05,047ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 8,31,986 பேர் பெண்கள்.

* சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள நுண்ணுயிரியல் துறையில் ரூபாய் 2.7 இலட்சம் செலவில், தேசிய உதவி பெற்ற ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆய்வகப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**தாய் சேய் மேவாத்திட்டம்**

* தமிழ்நாட்டிலுள்ள 65 மருத்துவமனைகளில் தாய் சேய் மேவாத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 68 தாலுக்கா தலைமை மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு மாநில கண்ணொளி இழப்புத் தடுப்புச் சங்கம்

* கடந்த 4 ஆண்டுகளில், தமிழ்நாடு மாநில கண்ணொளி இழப்புத் தடுப்புச் சங்கத்தின் மூலம் 16,57,043 நபர்களுக்கு, கண்புரை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

* கடந்த ஆண்டுகளில் 65,99,403 மாணவர்களுக்கு கண் நோய் தொடர்பாக பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதில் 2,54,970 மாணவர்களுக்கு கண்ணொளிக் குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இதில் பார்வைக் குறைபாடிருந்த 1,01,674 மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

* 14,226 கண்கள், தானமாகச் சேகரிக்கப்பட்டு 7,718 கண்பார்வையற்றவர்களுக்குப் பொருத்தப்பட்டன.

* * *

# நெசவாளர்கள் நலன் போற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை

"சின்னச் சின்ன இழைப்
பின்னிப் பின்னிவரும்
சித்திரக் கைத்தறிச் சேலை"

– என கைத்தறித் துணிகளின் எழிலைப் போற்றிப் பாடியுள்ளார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

நூற்பு இயந்திரங்கள் மூலம் துணிகள் உற்பத்தி பெருமளவில் நெய்யப்பட்டிருப்பினும், எளிய மக்கள் வாங்கி உடுத்தும் துணிகள் கைத்தறி ரகங்களேயாகும்.

கைத்தறித் துணிகள் சிறந்த தரமாகவும் குறைந்த விலையாகவும் இருப்பதனால், தமிழக மக்கள் கைத்தறி மற்றும் விசைத்தறி மூலம் தயாரிக்கப்பட்ட ஆடைகளையே விரும்பி அணிகின்றனர்.

தமிழகத்தில் பரம்பரையாக, பல ஆண்டுகள், கைத்தறியை நம்பியே வாழ்ந்துவரும் நெசவாளர்களின் நலனைப் போற்றும் வகையில், நெசவாளர்களுக்கு மானியம் வழங்குதல் தொடர்ந்து இடைவிடாது வேலைவாய்ப்பு அளித்தல், நெசவாளர்கள் குடும்பத்திற்கு ஓய்வூதியம், புதிய காப்பீட்டுத் திட்டம், நெசவாளர் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகைகள் போன்ற அரிய பல திட்டங்கள் வகுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையிலான தமிழக அரசு, நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளது.

**அரசின் சாதனைகள்**

**சரக்கிருப்புத் தேக்கம் குறைப்பு**

* கோ–ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரக்குத் தேக்கத்தினைக் குறைக்க துணி விற்பனைக்கு வழக்கமாக வழங்கப்பட்டுள்ள 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் 10 சதவிகிதம் கூடுதல் தள்ளுபடி, சிறப்புக் கழிவு, கைத்தறி கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் 2001ஆம் ஆண்டு ரூ.442.34 கோடி அளவிலிருந்த சரக்கிருப்பு தற்போது ரூ.221.52 கோடியாகக் குறைக்கப்பட்டுச் சரக்குத் தேக்கம் என்ற நிலை தற்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**நெசவாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம்**

* நெசவாளர்களின் குடும்பம் மற்றும் குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "புங்கர் பீமா யோஜனா" திட்டத்தில் 2004 – 05 ஆம் ஆண்டில் 76,096 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் சார்பில் தலா ரூ.130 வீதம் செலுத்தப்பட வேண்டிய மொத்த காப்பீட்டுக் கட்டணமான ரூ.98.93 இலட்சத்தையும் அரசே செலுத்தியுள்ளது.



இப்புதிய காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் நெசவாளர்கள் இயற்கை மரணம் எய்தினால் ரூ.50,000/–, விபத்தில் மரணமடைந்தால் ரூ.80,000/–, மேலும், கோ–ஆப்டெக்ஸ் சார்பில் கருணைத் தொகையாக ரூ.15,000–மும் பாதிக்கப்பட்ட நெசவாளர் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

**நெசவாளர் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை**

* "புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்குக் காலாண்டு உதவித் தொகையாக ரூ.300/– வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,200/– வழங்கிடும் வகையில், 2004–05 ஆம் ஆண்டில் 9,473 நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு ரூ. 85,25,700 மதிப்பிலான கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### நெசவாளர் குடும்பங்களுக்கு அரிசி நிவாரணம்

* கடுமையான நிதி நெருக்கடியின்போது, இலவச வேட்டி, சேலை திட்டத்தைச் செயல்படுத்த இயலாத நிலையிலும், பாதிப்புக்குள்ளான 22,072 கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு 29.7.2002 – 21.8.2002 மற்றும் 15.9.2002 ஆகிய 3 கட்டங்களில் தலா 20 கிலோ வீதம் ரூ.84.10 இலட்சம் செலவில் 1,324.38 மெட்ரிக் டன் அரிசி, அரசால் இலவசமாக வழங்கப்பட்டது.

### இலவச சீருடை வழங்கும் திட்டம்

* 250 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 12,000 நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளித்திடும் வகையில், இலவச சீருடை வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதோடு, பருத்தியிலான துணிகளில் பாலியஸ்டர் இழை கலந்து தரத்துடன் கூடிய இலவச சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### மலிவு விலை வேட்டி–சேலை திட்டம்

* 2002–2003ஆம் ஆண்டில் "மலிவு விலை வேட்டி சேலை திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டுச் சேலை ஒன்றினை ரூ.40/–க்கும், வேட்டி ஒன்றினை ரூ.30/–க்கும் விற்பனை செய்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருந்த 57 இலட்சம் வேட்டிகள் மற்றும் 59.34 இலட்சம் சேலைகள் ரூ.40.84 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டன.

### நெசவாளர்களுக்கு நிலுவை வட்டி மானியத் தொகை வழங்கல்

* கோ–ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 31.12.1998 முதல் 31.12.2001 முடிய உள்ள காலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த வட்டி மானியத் தொகை ரூ.27.50 கோடியினை 2002–03ஆம் ஆண்டில் அரசு வழங்கியது. இதனை தவிர, 2003–04ஆம் ஆண்டில் வட்டி மானியத் தொகையாக அரசு ரூ.2 கோடியும், 2004–05ஆம் ஆண்டில் ரூ.4.30 கோடியும் வழங்கியுள்ளது.

### இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம்

* **2004 ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் முதல் 111 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 111 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும், ரூ.187.48 கோடி செலவில் விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டம் 2005ஆம் ஆண்டு பொங்கல் திருநாளுக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 111.52 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 110.98 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் ரூ.173 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை 2005–2006ஆம் ஆண்டிலும் செயல்படுத்த ரூ.175கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### இலாபத்தில் இயங்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

* 2000–01ஆம் ஆண்டில் லாபத்தில் இயங்கி வந்த, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 320 ஆகும். இது 2004–05ஆம் ஆண்டில் 601ஆக உயர்ந்துள்ளது.

### பருத்தி ரக துணிகள் விற்பனை

* சரக்குத் தேக்கத்தினை குறைக்க, 15.9.2002 முதல் 31.1.2003 வரை ஏற்கெனவே வழங்கப்படும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் கூடுதலாக 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியதால் ரூ.116.28 கோடி மதிப்புள்ள பருத்தி ரக துணிகள் விற்பனை செய்யப்பட்டுச் சரக்குத் தேக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### கைத்தறி துணிகள் விற்பனை

* சரக்குத் தேக்கத்தினைக் குறைக்க, 15.9.2003 முதல் 31.1.2004 வரை ஏற்கெனவே வழங்கப்படும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் கூடுதலாக 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியதால் ரூ.173.81 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுச் சரக்குத் தேக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### நெசவாளர்களுக்குத் தள்ளுபடி மானியம்

* நெசவாளர்களின் நலன் கருதி 2000–01ஆம் ஆண்டில் ரூ.61.53 கோடி அளவிற்கு மட்டுமே வழங்கப்பட்ட தள்ளுபடி மானியம் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.75 கோடியாகவும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.88 கோடியாகவும், 2004–05ஆம் ஆண்டில் ரூ.92 கோடியாகவும் உயர்த்தி வழங்கப் பட்டுள்ளதுடன், 2005–06ஆம் ஆண்டிற்கும் தள்ளுபடி மானியத் திட்டத்திற்கென ரூ.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியம்

* 647 நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.250 லிருந்து ரூ.350 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

### சிறப்புத் தள்ளுபடியில் கைத்தறித் துணிகள் விற்பனை

* சில குறிப்பிட்ட விழாக் காலங்களில் 135 நாட்களுக்கும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு சில குறிப்பிட்ட காலங்களில் 96 நாட்களுக்கும், நேரடியாக 10 விழுக்காடு தள்ளுபடி வழங்கி, ரூ.248.64 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
* இறந்த நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் மொத்தக் காப்பீட்டுத் தொகை ரூ.60,000/– லிருந்து ரூ. 65,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

## நெசவாளர்களுக்கு புதிய இரகங்கள் உற்பத்தி செய்யப் பயிற்சி

* 25,000 நெசவாளர்களுக்குப் புதிய இரகங்கள் உற்பத்திச் செய்யப் பயிற்சி அளித்தல் வடிவமைப்பு மற்றும் திறன் மேம்பாடு போன்ற பல்வேறு இனங்களுக்கு "ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்" கீழ் உதவித் தொகையாக ரூ.25.30 கோடி வழங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு இத்திட்டம் மைய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை மைய அரசால் ரூ.4.34 கோடியும், மாநில அரசால் ரூ.1.45 கோடியும் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## ஆசியாவிலேயே பெரிய நெசவாளர்கள் காலனி

* **சென்னிமலைப் பகுதி நெசவாளர்களுக்கு ஒரே இடத்தில் ரூ.6.87 கோடி செலவில் 1,010 தொழிற் கூடத்துடன் கூடிய வீடுகள் அடங்கிய ஆசியாவிலேயே மிகப்பெரிய நெசவாளர் காலனி கட்டப்பட்டுள்ளது.**

## கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி

* 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ. 20 இலட்சம் செலவில் தையல் மற்றும் இதர வேலை வாய்ப்புக்களுக்கான பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

## விசைத்தறிகளை நவீனமயமாக்க மானியம்

* **தமிழ்நாட்டிலுள்ள 2,000 சாதாரண விசைத்தறிகளை நவீனமயமாக்கத் தறி ஒன்றுக்கு ரூ.5,000/– மானியம் வீதம் ரூ.1 கோடி மதிப்பிலான மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.**

## கைத்தறி ரகங்கள் ஏற்றுமதி விற்பனை

* 2000–01ஆம் ஆண்டில் ரூ.92 கோடி அளவிற்கு மட்டுமே ஏற்றுமதி விற்பனை மேற்கொள்ளப்பட்டது. 2001–02ஆம் ஆண்டில் ரூ.146.25 கோடி அளவிற்கும், 2002–03ஆம் ஆண்டில் ரூ.179 கோடி அளவிற்கும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.195.08 கோடி அளவிற்கும் மற்றும் 2004–05ஆம் ஆண்டில் ரூ.264.30 கோடி அளவிற்கும் ஏற்றுமதி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அரசு நிதியுதவி

* கூட்டுறவு நூற்பாலைகள் அரசு உத்தரவாதத்தைப் பயன்படுத்தி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள கடன் நிலுவைத் தொகையினைச் செலுத்துவதற்காகக் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அரசு ரூ.76.57 கோடி வழங்கியுள்ளது.



## நெசவாளர்கள் குடும்பத்திற்கு கல்வி உதவித் தொகை

* எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து பல் மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ். பட்டப்படிப்புப் பயிலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு ரூ.3,000/– கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

## கைத்தறி ரகத்தில் புதிய வடிவமைப்பு

* கைத்தறி ரகத்தில் புதிய வடிவமைப்புகளைப் பல வண்ணங்களில் உருவாக்கி, விற்பனையை அதிகரித்திடும் வகையில், அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் மூலம் ரூ.48.50 இலட்சம் மதிப்பீட்டில் இத்தகு புதிய வடிவமைப்புகளைப் பெற்று கைத்தறி நெசவில் புதியமுறை அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப் படுகிறது.

## ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம்

* காஞ்சிபுரம், சேலம், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய ஜவுளி நகரங்களின் சாலை, மின்வசதி, குடிநீர் வசதி, நெசவுப் பயிற்சி, மாசுக்கட்டுப்பாடு போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்த தலா ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற் கட்டமாக, காஞ்சிபுரத்தில் செயல்படுத்த முன் பணமாக ரூ.5 கோடியினை மாநில அரசு விடுவித்துள்ளது.

## பட்டுச்சேலை ஜரிகையின் தரத்தை அறியும் இயந்திரம்

* பட்டுச் சேலைகளில் உள்ள ஜரிகையின் தரத்தினை அறிய காஞ்சிபுரத்தில் ரூ.22.84 இலட்சம் மதிப்பீட்டில் எக்ஸ்–ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

✶ சந்தை நிலவரத்தை முன்கூட்டியே அறியவும், கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்தவும், சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் "புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம்" (Data and Market Intelligence Cell) ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

**தறிக்கூடங்கள் கட்ட மானியம்**

✶ **நெசவாளர்களுக்கு, நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்தோடு கடந்த நான்கு ஆண்டுகளில், 17,021 தறிக்கூடங்கள் கட்ட மானியம் வழங்கப்பட்டுள்ளது.**



**தேங்கிக் கிடந்த கதர் துணிகள் விற்பனை**

✶ 2001–க்கு முன்னர் 5 ஆண்டுகளில் ரூ.42 கோடி அளவிற்குத் தேங்கிக் கிடந்த கதர் ரகங்களில் ரூ.3 கோடி மதிப்புள்ள கதர் வேட்டிகள், முதியோர் உதவித் திட்டத்தின் கீழ், ஒய்வூதியம் பெறுவோர்களுக்கு வழங்கப்பட்டு ரூ.3.09 கோடி மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை செய்யப் பட்டுள்ளது. மேலும், ரூ.40 கோடி அளவில் மேற்படி ரகங்கள் விற்கப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

✶ ரூ.10.64 கோடி அளவிற்கு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த அழுக்கடைந்த கதர் ரகங்களுக்கு, அதிக தள்ளுபடி வழங்கி ரூ.9.07 கோடி மதிப்பிலான கதர் இரகங்கள் விற்பனை செய்து இருப்புக் குறைக்கப்பட்டது.

**சோப்பு – தேன் – தோல் உற்பத்தி மற்றும் விற்பனை**

✶ கடந்த 4 ஆண்டுகளில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ரூ.12.95 கோடி மதிப்பிலான சோப்பு உற்பத்தி செய்யப்பட்டது. தேன் ரூ.1.92 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தோல் உற்பத்தியைப் பொறுத்தவரையில் ரூ.7.34 கோடி அளவில் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

**கதர் நூல் உற்பத்தியாளர்களுக்கு ஒய்வூதியம்**

✶ கதர் நூல் உற்பத்தி மற்றும் துணி உற்பத்தியில் ஈடுபட்டு அவர்களின் வருவாயில் 10 விழுக்காடுத் தொகையினை நல நிதியாகச் செலுத்த முன் வரும் நூற்பாளர்கள் / நெசவாளர் பெருமக்களுக்கு 60 வயதைக் கடக்கும் நிலையில் மாதம் ரூ.200 வீதம் ஒய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

✶ கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தில் இயங்கிவரும் உற்பத்தி நிலையங்களில், ரூ.6.29 கோடி மதிப்பில் பல்வேறு பித்தளை விளக்குகள், கற்சிற்பங்கள், தஞ்சாவூர் கலைத்தட்டு, பஞ்சலோக சிலைகள் மற்றும் சந்தன மரச் சிற்பங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. ரூ.51.98 கோடி மதிப்பிற்கு கைவினைப்பொருட்கள் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

**ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள்**

✶ 2004–05ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தில், பல்வேறு கைத்திறன் தொழில்கள் குறித்த பயிற்சித் திட்டங்கள், செம்மைபடுத்தப்பட்ட மேம்பாட்டிற்கான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல், வடிவமைப்புகளில் தொழில் நுட்பவியல் உயர்வு மற்றும் ஆராய்ச்சி போன்ற பல்வேறு பணிகள் ரூ.58.80 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**திருக்கோயில்களில் பரிசுப் பொருட்கள் விற்பனை நிலையங்கள்**

✶ தமிழ்நாட்டில் 9 திருக்கோயில் வளாகங்களில், "பரிசுப் பொருட்கள்" விற்பனை நிலையங்கள் திறக்க உத்தேசித்து, தற்போது சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோவிலில் விற்பனை நடைபெற்று வருகிறது.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி வாரியம்**

✶ தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் பல்வேறு திருக்கோயில்களுக்கு தங்க ரதம், வெள்ளி ரதம், மர ரதம், வெள்ளித் தகடுகள் போர்த்துதல், பித்தளை கிராதிகள் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

✶ ✶ ✶

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் போலி மதுபானங்களையும், கள்ளச்சாராயத்தையும் அருந்துவதால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நலம் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் பொருளாதாரப் பாதிப்பும் ஏற்படுவதை உணர்ந்த அரசு, மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம், கள்ளச் சாராயத்தையும், தீர்வை செலுத்தப்படாத மற்றும் போலி மதுபானங்களின் விற்பனையை முற்றிலும் ஒழித்திடும் வகையில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூலம் 2003ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் மதுபான சில்லறை விற்பனையை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு எடுக்கப்பட்ட இந்தத் துணிச்சலான உத்தரவு அரசுக்கு அதிக வருவாயைப் பெருக்குவதில் முன்னோடியாக விளங்குகிறது. இத்துறையின் மூலம் ஈட்டுகின்ற வருவாய் அடிதளத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துகின்ற திட்டங்களுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது.

### அரசின் சாதனைகள்

★ அரசின் வருவாயைப் பெருக்க வேண்டி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனைக் கட்டணம் 3.6.2003 முதல் நீக்கம்.

★ கருப்பஞ்சாற்று கசண்டு 21.39 இலட்சம் டன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, 2.14 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு வெளிமாநில / வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, மொத்தம் ரூ.4.28 கோடி மதிப்பிலான தொகை நிருவாகக் கட்டணமாக அரசு வருவாய் ஈட்டியுள்ளது.

### எத்தனால் கலந்த பெட்ரோல்

★ எத்தனால் கலந்த பெட்ரோலைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்த எடுத்த முடிவினைத் தொடர்ந்து 5 வடிப்பாலைகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. எண்ணெய் நிறுவனங்களுக்குத் தமிழகத்தில் ஆறு இடங்களில் உரிமங்கள் வழங்கப்பட்டு, எண்ணெய் நிறுவனங்கள் மூலம் 91.70 இலட்சம் லிட்டர் எத்தனால் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

★ 3821.900 கிலோ எடையுள்ளரூ.1.91 கோடி மதிப்புள்ள உலர் கஞ்சா மற்றும் ரூ.34.38 கோடி மதிப்புள்ள 1,37,510 கிலோ கஞ்சா செடிகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. ரூ.40.74 கோடி மதிப்புள்ள 40.736 கிலோ ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது.

★ தமிழக அரசு, திரைப்படத் தொழில் துறையை மீண்டும் புத்துணர்வுப் பாதையில் செலுத்தும் வகையில், காணொலி திருட்டுகளைத் தடுக்கும் சட்டத்தைத் திருத்த ஆணை பிறப்பித்து 2004 அக்டோபர் திங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### டாஸ்மாக் நிறுவனத்தில் மதுபான விற்பனை

★ 29.11.2002 முதல் 28.11.2003 வரையில் தனியார் நடத்திய சில்லறை விற்பனையால் டாஸ்மாக்கிற்குக் கிடைத்த தொகை ரூ.3,877 கோடி மட்டுமே. கடந்த 29.11.03 முதல் 28.11.2004 காலம் வரை, மதுபான சில்லறை விற்பனையை டாஸ்மாக் நிறுவனம் மேற்கொண்ட பிறகு, இதற்கு இணையான ஒரு வருட காலத்தில் மதுபான விற்பனை மதிப்பு ரூ.5,441 கோடியாகும். மதுபான விற்பனையின் கூடுதல் மதிப்பு மட்டும் ரூபாய் 1,564 கோடியாகும். டாஸ்மாக் மூலம் 33,600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

★ சில்லறை விற்பனையைத் தனியார் நிகழ்த்திய காலமான 29.11.02 முதல் 28.11.03 வரையில் மதுபான விற்பனையில் ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி மூலம் கிடைத்த வருவாய் ரூ.3,825.99 கோடியாகும். இதற்கு இணையான காலத்தில் (29.11.03 முதல் 28.11.04 வரை) டாஸ்மாக் நிறுவனம் மதுபான சில்லறை விற்பனையை மேற்கொண்ட பிறகு அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.4,441.88 கோடியாகும். ரூ.615.89 கோடி ரூபாய் வருவாய் அரசுக்குக் கூடுதலாகக் கிடைத்து உள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் 2004 முதல் மார்ச் 2005 வரை முந்தைய நிதியாண்டை விட, ரூ.1,217.37 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் பணிகள்

★ கடந்த 4 ஆண்டுகளில், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் பல சிறப்பான நிருவாக மாற்றங்கள் செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் எந்த இடமும் விடுபடாமல் அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

★ "மறுவாழ்வுக் குழுக்கள்" மூலம் மறுவாழ்விற்காக கடந்த 2 ஆண்டுகளில் ரூ.4.06 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2004 – 2005ஆம் ஆண்டிற்கு ரூ.2.50 கோடி நிதியினை அரசு ஒதுக்கியுள்ளது.

★ கடந்த 4 வருட காலங்களில், 10,18,022 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 9,35,701 நபர்கள் கைது செய்யப்பட்டனர். 2,84,34,263 லிட்டர் கள்ளச் சாராயமும், 4,89,24,614 லிட்டர் ஊறலும், 20,63,032 சாராயப் பாக்கெட்டுகளும், 15,44,572 லிட்டர் தெளிந்த சாராவியும், 7,62,676 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்களும், 19,633 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

★ காவல் சமாதான நடவடிக்கைக் கட்டணமாக ரூ.6,24,85,587 தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அபராதக்கட்டணங்களாகரூ.20,76,52,820 பெறப்பட்டுள்ளது.

★ ★ ★

# நிதி வளம் பெருக்கும் வணிகவரித்துறை

மக்களுக்கான திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் வலுவான நிதி ஆதாரங்கள் மூலம்தான் செயல்படுத்த முடியும். மாநில அரசின் மூலம் ஈட்டுகிற வருவாய் மூலமும், மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்குகின்ற நிதி ஆதாரத்தைக் கொண்டும் அரசு பல்வேறுத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

தமிழக அரசின் வணிகவரித்துறை, வரி சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வரி வசூல் முறை ஆகியவற்றின் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் வரி வசூல் வளர்ச்சி பெற்று திறம்பட செயல்பட்டு வருகிறது.

**வணிக வரி வசூல்**

✶ **2003–2004 ஆம் ஆண்டில் மொத்த வரி வசூல் தொகை ரூ.11,757 கோடி ஆகும். தற்போது 2004–05ஆம் ஆண்டில் கடந்த ஆண்டை விட 18 சதவிகிதம் கூடுதலாக ரூ.13,907 கோடி அளவில் வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.**

**வரிச் சலுகைகள்**

✶ கரும்புச் சாறு கழிவினை உபயோகப்படுத்தி மருந்து மற்றும் இரசாயன பொருட்களின் உற்பத்திகளை ஊக்குவித்திடும் வகையில் கரும்புச் சாற்றின் கழிவு மீதான வரி 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு விற்கப்படும் மெழுகுக்கு 4 சதவிகிதம் வரிக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**தொலைதொடர்புச் சாதனங்களுக்கு வரிச்சலுகை**

✶ மத்திய அரசு துறையாக இருந்து தற்போது அரசு நிறுவனமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு விற்கப்படும் தொலைச் செய்தி சாதனங்கள் மீதான வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

**ரப்பர் தொழிலுக்கு வரிச்சலுகை**

✶ ரப்பர் தொழிலுக்கு உதவிடும் வகையில் இயற்கை ரப்பர் வெளி மாநில விற்பனையின் மீது செலுத்தப்படும் 4 விழுக்காடு வரிகளை, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கொள்முதல் வரியிலிருந்து சரி செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

**சுய வரி விதிப்பு முறை**

✶ ரூபாய் ஒரு கோடியாக இருந்த சுய வரி விதிப்பு முறை, ரூபாய் பத்து கோடியாக உயர்த்தப்பட்டது. வரி விதிப்பு நிலுவையினைக் குறைக்க சம்மரி வரி விதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

✶ தேயிலை விற்பனையை ஊக்கப்படுத்தும் வகையில், அரசு சார்பு நிறுவனமான "டீ செர்வ்" மூலம் விற்கப்படும் தேயிலைக்கு உள் மாநில வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், இடைமாநில விற்பனை மீதான வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

✶ சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காகப் பெட்ரோலிய நிறுவனங்களுக்கு விற்கப்படும் 'எத்தனால்' மீதான உள்மாநில வரி 12 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ பிளாஸ்டிக் மூலப்பொருட்கள், பி.வி.சி. ரெசின், பொட்டாசியம் குளோரேட், லேப், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, குளோரின், அலுமினியம் ஆகியவற்றின் மீதான நுழைவு வரி 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ **அரிசி மீது விதிக்கப்பட்ட 2 சதவிகித வரி நீக்கம்.**

✶ பேரீச்சம் பழத்தின் மீதான வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ சிறுநீரகச் சிகிச்சைக்குப் பயன்படுத்தும் சி.ஏ.பி.டி. என்ற திரவ மருந்திற்கும், 'எயிட்ஸ்' நோயிற்காக வழங்கப்படும் மிக முக்கிய பத்து மருந்துகளுக்கும் முழுவதுமாக வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

✶ சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் கருவிகளான சுமார் 25 இனங்களுக்கு வரி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**கைவினைப் பொருட்களுக்கு வரி விலக்கு**

✶ **கைவினைப் பொருட்கள் மீதான வரி விகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.**

**இசைக்கருவிகளுக்கு வரி விலக்கு**

✶ இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

✶ கோழித்தீவனம் தயாரிக்கப் பயன்படும் சுண்ணாம்புக் கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீதான ஒரு சதவிகித மறு விற்பனை வரி ரத்து.

**சுனாமி பாதிப்பு மீனவர்களுக்கு கட்டுமரங்கள் வாங்க மாநில விற்பனை வரி விலக்கு**

✶ சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு உதவிட, டான்செம் நிறுவனத்தால் விற்கப்படும் சிமெண்ட், ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரை தகடுகளுக்கு முழு வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்படும் புதிய கட்டுமரம் மற்றும் பழுதடைந்த கட்டுமரங்களுக்கு உள்ளிட்ட பொருட்களுக்கு செலுத்த வேண்டிய உள் மாநில விற்பனை வரியிலிருந்து 1.4.2005 முதல் ஓராண்டுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.



**சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் கூரை தகடுகளுக்கு முழு வரிவிலக்கு**

✶ சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு டான்செம் நிறுவனத்தால் விற்கப்படும் சிமெண்ட், ஆஸ்பெஸ்டாஸ் கூரை தகடுகளுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் முழு வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

**சுனாமி பாதிப்பால் மீனவர்கள் வாங்கும் பொருள்களுக்கு விற்பனை வரிவிலக்கு**

✶ சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விற்பனை செய்யப்படும் புதிய கட்டுமரம், புதிய FRP கட்டுமரம், பழுதடைந்த இயந்திரப் படகுகளைச் சரி செய்வதற்குத் தேவைப்படும் பொருள்கள், கண்ணாடி இழை படகுகள் உட்பட புதிய இயந்திர படகுகள் போன்றவைகளுக்கு செலுத்த வேண்டிய உள் மாநில விற்பனை வரியிலிருந்து ஓராண்டிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**ஆடம்பர வரிகளில் வரிச்சலுகைகள்**

✶ விற்பனை வரியினை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால், ஒரு மாதத்திற்கு 2 விழுக்காடு என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 24 விழுக்காடு வட்டி விதிக்கப்படுகிறது. இவற்றைக் குறைக்கும் பொருட்டும், வரிவருவாயைப் பெருக்கும் பொருட்டும், முதல் 90 நாட்களுக்குள் செலுத்தப்படும் வரிக்கு மாதத்திற்கு 1.5 சதவிகிதமும், அதன் பிறகு மாதத்திற்கு 2 சதவிகிதமும், வரிவிதிக்க சட்டத் திருத்தம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

✶ திரைப்படக் கருவிகள் ஒப்பந்த வாடகை மீதான பிரிவு 3(ஏ)–ன் கீழ் விதிக்கப்படும் விற்பனை வரி செலுத்து வதிலிருந்து அவ்வணிகர்களுக்கு 29.9.2004 முதல் 28.9.2007 வரை மூன்றாண்டுகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

✶ சுற்றுலா வளர்ச்சிக்காகத் தங்கும் விடுதிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த நாளொன்றுக்கு தங்குவதற்கான கட்டணங்களில் ஆடம்பர வரி விகிதம் கீழ்க்கண்டவாறு குறைக்கப்பட்டுள்ளது.

– ரூ.200 முதல் ரூ.499 வரை வரிவிகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகவும்,

– ரூ.500 முதல் ரூ.999 வரை வரிவிகிதம் 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாகவும்,

– ரூ.1,000 அல்லது அதற்கு மேல் 25 சதவிகிதத்திலிருந்து 12.5 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

– தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் மீதான ஆடம்பர வரி 29.12.2004 முதல் நீக்கப்பட்டுள்ளது.

– சிமெண்ட் மற்றும் வெள்ளை சிமெண்ட் மீதான நுழைவு வரி விலக்கு.

**மீனவர்களுக்கு விற்கப்படும் டீசல் எண்ணெய்க்கு வரி விலக்கு**

✶ மீனவச் சமுதாயத்திற்கு உதவுவதற்கென பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களிலிருந்து இயக்குநர், மீன்வளர்ச்சித்துறை மூலமாக மீனவர்களுக்கு விற்கப்படும் டீசல் எண்ணெய்க்கு 29.10.2004 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வரிவிலக்கு இயந்திரப் படகு வைத்திருக்கும்

மீனவர்களுக்கு, ஆண்டொன்றுக்கு 50,000 கி.லிட்டர் டீசலுக்கும், டீசல் இஞ்சின் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் வைத்திருக்கும் மீனவர்களுக்கு 45,000 கி.லிட்டர் டீசலுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**டீசல் எண்ணெய், மென் டீசல் எண்ணெய்க்கு வரி விலக்கு**

✶ வெளிநாட்டிலிருந்து தமிழகத் துறைமுகங்கள் வழியாகச் செல்லும் அயல்நாட்டுக் கப்பல்களுக்கு விற்கப்படும் உயர்வேக டீசல் எண்ணெய், மென் டீசல் எண்ணெய் மற்றும் எரிஉலை எண்ணெய் மீதான விற்பனை வரிவிகிதம் முறையே 25 மற்றும் 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் பட்டுள்ளது.

✶ உள்மாநில தயாரிப்புத் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட நிறுவனங் களுக்கு 29.12.2004 முதல் கூடுதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

திருவாளர் டி.வி.எஸ். மோட்டார் கம்பனி (இரு சக்கர வாகனங்கள்)

திருவாளர் டிராக்டர்ஸ் அண்ட் பார்ம் எக்யூப்மெண்ட்ஸ் (டிராக்டர்கள்)

திருவாளர்கள் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிட் (சைக்கிள்கள்)

**பின்னலாடைத் தொழிலுக்குச் சலுகை**

✶ பின்னலாடைத் தொழிலை ஊக்குவிக்கும் முகத்தான் இடை மாநில விற்பனைக்கு 10 சதவிகித வரியினை செலுத்திவிட்டு 9 சதவிகித தொகையினை மானியமாகத் திருப்பி அளிக்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**கணினி உபரிப் பொருட்களுக்கு வரிவிலக்கு**

✶ கணினி உபரிப் பொருட்களின் இடைமாநில விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

✶ இடைமாநில விற்பனையில் அனுப்பப்படும் கணினிகளுக்கு உபரி மற்றும் உதிரிப் பொருட்களுடன் சேர்த்து 'சி' மற்றும் 'டி' படிவத்துடன் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக மத்திய விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளது.

✶ கேளிக்கைப் பூங்காக்கள் மீது விதிக்கப்பட்ட வரி விகிதம் 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

✶ மாநகராட்சி, நகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிப் பகுதிகளில் திரைப்படங்களுக்கான கேளிக்கை வரி பழைய திரைப்படத்திற்கு 15 சதவிகிதமாகவும், புதிய திரைப்படத்திற்கு 10 சதவிகிதமாகவும், பிற பகுதிகளில் அனைத்து திரைப்படங்களுக்கும் 10 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

**பதிவுத்துறை**

✶ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் புதிய அணுகு முறையாலும், சீரிய நடவடிக்கையாலும் பதிவுத்துறை மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 6,528 கோடி மதிப்பீட்டிலான வருவாய் ஈட்டப்பட்டது.

**சமாதான் திட்டம்**

✶ அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 60 விழுக்காடு முத்திரைத் தீர்வைச் செலுத்தி நிலுவையில் உள்ள பத்திரங்களைத் திருப்பி வழங்கும் திட்டத்தின் கீழ் 2002 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்திய சமாதான் திட்டங்களின் கீழ் ரூ.170.20 கோடி மதிப்பிலான தொகை வசூலிக்கப் பட்டு, 79,264 நபர்களுக்குப் பதிவுப் பத்திர ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பத்திரப்பதிவில் அதிநவீன தொழில்நுட்பம்**

✶ நாட்டிலேயே முதல் வகையாக "ரெஜிநெட்" தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப சக்திகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு தனிப்பட்ட வலைப்பின்னலாகும். இதன் மூலம் எந்தவொரு சொத்தின் வில்லங்கச் சான்று தகவல்களை வேறு எந்த இடத்திலும் பெறுவதற்கும், பொதுமக்கள், அருகிலுள்ள சார்பதிவகத்திற்கு சென்று சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவும் வழிவகுக்கிறது. மேலும் 'ஸ்டார்' (திறந்த மற்றும் வெளிப்படையான பதிவு முறை செயல்பாடு) தகவல் தொழில் நுட்பமும் முக்கியமானதாக விளங்குகிறது.

**கிரய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை சதவிகிதம் குறைப்பு**

✶ தகவல் தொழில்நுட்ப பகுதியில் முதலீடு செய்வதை உருவாக்கிட, நகர்ப்புறங்களில் விதிக்கப்பட்ட 8 விழுக்காடு முத்திரைத் தீர்வையும், கிராமப் புறங்களில் 7 விழுக்காடு முத்திரைத் தீர்வையும் 6 விழுக்காடு முத்திரைத் தீர்வையாக குறைக்கப் பட்டுள்ளது.

**அடமானத்திற்கான முத்திரைத் தீர்வைக் குறைப்பு**

✶ சாதாரண அடமானத்திற்கு 4 விழுக்காடாக இருந்த முத்திரைத் தீர்வை 1 விழுக்காடாகவும், ரூ.20,000ஆக இருந்த உச்சத்தீர்வை ரூ.5,000ஆக குறைக்கப்பட்டுள்ளது.

✶ சுவாதீன அடமானத்திற்கு தீர்வை மற்றும் மிகுவரி 3 விழுக்காடு மற்றும் 1 விழுக்காடாக குறைக்கப் பட்டுள்ளது. பதிவு கட்டணம் 1 விழுக்காடு வீதத்தில் உச்ச வரம்பு ரூ.2 இலட்சமாக்கப்பட்டுள்ளது. ✶




# தொழில் துறை

உலக நாடுகளின் வளர்ச்சிக்கு அந்நாடுகளின் வலுவான தொழிற்கொள்கை, மண் வளம் மற்றும் இயற்கை வளம் ஆகியவை முக்கிய அடிப்படையான கொள்கையாகும். நாட்டின் தொழில்வளர்ச்சி அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மை அங்கமாகத் திகழ்கிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும் வேலைவாய்ப்பு பெருகிடவும் அடிப்படையாக அமைவது தொழில் வளமே. "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம்" என்று பாடிய மகாகவி பாரதியார் "உலகத்தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்" என்று கூறினார். மகாகவி பாரதியார் கனவினை நனவாக்கும் வகையில் பல்வேறு முனைப்பான முன் முயற்சிகளின் மூலம் 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழக அரசின் தொழிற் கொள்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இந்த சிறப்புமிக்க தொழிற்கொள்கை தமிழகம் தொழிற்துறையில் முதலிடம் பெறவும், தமிழகத்தில் அதிக அளவில் தொழில் முதலீட்டாளர்களின் வருகைக்கு முக்கியத்துவம் பெற்று அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தொழிற் கொள்கை முயற்சியால் தமிழகம், வலுவான உள்கட்டமைப்பு வசதிகளுடன் அதிக அளவில் கிடைக்கக்கூடிய தொழில்நுட்பத் திறனுடைய மனிதவளத்துடன் தொழில் மூலதனத்திற்கு மிகவும் விரும்பத்தக்க இடமாகவும் திகழ்கிறது. தமிழகத் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்பு அம்சம் தொழிலாளர்களின் ஒற்றுமை உணர்வேயாகும்.

## அரசின் சாதனைகள்

### டைசல் பயோ பார்க்

★ டைசல் பயோ பார்க் 10.11.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு 87 பரிசோதனைக் கூடங்கள் பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளன.

### அரியலூர் சிமெண்ட் ஆலை

★ டான்செம் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் ஆலையின் அதிகபட்ச மாதாந்திர உற்பத்தித் திறன் பயன்பாடு 154.80 சதவிகிதமாகவும், அதிகபட்ச மாதாந்திர விற்பனை 66,502 மெ.டன் எனவும் சாதனை எட்டப்பட்டுள்ளது.

### கனிம நிறுவனத்தின் பணிகள்

★ தமிழ்நாடு கனிம நிறுவனத்தில், குவாரிகளின் இயக்கம், 2001–2002ஆம் ஆண்டில் 34 குவாரிகளிலிருந்து, 2004–2005ஆம் ஆண்டில் 60 குவாரிகளாக அதிகரித்துள்ளது.

★ தமிழ்நாடு கனிம நிறுவனம், 2002–2003 ஆம் ஆண்டிலிருந்து 2004–2005ஆம் ஆண்டு வரை ரூ.7.23 கோடி முதலீட்டில் தோகைமலை, பைத்தூர், சூலமலை போன்ற குவாரிகளை நவீனப்படுத்தி, அதிக மீட்பு விழுக்காடு மற்றும் அதிக உற்பத்திப் பெருக்கத்துடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

★ மாதேப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிரானைட் ஓடுகள் தொழிற்சாலையில் உற்பத்தித்திறன், 2003–2004இல் 2 கோடி ரூபாய் செலவில் புதிய பல இரம்ப இயந்திரம் மற்றும் காலிப்ரேஷன் இயந்திரத்தை நிறுவியதன் மூலம், 21,300 ச.மீட்டர் அளவிலிருந்து 33,600 ச.மீட்டர் ஆக உயர்ந்துள்ளது.

★ சிவகங்கையிலுள்ள செழுமைப்படுத்திய கிராபைட் தொழிற்சாலை 2003–2004ஆம் ஆண்டில் சாதனை

அளவாக ரூ.7.76 கோடி மதிப்புடைய 5,799 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிராபைட்டை விற்று ரூ.75 இலட்சம் ரொக்க இலாபம் ஈட்டியுள்ளது.

★ தமிழ்நாடு கனிம நிறுவனம், 2001–02ஆம் ஆண்டு ரூ.67.05 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.12.11 கோடி மொத்த இலாபமும், 2002–03ஆம் ஆண்டு ரூ.80.02 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.13.82 கோடி மொத்த இலாபமும், 2003–04ஆம் ஆண்டு ரூ.90.21 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.15.51 கோடி மொத்த இலாபமும் ஈட்டியுள்ளது.



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

★ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.564.48 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்க அனுமதிக்கப்பட்டு, ரூ.454.45 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 40,416 பேர்களுக்குப் புதிதாக வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது.

★ 5 ஆண்டுகளாக ஏற்பட்ட இழப்புக்குப் பின்னர் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 2003–2004ஆம் ஆண்டில் ரூ.2.21 கோடி ஆதாயம் ஈட்டியுள்ளது.

### பன்னாட்டுத் தரச்சான்றிதழ்

★ நாட்டிலேயே முதன்மையான மாநில அளவிலான நிதி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், இந்தியத் தரக்கட்டுப்பாடுச் செயலகத்திலிருந்து ஐஎஸ்ஓ 9001 : 2000 என்ற தரக்கட்டுப்பாடுச் சான்றிதழை அண்மையில் பெற்றுள்ளது.

* * *

# சட்டத்துறை

சட்டம், மனித சமுதாயத்தின் மாண்பினைப் பேணிப் பாதுகாப்பது ஆகும். சட்டம் என்பது அரசின் எண்ணங்களின் மூலமாக மக்களுக்கு நீதியை வழங்குவதற்காகவும், ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலனிற்காகவும், இயற்றப்பட்டு நியாயமாகவும் திறம்படவும் செயல்படுத்துதல் ஆகும்.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்குச் சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத்துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்குச் சட்ட வடிவமளித்து சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது. சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும், சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதும், சட்டத்துறையின் முக்கியப் பணியாக விளங்குகிறது.

ஓர் அரசாங்கத்தின் அடிப்படையான பணிகளில் நீதி நிருவாகமும் ஒன்றாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வது ஓர் அரசாங்கத்தின் கொள்கையாகும். நீதித்துறை சுதந்திரமாகச் செயல்படுவதையும் மற்றும் விரைந்து நீதி வழங்குவதையும் உறுதி செய்யும் வகையில் அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. தேவையான இடங்களில் புதிய நீதிமன்றங்கள் அமைத்தல் மற்றும் நீதிமன்றங்களுக்குத் தேவையான கூடுதல் உள்ளமைப்பு மற்றும் பிற தேவைகளை வழங்கி குடிமக்களுக்கு விரைவான சமூகப் பொருளாதார நீதியை வழங்குவதில் தமிழக அரசு முன்னோடியாக விளங்கி வருகிறது.

## அரசின் சாதனைகள்

### டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

✶ சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளும், சேலத்தில் உள்ள ஒரு தனியார் சட்டக் கல்லூரியும், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

✶ செங்கல்பட்டில் பல்கலைக்கழக உறுப்பு சட்டக் கல்லூரி 2003–2004 கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. இச்சட்டக் கல்லூரியின் கட்டடத்திற்கான நிலம் அரசால் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

முதுகலைப் பட்டப்படிப்பு

19 புலன்கள் முனைவர் பட்டப்படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய முதுகலைப் பட்டயப் படிப்புகளுக்கான பொதுக்காப்பீடு பற்றிய முதுகலைப் பட்டயப் படிப்பு 2003–2004 கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வணிகச் சட்டத்தில் முதுகலைப் பட்டப்படிப்பும், அரசமைப்பு மற்றும் சட்ட ஒழுங்கு முதுகலைப் பட்டப் படிப்பும் 2003–2004 கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பட்டன. மேலும் 5 புத்தகங்களை விரைவில் வெளியிடும் வகையில் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

* பொதுமக்களிடையே சட்ட விழிப்புணர்வினை ஏற்படுத்த, அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களால், கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

* சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 12 மாணவ,




''டெலி லா சாட்'' திட்டம் பல்கலைக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழு உதவியுடன் ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியும், ஆசிரியர்களுக்கான ஆராய்ச்சித் திட்டங்களும், மாணவர்களுக்கான போட்டிகளும் மற்றும் ஊரக மக்களுக்கான சட்ட அறிவொளித் திட்டமும் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

**சட்டப் பள்ளிக் கட்டடம்**

* தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளிக்கு கட்டடம் ரூ.55 இலட்சம், மதிப்பீட்டில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இக்கட்டடத்தின் முதல் தளம் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, அக்கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 25.5.05 அன்று திறந்து வைக்கப்பட்டது.

* தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்திற்கேற்ப அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களால் சட்டப் பாடப் புத்தகங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 27 புத்தகங்கள் 25.5.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்

மாணவியர்களுக்கு, 2003–2004 மற்றும் 2004–2005ஆம் கல்வியாண்டுகளில், வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற வில்லெம்.சி.விஸ் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டிகளில் ஆண்டிற்கு 6 பேர் வீதம் கலந்துகொள்ள ரூ.9 இலட்சம் அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

* மேலும், அக்கல்லூரியில் பயிலும் 4 மாணவர்கள் சிட்னியில் நடைபெறும் 14ஆவது மான்பிரட் லாச் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியில் கலந்துகொள்ள ஏதுவாக கூடுதலாக ரூ.3 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு**

* சட்டத்துறை (ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு) மூலம் கடந்த நான்காண்டுகளில், 107 மையச் சட்டங்களும், 51 தமிழ்நாடு சட்டங்களும் ஆக மொத்தம் 158 சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு புத்தக வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், அரசு சட்டக் கல்லூரி ஆசிரியர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட 32 மையச் சட்டங்கள் மற்றும் 90 மாநிலச் சட்டங்கள் தற்போது ஆய்வில் உள்ளன. இவற்றுள், 46 சட்டங்கள் குறித்த பணிகள் முடிக்கப்பட்டு அச்சிடப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

* * *

# தகவல் தொழில்நுட்பத் துறை

உலக வரலாற்றில் தமிழகம் தகவல் தொழில் நுட்பத்தில் ஒரு தகவல் புரட்சியை உருவாக்கிச் சாதனை படைத்து வருகிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு கணினியின் சிறப்புக் கூறுகளான வேகம், நினைவாற்றல், கணக்கிடுதலில் துல்லியம், செயல்முறைப்படுத்துதல் முதலியவற்றைத் தொலைத் தொடர்புத் தொழில் நுட்பத்துடன் இணைத்துத் தகவல் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது.



தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு 1. தரவு (Data) 2. தரவுத் தளங்கள் (Data Base) 3. தகவல்களின் குணம் (Information Character) 4. தரவுச் செயல்முறை (DataProcessing) 5. தரவுத் தள மேலாண்மை (Data Base Management) 6. தரவு அனுப்புகை (Data Transmission) 7. இணைய வடிவமைப்பு (Network) 8. தொகுப்புச் சேவை எண்ணிலக்க வலையகம் (Integrated Service Digital Network - ISDN) 9. இணையம் (Internet) 10. நெறிமுறைகள் (Protocol) 11. இணையத் தளம் (Website) ஆகியவை கூறுகளாக அமைந்துள்ளன.

இணையத்தின் பரிணாம வளர்ச்சி, மனித வாழ்வின் நடைமுறை, சிந்தனை, செயல்பாடு அனைத்திலும் தாக்கத்தையும், மாற்றத்தையும் கொண்டு வந்துள்ளது. இணைய வளர்ச்சியால் இன்று, 1. மின்–வணிகம் (e-commerce), 2. மின்னிதழ் (e-zains) 3. மின்–பணம் (e-cash) 4. மின் தரவுப் பரிமாற்றம் (e- Data inter change) என்று எல்லாம் மின்வெளி சார்ந்த நடைமுறை உலகமாக மாற்றங்கள் தொடர்ந்து கொண்டுள்ளன. இச்சூழலில் இணையமே ஒரு மின் வெளியாய்ப் (Cyber space) பரிணமித்துள்ளது. இம்மின்வெளி ஒரு மெய்நிகர் (Virtual state) போன்றதாக அமைந்துள்ளது.

தமிழக அரசின் அனைத்துத்துறைகளிலும் மின் ஆளுமை (e-governance)ப் பயன்பாட்டின் மூலம் அரசு நிருவாகம் விரைந்து செயலாற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்த தகவல் தொழில் நுட்பக் கொள்கை 2002, உலகத்திலேயே தமிழகம் தகவல் தொழில் நுட்பத்துறையில் முதலிடம் வகிப்பதற்கு ஏற்ற வகையில் கடந்த 4 ஆண்டுகளாக மென்பொருள் உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கு அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துச் செயலாற்றி வருகிறது.

**தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை 2002**

★ தமிழக அரசால் 2002ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் நாள் அறிவிக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை 2002 (Information Technology Policy 2002) தமிழகத்தை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று நாட்டின் கணிசமான அளவு தகவல் தொழில் நுட்பவியல் ஏற்றுமதியில் வளர்ச்சிப் பாதைக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது.

**தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள்**

★ தனியார் துறையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்க, தகவல் தொழில் நுட்பவியல் துறையில் 40க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை 8.5 மில்லியன் சதுர அடி பரப்பளவில் உருவாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 1 மில்லியன் சதுர அடி பரப்பளவில் கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன .

★ சென்னையில் நோக்கியா நிறுவனம் வன்பொருள் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

### அறிவுசார் தொழில் நகரியம்

★ தகவல் தொழில்நுட்பவியல் சேவைகளில் வங்கி, நிதி சேவை, காப்பீடு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் சென்னையை உலகின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் தலைநகரமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அறிவுசார் தொழில் நகரிய மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

### வெளிநாட்டுத் தொழில் முனைவோர்களுக்கு உகந்த இடமாகத் தமிழகம் வளர்ச்சி

★ பன்னாட்டுத் தொடர்புக்காக பார்தி நிறுவனத்தால் 8.2 டெராபைட் திறன் கொண்ட ஏற்கெனவே பதிக்கப்பட்டுள்ள ஒளிவட இணைப்புக்குக் கூடுதலாக விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 5.12 டெராபைட் திறன் கொண்ட ஒளிவடத்தை ஆழ்கடலில் பதிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் முதலீட்டாளர் களுக்கான நட்பு முறையிலான கொள்கைகள், மாநிலத்தில் உள்ள அமைதியான சூழ்நிலை ஆகியவற்றால் வெளிநாட்டு தொழில் முனைவோர் களுக்கு உகந்த இடமாகத் தமிழ்நாடு உருவாக்கப் பட்டுள்ளது.

★ தேசத்தின் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (Information Technology Enabled Services - ITES) மற்றும் வணிக செய்முறை வெளித்திறன் பெறல் (Business Process Outsourcing - BPO) ஆகியவற்றில் குறிப்பாக வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடுத் துறைகளில் தமிழ்நாடு வலிமைமிக்க முக்கிய இணைப்பு மையமாக வளர்ந்து வருகிறது.

### தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் முதன்மை மாநிலம்

★ பொது மற்றும் தனியார் தகவல் சேவையாளர்கள் (Public and Private Communication Providers - PPCPs) இணைந்து ஏறக்குறைய 44,000 கிலோமீட்டர் தூர அளவிற்கு கண்ணாடி ஒளி இழை வடங்களை (Optic Fibre Cable - OFC) மாநிலம் முழுவதும் பதித்துள்ளதன் மூலம் இந்தியாவிலேயே தமிழகத்தைப் பெரும்பான்மைப் பகுதிகளுடன் இணைத்த வகையில் முதன்மை மாநிலமாக உயர்த்தி உள்ளது.

### எல்காட் மாதிரி தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவைப் பயிற்சி

★ தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில்களுக்கு தேவையான தரமிக்க மனிதவள ஆற்றலை உருவாக்குவதற்கு மாநிலத்தில் உள்ள தலைசிறந்த ஐந்து பல்கலைக்கழகங்கள், ஏழு தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து 280 மணிநேர "எல்காட் மாதிரி தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைப்பயிற்சி" வகுப்புகளை எல்காட் நிறுவனம் உருவாக்கி உள்ளது.

### பேராசிரியர்களுக்குக் கணினிப் பயிற்சி

★ 7 தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைத் தொழில் நிறுவனங்கள் மூலமாக 45 பேராசிரியர் களுக்குச் சென்னையில் 6 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

### தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்பவியல் நிகழ்வுகளில் தமிழக அரசு பங்கேற்பு

★ தமிழக அரசு, எல்காட் நிறுவனம் மூலமாக தேசிய அளவில் நடைபெற்ற நிகழ்வுகளான கனெக்ட் 2001, 2002, 2003 மற்றும் 2004, பெங்களூர் ஐடி.காம், இந்தியா சாப்ட் மற்றும் பன்னாட்டுப் பொருட்காட்சிகளான சிபிட் 2003, கோலாலம்பூரில் 2003 டிசம்பர் 2 முதல் 6 வரை நடைபெற்ற "இன்க்ரெடிபில் இந்தியா 2003", ஹாங்காங் ஐசிடி எக்ஸ்போ 2004, ஜிடெக்ஸ் துபாய் 2004 மற்றும் கொரியாவில் நடைபெற்ற இன்டர்நேஷனல் எக்ஸ்போசிஷன் ஆன் கவர்மென்ட் இன்னோவேஷன்ஸ் ஆகியவற்றில் பங்கேற்றுள்ளது.

★ மின்னணு செய்திப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் (Society for Electronics Transactions and Security - SETS) தலைமை அலுவலக செயல்பாடுகளுக்கு இடம் அளிக்க தேசிய அளவில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முன்னணியில் உள்ள மாநிலங்களுக்கிடையே நிலவிய கடும் போட்டியில் தமிழகம் வெற்றி பெற்றுத் தெரிவு செய்யப்பட்டது. மேலும், இச்சங்கத்திற்கு 5,000 சதுர அடி கட்டடத்தை 3 ஆண்டுகளுக்கு வாடகை இல்லாமலும், தரமணியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். அறிவு நகரத்தில் 3 ஏக்கர் நிலமும், உறுப்பினர் கட்டணமான ரூ.60 இலட்சம் தொகையினையும் அரசு சார்பாக வழங்கப்பட்டது.

### தகவல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பூங்கா

★ தகவல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பூங்காவை, பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் 109 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க பாரதியார் பல்கலைக்கழகத்துடன் எல்காட் நிறுவனம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding - MoU) செய்துள்ளது.



### கோயம்புத்தூர் ஐடி. காம் மாநாடு

★ கோயம்புத்தூர் நகரைத் தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு உகந்த இடமாக மேம்படுத்த "கோயம்புத்தூர் ஐடி.காம்" (Coimbatore - IT.com) என்ற மாநாடு 2001, 2002, 2003 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூரில் இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து நடத்தப்பெற்றது.

★ எல்காட் நிறுவனத்தில் "மின் ஆளுமைப் பிரிவு" டிசம்பர் 2003 முதல் செயல்பட்டு வருகிறது.

### ஊரக மக்களின் குறை கேட்டல் மற்றும் குறை தீர்த்தல் சேவை

★ ஊரக மக்களின் குறை கேட்டல் மற்றும் குறை தீர்த்தல் ஆகிய சேவைகளை வலிமைப்படுத்தும் நோக்கில் 1,165 ராசி மையங்கள் (இணையதள ஊரகச் சேவை – ராசி) (Rural Access to Services through Internet - RASI) செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 500 ராசி மையங்கள் 2003–2004ஆம் ஆண்டில் முறைப்படுத்தப்பட்டன.

### "மின்னணு சேவை வழங்கல்" திட்டம்

★ தமிழகத்தை மதிப்பும், வளமும் கொண்ட மற்றும் அறிவு சார்ந்த மாநிலமாக உருவாக்க தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை 2002இல் தெரிவித்தபடி மின்னணு சேவை வழங்கல் (Electronic Delivery of Services - EDS) என்ற திட்டம் உருவாக்கப்பட்டது.

### தலைமைச் செயலகத்தில் தகவல் தொடர்பு தர மேம்பாடு

★ தலைமைச் செயலகத்தில் தகவல் தொடர்பு தரத்தை மேம்படுத்தும் வகையில் சென்னை தலைமையகத்தில் 1,000 இணைப்புகளுடன் கூடிய உள்பேசி இணைப்பகம் ரூ.76 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளது.

★ தலைமைச் செயலக உள்கட்ட வலையமைப்புத் துணைச் சாதனங்கள் அமைக்கும் திட்டத்தின் மூலம் முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு 2mbps கொள்ளளவு உள்ள அதிவேக இணையம் தலைமைச் செயலகத்தில் ரூ.63 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

### இணைய வழி ஊரகச் சேவைத் திட்டம்

★ இணைய வழி ஊரகச் சேவை (ராசி) திட்டம், முன்னோடித் திட்டமாக மதுரை மாவட்டம் மேலூரில் தேவையான ஊரக உள்கட்டமைப்புகளுடன் தொடங்கப் பட்டுள்ளது. பிறப்பு, இறப்பு, வருமானம், சாதி மற்றும் பிறப்பிடச் சான்றிதழ் உடனடிச் சேவை மூலம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஊரகச் சேவை இணைய வழி மறுமலர்ச்சி 1,800க்கும் அதிகமான மையங்களைக் கவர்ந்துள்ளது.

### நில ஆவணங்கள் கணினிமயமாக்கல்

★ பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் நிருவாகம் மற்றும் மேம்பாட்டு வழிமுறைகளுக்கு உகந்த வகையில் நில ஆவணங்களைக் கணினி மயமாக்கும் திட்டம் ரூ.537.60 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### மின்னணு மூலம் தேயிலை ஏல முறை

★ தேயிலை விவசாயிகளுக்கு ஒளிவு மறைவற்ற, உரிய விலை கிடைக்கவும், பரிமாற்றச் செலவு மற்றும் கால நேரங்களைக் குறைக்கும் விதத்திலும் மின்னணு மூலம் தேயிலை ஏலமுறை உலகிலேயே தமிழகத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### போக்குவரத்துத்துறை கணினிமயமாக்கம்

★ போக்குவரத்துத் துறையைக் கணினி மயமாக்கியதன் மூலம் 86 வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் / பிரிவு அலுவலகங்கள் அனைத்திலும் மென்தகடு (Plastic card) ஓட்டுநர் உரிம அட்டைகள் வழங்கப்படுகின்றன.

★ பத்திரப்பதிவுத்துறை, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், கருவூலங்கள், உள்ளாட்சி அமைப்புகள், வணிகவரித்துறை, வனத்துறை, அரசின் கலை மற்றும் மருத்துவக்கல்லூரிகள், சிறுசேமிப்புத்துறை ஆகிய பொதுமக்கள் தொடர்புகொள்ளும் முக்கியமான துறைகள் மற்றும் அலுவலகங்கள் அனைத்தும் கணினி

மயமாக்கப்பட்டு விரைந்த சேவை வழங்கப்பட்டு வருகிறது.

**தொடுதிரைத் தகவல் சாதனம்**

★ 30 மாதிரி தாலுகா அலுவலகங்களில் தொடுதிரை தகவல் சாதனம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் நிலம், பட்டா மதிப்பீடு, பிறப்பு போன்ற தகவல்களை ஒருமுறை தொடுதல் மூலம் பெறலாம்.

**மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முறை**

★ பொதுமக்களின் குறை தீர்ப்பதற்காக மாநில அளவில் ஒரு கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட கணினி அலகுகள் முதன்மைக் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து பெறப்படுகிற புகார்கள் இந்தக் கணினியில் உட்செலுத்தப்பட்டு, பொதுமக்களின் குறைகள் தீர்க்கப்படுகிறது.

★ கணினிக் கல்வித் திட்டம், 1,197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுகிறது. ரூ.18,973 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டிற்கு சுமார் 92,500 மாணவர்கள் தகவல் தொழில் நுட்பவியலில் முழுத்தேர்ச்சி அடைவார்கள்.

**பதிவுத்துறையின் மாநில அளவிலான ஒருங்கிணைப்புத் திட்டம்**

★ தமிழ்நாட்டிலுள்ள 325 பதிவு அலுவலகங்களும் இணைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு பதிவுத்துறை சம்பந்தமான விளக்கங்கள் அளிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் எந்த ஒரு பதிவுத்துறை அலுவலகத்திலிருந்தும் "வில்லங்க சான்றிதழ்" அளிப்பதே "ரெஜிநெட்" அமைப்பதன் நோக்கமாகும்.

**அறிவுக் களஞ்சிய மையம்**

★ அண்ணா பல்கலைக்கழகத்தில் அறிவுக் களஞ்சிய மையம் அமைப்பதற்காக தமிழக அரசு, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் திருவாளர்கள் சன்மைக்ரோ சிஸ்டம்ஸ் ஆகியோருக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.3.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முன்னிலையில் ஏற்பட்டது.

**போக்குவரத்து – "அழைப்பு மையம்" உருவாக்கம்**

★ போக்குவரத்து குறித்த புகார்களைக் கவனிக்க சென்னை மாநகர காவல் துறைக்காக எழும்பூரில் உள்ள நவீன கட்டுப்பாட்டு அறையில் ஒரு "அழைப்பு



மையம்" ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 18.2.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகம்**

★ தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் கல்வியையும், பட்டக் கல்வியையும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஜூன் 2002இல் தொடங்கி வைத்தார்கள்.

★ அயல்நாடுகளைச் சேர்ந்த 175 மாணவர்கள், சான்றிதழ்க் கல்வித் திட்டத்தின் கீழ் முதல் அடிப்படை நிலை மற்றும் இடைநிலைக் கல்வியை நிறைவு செய்துள்ளனர்.

**மின் நூலகம்**

★ தமிழ் இலக்கிய நூல்களின் சிறந்த தொகுப்பாக உள்ள மின் நூலகத்தில் தற்போது 205 புத்தகங்கள் இணையத்தளத்திலிடப்பட்டுள்ளன. 29 கலைச்சொற் களஞ்சியங்களும் மின் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

★ 125 சைவ, வைணவக் கோயில்கள் பற்றிய புகைப்படம் மற்றும் ஒளிக்காட்சிகள் அடங்கிய காட்சியகம் இடம் பெற்றுள்ளது. 12 கோயில்களுக்கு ஒளிக்காட்சிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

★ தமிழர்கள் பயனடையும் வகையில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பு மையங்கள் அமெரிக்காவில் 5, கனடாவில் 1, மலேசியாவில் 1, இலங்கையில் 1, மொரீசியஸ் 1, சுவிட்சர்லாந்து 1, ஜெர்மனியில் 1, ரியூனியனில் 1 ஆக 12 தொடர்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

★ கணினித் தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மென்பொருள்களை உருவாக்க, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியின் (டி.எஸ்.டி.எப்) கீழ் தமிழக அரசு நிதி வழங்கியுள்ளது.

★ ★ ★

# வளர்ச்சிப் பாதையில் வரலாற்றுச் சாதனைகள்




கல்பாக்கத்தில், அணுசக்தி மறுசுழற்சி மற்றும் அணு விஞ்ஞான வாரியத்தின் முதல் மாநாட்டில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி. ஜே. **அப்துல்கலாம்** அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களும் கலந்து கொண்டார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் பழனி மலையில் கம்பிவட ஊர்தி (ரோப் கார்) திட்டத்தைப் பக்தர்களின் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைத்தார்கள். (3.11.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் சென்னையில் 3ஆவது இந்தியா – ஆசியான் வர்த்தக மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். (20.10.2004)



மேதகு தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்ற
திரு. **எஸ். சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
மலர்க்கொத்து வழங்கி,
வாழ்த்துத் தெரிவித்தார்கள். (3.11.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
இந்திய உழவர் உரக்கூட்டுறவு
நிறுவனத்தின் வேளாண்மைத்
தொடுதிரை கணினி மையத்தை
திறந்து வைத்தார்கள். (11.2.2004)





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
புதுதில்லியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கூடுதல் விருந்தினர்
இல்லத்தைத் திறந்து வைத்தார்கள். (16.9.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தமிழக சிறப்பு அதிரடிப்படைக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் ரொக்கப்பரிசுகள், பதக்கங்கள் மற்றும் வீட்டு மனைகள் வழங்கிப் பாராட்டினார்கள். (30.10.2004)




வீடியோ கலந்தாய்வு மூலம்
சிறைக் கைதிகளிடம்
விசாரணை செய்யும் புதிய திட்டத்தை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தொடங்கி வைத்தார்கள். (1.7.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்,
ஆசாரிபள்ளத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி
மருத்துவமனையில், "சுனாமியால்"
காயமடைந்து தீவிர சிகிச்சைப் பெற்றுவருபவர்களை
நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள் (27.12.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம்,
சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள்
மற்றும் தனிவீடுகளைத் திறந்து வைத்தார்கள். (23.10.2004)




புதுதில்லியில் நடைபெற்ற, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் – ஒழுங்கு நிலவரம் பற்றிய
முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் கலந்து கொண்டார்கள். (15.4.2005)



தூய்மை மற்றும் சுகாதாரத்திற்காக மத்திய அரசு வழங்கும் "நிர்மல் கிராம் புரஸ்கார்" விருதினைப் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த 12 கிராம ஊராட்சிகளின் தலைவர்கள், ஒரு ஊராட்சி ஒன்றியம் மற்றும் அதனைச் சார்ந்த 10 ஊராட்சிகளின் தலைவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றார்கள். (3.3.2005)



பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். (28.1.2005)



பல்வேறு மகளிர் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு
ஐ.நா. சபையின் அதிகாரபூர்வ ஆலோசனை அமைப்பான சர்வதேச மனித உரிமைகள்
பாதுகாப்புக் குழு, நன்மதிப்பு மற்றும் மேதகைமைக்கான "தங்கத் தாரகை விருது" என்னும்
தலையாய விருதினை வழங்கியது (11.10.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை
தெற்கு ஆஸ்திரேலியா பிரதமர் திரு.மைக்ரான் மற்றும் 6 பேர் கொண்ட
தூதுக்குழுவினர் சந்தித்துப் பேசினர். (18.10.2004)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களைச்
சந்தித்த அமெரிக்க வர்த்தக குழு
தமிழகத்தில் கடல்நீரைக் குடிநீராக்கும் மையங்கள் அமைக்க
உதவிசெய்வதாக உறுதி அளித்தது. (27.1.2005)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் முன்னிலையில்
"தமிழ்நாடு எச் ஐ வி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப் பாதுகாப்பு மற்றும் சிகிச்சை
வழங்கும் திட்டம்" செயல்படுத்திட, தமிழ்நாடு அரசுக்கும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த
குழந்தைகள் மூலதன நிதி நிறுவனத்துக்கும் திட்ட ஒப்பந்தம் கையெழுத்தானது. (1.3.2005)




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் செல்லிடத் தொலைபேசி நிறுவனமான நோக்கியா தனது உற்பத்தித் தொழிற்சாலையைச் சென்னையில் அமைப்பதற்கென புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. (6.4.2005)



கென்யா நாட்டின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த குழுவினர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து தமிழக மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு செயல்படுகின்ற ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு தங்களது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். (12.4.2005)

# வருவாய்த்துறை

மனித வாழ்க்கையின் அனைத்து வளர்ச்சிக்கும் வருவாய்த்துறை தொடர்பு இன்றியமையாததாக விளங்குகிறது. பொதுமக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளுக்கும் வருவாய்த்துறையின் பங்கு மதிப்பிட முடியாததாகும். சமூக வளர்ச்சிக்கும், மக்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக இத்துறையின் பணி விளங்கி வருகின்றது. அரசின் பல்வேறு துறைகளின் பணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மக்களின் நேரடி தொடர்புக்குட்பட்டத் துறையாக வருவாய்த்துறை செயல்பட்டு வருகிறது. தூய, ஒளிவு–மறைவற்ற மற்றும் நேர்மையான நிருவாகம் நடைபெறவும் பொதுமக்களின் குறைகளைக் கண்டறிந்து அவற்றிற்கு உதவிடும் வகையில் "மனுநீதி நாள்" மூலம் இத்துறை பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறது. நாட்டில் உள்ள நிலங்கள் பராமரிப்பு மற்றும் நிலவரி வசூல் போன்ற பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல் ஏழை எளிய கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு பட்டா வழங்குகின்ற பணிகளையும் வருவாய்த்துறை மேற்கொள்கிறது.

தமிழகத்தை வளர்ச்சிமிக்க மாநிலமாக உருவாக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 4 ஆண்டுகளில் வருவாய்த் துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு ஆக்கப் பூர்வமான செயல் திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் வகையில் வருவாய்த்துறை பணியாற்றி வருகிறது.

## அரசின் சாதனைகள்

### மனுநீதித் திட்டம்

★ மனுநீதித் திட்டத்தின்கீழ் 4.5.2001 முதல் 31.12.2004 வரை 9,18,188 மனுக்கள் பெறப்பட்டு 4,20,816 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 3,30,501 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. மொத்தம் 7,51,317 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள 1,66,871 மனுக்கள் ஆய்வில் உள்ளன.

★ மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டத்தின்கீழ் 2001 முதல் 31.12.2004 வரை 15,17,075 மனுக்கள் பெறப்பட்டு, 11,78,439 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. இவற்றில் 6,23,165 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 5,55,274 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டன. நிலுவையில் உள்ள 3,38,636 மனுக்கள் ஆய்வில் உள்ளன.

### சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதில் புதிய முறை

★ வட்டாட்சியர் அலுவலகங்களில் சாதிச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, பள்ளிகள் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

★ வட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகங்களி லிருந்து பொதுமக்களுக்கு 2005 மார்ச் வரை அனைத்து வகுப்பைச் சார்ந்த 12,60,202 நபர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் உதயம்

★ தருமபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.2.2004இல் தொடங்கி வைத்தார்கள்.

★ கிராம நிருவாக அலுவலர்களுக்கான 3,851 அலுவலகக் கட்டடங்கள் 2001–02ஆம் ஆண்டில் ரூ.23 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2002–03ஆம் ஆண்டில் ரூ.26 கோடி செலவில் 3,740 கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.



### வீட்டுமனைப் பட்டா

★ சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் உள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குகின்ற வகையில் 2001 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரை ஆதிதிராவிடர்கள் 24,316, பழங்குடியினர் 2,307, ஏனைய இனத்தவர் 54,621 என மொத்தம் 81,851 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### நிலப் பட்டா

★ 2001 ஏப்ரல் முதல் 2005 பிப்ரவரி வரை ஆதிதிராவிடர்கள் 2,574, பழங்குடியினர் 129, ஏனைய இனத்தவர் 8,548 என மொத்தம் 11,851 ஏழை விவசாயிகளுக்கு 5,94,311 ஏக்கர் பரப்பிலான நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### நிலச் சீர்திருத்தம்

★ உச்ச வரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப் பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு உயர்ந்தபட்சமாக 3 ஏக்கர் புன்செய் அல்லது 1.5 ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவில் தகுதியுடையோருக்கு ஒப்படை செய்யப் படுவதன் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 4,406 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டு 6,769 ஏக்கர் நிலம் 5,365 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது.

### வறட்சி நிவாரணம்

★ வறட்சி சூழ்நிலையில் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்கும் பொருட்டு 2002–03ஆம் ஆண்டில் ரூ.168.10 கோடியும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.181.37 கோடியும் இயற்கை இடர்பாடு நிவாரண/ தேசியப் பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ 2002 இல் கடுமையான வறட்சியில் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டா பகுதி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புச் சிறப்புத் திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, ரூ.164.16 கோடியில் செயல்படுத்தப் பட்டது. மேலும், டெல்டா மாவட்டங்களில் நிலவிய வறட்சியைக் கருதி, தீபாவளியைக் கொண்டாடும் வகையில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அரிசி, சர்க்கரை, தேங்காய், நெய், காய்கறிகள் மற்றும் ரொக்கம் ரூ.50 அடங்கிய ஒவ்வொன்றும் ரூ.210 மதிப்புள்ள பரிசுப் பைகள் ரூ.21.28 கோடி செலவில் வழங்கப்பட்டன.

### தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம்

★ 20 மாவட்டங்களில் பாதிப்படைந்த 1,05,553 தென்னை விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.21.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ 2002 இல் பருவ மழை பொய்த்ததால் பாதிக்கப்பட்ட நிலமற்ற விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறுகுறு விவசாயக் குடும்பத்தினர் 14.03 இலட்சம் பேர்களுக்கு சர்க்கரைப் பொங்கல் 15.1.2003 முதல் 4.2.2003 வரை வழங்கப்பட்டது.

### விவசாயிகளுக்கு இலவச அரிசி

★ நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் 5.2.2003 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு இதன் மூலம் 31.8.2003 வரை, சென்னை தவிர பிற மாவட்டங்களில் மொத்தம் 9.65 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்தன.

### விவசாயிகளுக்கு நிவாரணம்

★ சென்னை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் 2002–2003ஆம் ஆண்டில் வறட்சி காரணமாக உற்பத்தி இழப்பு ஏற்பட்டுப் பாதிப்படைந்த 28,93,268 விவசாயிகளுக்கு ரூ.240.07 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது.

### விவசாயிகளின் துயர்துடைப்புத் திட்டம்

★ காவிரி டெல்டா மாவட்டங்களில் வறட்சியால் சம்பா நெல் சாகுபடி செய்யாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகள் துயர்துடைக்க ரூ.217.09 கோடியில் சிறப்பு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

### கால்நடைப் பராமரிப்பு

★ வறட்சியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாக்க, 22 மாவட்டங்களில், 313 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கால்நடைப் பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதியும், கால்நடைத் தீவன உற்பத்திப் பண்ணைகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் ரூ.20 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ தமிழகத்தில் நிலவி வரும் கடும் வறட்சியின் காரணமாக மாவட்டங்களில் மல்பரி மரங்கள் பாதிக்கப்பட்டு மல்பரி விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ.75.92 இலட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ பசலி ஆண்டு 1,412 (1.7.02 முதல் 30.6.03) மற்றும் 1,413 (1.7.03 முதல் 30.6.04) ஆகியவற்றுக்கான நிலவரியைத் தள்ளுபடி செய்து அரசாணையிடப்பட்டது.

★ சம்பூர் கிராமின் ரோஜ்கர் யோஜனா சிறப்புக் கூறின் கீழ் வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டும், குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் சென்னை தவிர 29 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

### ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி, சேலை

★ 2004ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ஏழை எளிய மக்களுக்கு அரசின் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், இலவச வேட்டி, சேலை வழங்குதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ 2004 அக்டோபரில் வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் கனத்த மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு உடனடி வெள்ள நிவாரணமாக ரூ.3.26 கோடியும், தொடர்ந்து ரூ.76.50 கோடியும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

### சுனாமி நிவாரண நடவடிக்கைகள்

★ 2004 டிசம்பர் 26 இல் நிகழ்ந்த எதிர்பாராத சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடி நிவாரணமாக ரூ.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பாதிக்கப்பட்ட வள்ளம் படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி வலைவாங்குவதற்கும், கட்டுமரம் பயன்படுத்துபவர்களுக்கு மாற்று மீன்பிடி வலை வாங்குவதற்கும், வள்ளம் படகுகளைப் பழுது

பார்க்க, மறுகட்டுமானம் செய்யவும், சேதமடைந்த 20,000 கட்டுமரங்களுக்கு தேவையான உதவி ஆகிய பணிகளுக்கு ரூ.45.22 கோடி மீனவர்களுக்கு வழங்கப்பட்டது.

★ பாதிப்படைந்த பகுதிகளில் அனைத்து நிவாரணப் பணிகளையும் மேற்கொள்ளும் வகையில் ரூ.395.56 கோடியைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### தற்காலிக வீடுகள்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட 50,000 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்க தலா ரூ.8,000 வீதம் ரூ.40 கோடியைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை அரசால் 11,945 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



### குடியிருப்புத் திட்டம்

★ சுனாமி பாதித்த பகுதிகளில் தலா ரூ.1.50 இலட்சம் மதிப்பிலான 1,30,000 வீடுகளைக் கட்டும் மிகப்பெரிய குடியிருப்புத் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

### முதலமைச்சரின் பொதுநிவாரண நிதி

★ சுனாமியால் இறந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் இறந்த 8,034 நபர்களில் இதுவரை 6,249 பேர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ சுனாமியால் கை, கால் / கண்கள் இழந்தோருக்கு ரூ.3.5 கோடி வழங்க ஆணையிடப்பட்டு, இதுவரை 2,390 நபர்களுக்கு ரூ. 122.10 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

### வீடு மற்றும் உடைமைகளை இழந்தோர்களுக்கு உதவி

★ சுனாமியால் வீடு மற்றும் உடைமைகளை இழந்தோரில் இதுவரை 1,18,586 குடும்பங்களுக்கு ரூ.57.81 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் மீன் தொடர்பான சிறுதொழில் புரியும் 1,76,840 குடும்பங்களுக்கு நிவாரணமாக ரூ.51.39 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், தினசரி வேலைவாய்ப்பை இழந்த மற்றும் கடலோரத்தில் வசித்து பாதிக்கப்பட்ட 24,764 மீனவர்களுக்கு ரூ.7.43 கோடி வழங்கப் பட்டுள்ளது.

★ நடமாடும் கடை, தற்காலிகக் கடை மற்றும் நிரந்தரமான கடை உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு நிவாரணம் வழங்க ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிழைப்பூதியம்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட 3 இலட்சம் மக்களுக்குப் பிழைப்பூதியம் வழங்கும் பொருட்டு அரசு ரூ.122 கோடி ஒதுக்கீடு செய்து, பிப்ரவரி 2005இல் 2,50,000 குடும்பங்களுக்கு ரூ.34.21 கோடி மதிப்பிலான நிவாரணமும், மார்ச் 2005இல் 1,15,435 குடும்பங்களுக்கு ரூ.15.76 கோடி மதிப்பிலான நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளது.

### மாணவர்களுக்குப் பாடநூல்கள் இலவசம்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடநூல்கள், நோட்டுகள், சீருடைகள் வழங்க ஆணையிடப்பட்டு 1,05,264 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இம்மாணவர்களுக்கு 2005–2006 கல்வியாண்டு முடியும்வரை அனைத்துப் பள்ளிக் கட்டணங்களிலிருந்தும் விலக்களிக்கப் பட்டுள்ளது. 121 பள்ளிகளில் தனியே பொதுத் தேர்வு நடத்தப்பட்டது.

★ சுனாமியால் இழந்த பொருள்களை அப்புறப்படுத்துதல், இறந்தவர்களைப் புதைத்தல் போன்றவற்றிற்கு ரூ.5.25 கோடி ஒதுக்கப்பட்டு இதுவரை ரூ.4.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள்

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட ரூ.1.50 இலட்சம் வீடிழந்த குடும்பங்களுக்கு ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 74,673 டிரங்குப் பெட்டிகள், 5,183 ஸ்டவ் அடுப்புகள் மற்றும் 54,212 எவர்சில்வர் குடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ சுனாமி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட 4,799 துப்புரவுத் தொழிலாளர்களின் சேவையை அங்கீகரித்து ரூ.1.20 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

### சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி

★ சுனாமியால் 5,598.89 எக்டேர் பரப்பளவில் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்காக ரூ.1.80 கோடி ஒதுக்கீடு



செய்துள்ளது. இதன்மூலம் 13,158 பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயனடைவர்.

★ சுனாமியால் பாதிக்கப்பட்டு 13,569.29 எக்டேர் உப்பு மண்டியுள்ள விவசாய நிலங்களைச் சீர்படுத்த ரூ.16.96 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கால்நடைகளுக்கு நிவாரணம்**

★ வண்டியிழுக்கும் கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க ரூ. 2.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.1.77 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**கன்னியாகுமரி கடலோரப் பகுதிகளில் சுவர் அமைக்கும் பணி**

★ கன்னியாகுமரி மாவட்ட கடலோரப் பகுதிகளில் துண்டுக் கற்களாலான சுவர் அமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுனாமியால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்குப் பாதுகாப்பு**

★ சுனாமியால் பெற்றோரை இழந்த குழந்தைகளைத் தங்கவைக்க குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காப்பகங்களில் கடலூரில் 73, நாகையில் 109 மற்றும் நாகர்கோயிலில் 29 ஆதரவற்ற குழந்தைகள் தங்கவைத்துச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றனர்.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற வளர் இளம் பெண்கள் அரசால் நடத்தப்படும் சேவை இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**ஆதரவற்ற குழந்தைகளுக்கு வைப்புநிதி**

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வைப்புநிதியாக வைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

★ திருமணமாகாத 18 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற பெண்கள் சேவை மையங்களில் அனுமதிக்கப்பட்டு, வேலைவாய்ப்புப் பயிற்சி வழங்கவும் அவர்களது பெயரில் தலா ரூ.3 இலட்சம் வைப்பு நிதி முதலீடு செய்யவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

★ நடைமுறையில் உள்ள ஊதிய உதவித் தொகைத் திட்டங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆதரவற்றோருக்கும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

★ சுனாமி பாதித்த 48 மணி நேரத்தில் அப்பகுதிகளில் மின் இணைப்பு, நீர் வழங்கல் பணிகள் மேற்கொள்ளப் பட்டன.

**நில ஆவணங்களைக் கணினிமயமாக்குதல்**

★ தமிழ் நிலம் எனப்படும் நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ 31.12.2003 வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராமங்களில் நகர்ப்புறம் சாராத கிராமங்களின் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

★ மாநிலத்திலுள்ள 206 வட்டங்களில் 201 வட்டங்கள் ON LINE வசதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

★ 127 வட்டங்களில் தொடுதிரைத் தகவல் கணினி மேடை (TSCK) நிறுவப்பட்டு நில ஆவணங்கள் கணினி வழி வழங்கப்பட்டு வருகின்றன.

**நிலஅளவை புலப்படங்கள் கணினிமயம்**

★ செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிச் செட்டிபாளையம் ஆகிய நான்கு வட்டங்களில் புலப்படங்கள் கணினிமயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்நான்கு வட்டங்களிலும் சுமார் 1.22 இலட்சம் புலப்படங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.

★ ஒரு முன்னோடித் திட்டமாக, பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்திலும், 3 சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கணினி மூலம் தகவல் பரிமாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**கிராம வரைபடங்கள் ஸ்கேனிங்**

★ நிலவியல் தகவல் முறையை மிகத் துல்லியமாக மேற்கொள்ள ஏதுவாக விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் (GPS) என்னும் ஒரு முன்னோடித் திட்டத்தை ரூ.1.20 கோடியில் மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

★ 29 மாவட்டங்களின் கிராம வரைப்படங்களை ஸ்கேன் செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

★ நில ஆவணத் துறையில் கணினி வழி நிருவாகத்தில் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

"காணி நிலம் வேண்டும் பராசக்தி"
என பாட்டு வேந்தர் பாரதியே கூறியுள்ளார்.

பாரதியின் இலட்சியத்தையும் தாண்டி, "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற குறிக்கோளுடன் தமிழக அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறைவிடம் ஆகும். அதில் மனிதனின் உலகமாக விளங்குவது அவன் வாழும் இடமாகும். மேலும், அந்த இடம் சொந்தமாக மாறும் பட்சத்தில் உலகமே அவனுக்கு சொந்தமாகி விடுகின்றது.

மனிதனின் இந்த அடிப்படைத் தேவை பூர்த்தி அடையும் பட்சத்தில், பொருளாதாரத்தில், மனிதனின் நிலை தானாக உயர்வடைகிறது. ஒவ்வொரு குடிமகனின் தேவைகள் நிறைவேற்றப்படும்போது, ஒட்டுமொத்தச் சமுதாயமே மேம்படுகிறது.

தமிழக அரசு, 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற குறிக்கோளை ஒரு குறியீடாக, கொள்கையாகக் கடைப்பிடித்து வருகிறது. தமிழக அரசின் இந்தக் குறிக்கோளினைச் செயல்படுத்தும் வண்ணம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகிய அமைப்புகள் மூலம், பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு சீரியத் திட்டத்தின் மூலம், தகுந்த குடியிடங்களை உருவாக்கித் தரும் அரும்பெரும் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரியத் திட்டத்தின் மூலம் தமிழக அரசு, செயல்படுத்தி வருகிறது.

## அரசின் சாதனைகள்

### சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சீர்மிகு சென்னை என்ற இலக்கினை மையமாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடந்த நான்கு ஆண்டுகளில் (2001 முதல் 2005 வரை) கீழ்காணும் அரிய திட்டங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல் படுத்தியுள்ளது.

* கோயம்பேடு சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்
* ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்
* மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம்
* காய்கறிக் கழிவினை மூலப் பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் திட்டம்
* திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் இரண்டாம் நிலை
* உள் கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்
* வரன்முறைப்படுத்தும் திட்டம்
* தகவல் தொழில்நுட்ப மற்றும் உயிரி தொழில்நுட்ப கட்டடங்கள் கட்ட கட்டுப்பாட்டு விதிகளில் தளர்வு அளித்தல்
* வெளிவட்டச் சாலை அமைத்தல்

மேற்காணும் திட்டங்களுடன் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் உயர் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றை ஊக்குவிக்கும் முகமாக, வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் சிலவற்றைத் தளர்த்தி மேற்காணும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயர்தொழில்நுட்பத் துறையினைச் சென்னைப் பெருநகர் பகுதிகளில் வளர்ச்சியடையச் செய்வதின் மூலம் எதிர்காலத்தில் இப்பகுதிகளில் மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சி ஏற்படும் நல்ல வாய்ப்பாக அமையும்.

### சென்னைப் புறநகர் பேருந்து நிலையம்

* சென்னை கோயம்பேட்டில் மிகப்பெரிய புறநகர் பேருந்து நிலையம் 37 ஏக்கர் பரப்பளவில் ரூ.103 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, செவ்வனே செயல்பட்டு வருகிறது. சென்னை விமான நிலையத்திற்கு இணையாக இப்பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு, பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வருகிறது.

### ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம்

* கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தின் அருகில், ஒப்பந்த ஊர்தி பேருந்து நிலையம் ரூ.3 கோடி செலவில் சுமார் 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.



மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம்

✶ உலகிலேயே இரண்டாவது அழகான கடற்கரையாக விளங்கும் அண்ணா நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் வரையிலான 3.2 கி.மீட்டர் தூரமுள்ள கடற்கரையோரப் பகுதிகள், ஆண்டுக்கு ரூ.36 இலட்சம் செலவில் இயந்திரத்தின் மூலம் அழகுப்படுத்தப்பட்டு வருகிறது.

**காய்கறிக் கழிவினை மூலப்பொருளாக்கி மின் உற்பத்தி**

✶ காய்கறிக் கழிவினை மூலப்பொருளாக்கி மின் உற்பத்தி செய்யும் ஓர் முன்னோடித் திட்டம், ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 230 கிலோவாட் வீதம் ஆண்டிற்கு 17.20 இலட்சம் மின்சக்தி உற்பத்தியுடன் 10 டன் இயற்கை உரக்கட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**திரளான துரித ரெயில் போக்குவரத்துத் திட்டம்**

✶ திரளான துரித ரெயில் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ், திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான 11.17 கி.மீட்டர் நீள திட்டப் பணிகள் ரூ.706 கோடி செலவில் மத்திய – மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது.

**உள்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டுத் திட்டம்**

✶ சென்னைப் பெருநகரப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளைத் துரித வேகத்தில் மேம்படுத்துவதற்காக இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரத்தில் வீட்டுவசதி, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதி, சாலை வசதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 2004–05ஆம் நிதியாண்டில் ஓராண்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2,007.12 கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

**வரன்முறைப்படுத்தும் திட்டம்**

✶ 31.3.2002க்கு முன் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களை ஒழுங்குப்படுத்தி வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், இதுவரை ரூ.228.19 கோடி மதிப்பிலான தொகை பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப கட்டடங்கள் கட்ட கட்டுப்பாட்டு விதிகள் தளர்வு**

✶ தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இத்தகைய தொழிற்கூடங்கள் கட்டுவதற்கு கட்டுபாட்டு விதிகளில் சிலவற்றைத் தளர்த்தி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் திட்ட அனுமதியை இக்குழுமம் வழங்கி வருகிறது.

**வெளிவட்டச்சாலை**

✶ நகரின் மையப்பகுதியின் நெருக்கடியைக் குறைக்கும் முகமாகச் செயல்படுத்தப்படும் பணியில் சென்னை மாநகரின் வடக்கு எல்லையான மீஞ்சூரையும் தெற்கிலுள்ள வண்டலூரையும் இணைக்கும் வகையில் 6.2 கி.மீ. நீளத்தில் வெளிவட்டச்சாலை விரைவில் உருவாக்கப்படவுள்ளது.



**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

✶ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில், நகர்ப்புறக் குடிசைப்பகுதி வாழ் ஏழை மக்களுக்காக 27,962 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், தனி வீடுகளும் மற்றும் 9,060 கல்நார் ஓட்டு கூரைக் குடியிருப்புகளும் ரூ.249.50 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளன.

✶ கடந்த நான்கு ஆண்டுகளில் வெள்ளக் குறைப்புப் பணிகளின் கீழ் சென்னை ஒக்கியம் துரைப்பாக்கத்தில் ரூ.26.16 கோடி செலவில் 3,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்

✶ குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ் பிற நகரங்களில் குடிசைப் பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு அவர்கள் முன்னர் வாழ்ந்த இடங்களிலேயே ரூ.8.59 கோடி செலவில், 816 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

✶ தமிழ்நாடு சிறப்பு நல நிதியின் மூலம் – அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகளின் கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 64 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.77 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

✶ 10 ஆவது நிதிக்குழு மூலம் பெறப்பட்ட சிறப்பு மானிய நிதியுதவியினைக் கொண்டு, சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் 1,624 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.



## சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

✶ சென்னை நகரில் செல்லும் முக்கிய நதிகளின் கரைகளில், தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் மீதமுள்ள 5,164 குடும்பங்களை மறு குடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக, 5,164 குடியிருப்புகள் ரூ.57.28 கோடி செலவில் கட்டப் பட்டுள்ளன.

## தீப்பிடிக்காத வீடுகள் அமைத்தல்

✶ கடந்த 4 ஆண்டுகளில், சென்னை மாநகரில் நல்ல சுற்றுச் சுவர்களுடன் கூடிய தீப்பிடிக்காத கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் 9,060 ஏழைக் குடும்பங்களுக்கு ரூ.15.63 கோடி செலவில் கட்டப்பட்டு அவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

✶ வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கான்கிரீட் தளம், கூரைத் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன் கூடிய 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட 9,500 தனி வீடுகள் ரூ.38 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.20 கோடி செலவில் 5,000 தனி வீடுகள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✶ பெருநகரங்களில் வாழும் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களை மறு குடியமர்த்திடும் வகையில் 11 ஆவது நிதிக்குழுவின் சிறப்பு மானிய உதவியின் கீழ், ரூ.49 கோடி செலவில், சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் 5,172 குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன.

✶ சென்னை நகரிலுள்ள 30,514 பழைய பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.14.23 கோடி செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

✶ அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தண்ணீர் வசதிகளை மேம்படுத்திடும் வகையில் ரூ.76 இலட்சம் செலவில் 100 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

✶ தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியத்தால் நிறைவேற்றப் பட்ட அனைத்து 144 அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளிலும் ரூ.23.61 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

## ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள்

✶ குடிசைப் பகுதிகளில் வாழும் 45,889 ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களுக்கு ரூ.76.56 கோடி செலவில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டு, அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப் பட்டுள்ளது.

## மகளிர் தொழில் முனைவோர் மேம்பாடு

✶ மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற 19,306 மகளிருக்கு ரூ.195 இலட்சத்தில் உரிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

✶ **கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் ரூ.249.51 கோடி செலவில் 1,21,898 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், தனி வீடுகள் மற்றும் கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.**

## நகரமேம்பாடு

✶ **நகர குடிசைப் பகுதிகளில் வாழும் 30,124 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.5.25 கோடி செலவில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.**

✶ ✶ ✶

# சுற்றுச்சூழல் மேம்பாட்டுத்துறை

**நா**ட்டின் வளர்ச்சிப் பணிகளும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளும் ஒன்றுக்கு ஒன்று பாதிப்பு இல்லாத வகையில் பின்னிப்பிணைந்து செயல்படுவதன் மூலமே நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உருவாக்க முடியும். தமிழகத்தின் வளர்ச்சிக்காக, மேம்பாட்டுப் பணிகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுத்தி வருகிற தமிழக அரசு, இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழலைப்



பாதுகாப்பதற்கும் பல்வேறு அரிய திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

வனப்பகுதிகளைச் சார்ந்துள்ள கிராம மக்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவேற்றிட தமிழகத்தில் உள்ள வன வளத்தினைஅதிகரிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 'காடு வளர்ப்புத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் வளம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்பட்டு காடுகளை ஒட்டிய கிராமங்களின் வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப் படுகிறது.

## அரசின் சாதனைகள்

### தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

* தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,946.40 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஐந்து நகரங்களில் மாசுத்தடுப்புப் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்சி, குமாரபாளையம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று நகரங்களில் இப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பவானியில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிப்பாளையம் நகரத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

* தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் 7 நகரங்களில் புதிதாகச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடந்த நான்கு ஆண்டு காலத்தில் 28.02.2005 வரை ரூ.22,438.83 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செலவிடப் பட்டுள்ளன.

### சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

* சென்னைப் பெருநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.49,152 இலட்சம் ஆகும். கடந்த 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் ரூ.29,766.71 இலட்சம் செலவிடப் பட்டு குழாய் பதிக்கும் பணியில் 97 சதவிகிதம் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 95 சதவிகிதப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

### தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

* தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், உதகை ஏரியின் பணிகளுக்காக பிப்ரவரி 2005 வரை மத்திய அரசிடம் பெற்ற ரூ.171 இலட்சத்தில் ரூ.142.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நுண்ணுயிர் தொழில்நுட்பத்தின் மூலம் உதகை ஏரி தற்போது தூய்மையாகியுள்ளது. கொடைக் கானல் ஏரியில் பணிகளுக்காகப் பெறப்பட்ட ரூ.200 இலட்சத்தில் ரூ.33.40 இலட்சத்திற்குரிய பணிகள் கொடைக்கானல் ஏரியில் தற்போது முடிக்கப்பட்டுள்ளன.

### முன்னோடி சூழல் நகரம் உருவாக்கல்

* சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல் படுத்த ஏதுவாக சூழலுக்கு உகந்த முன்னோடி நகரங்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேசிய சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையம் (NEERI) மூலமாக ரூ.2.50 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

### அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்யும் பணி

* தூத்துக்குடி பகுதிக்கு வளர்ச்சிப் பணிகளின் தாக்கத்தைத் தாங்கும் அளவினை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்யும் பணி ரூ.5.22 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புதுதில்லி நீர் மற்றும் எரிசக்தி ஆலோசனை சேவை மையம் (வாப்கோஸ்) என்ற நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

### சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகள்

* சென்ற நான்கு ஆண்டுகளில் 20க்கும் மேற்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த கருத்தரங்கங்கள், கருத்துப் பட்டறைகள், நடத்தப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டு காலத்தில் அனைத்துச் சுற்றுச் சூழல் விழிப்புணர்வுப் பணிகளுக்காகத் தமிழக அரசினால் ரூ.53 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### தேசிய பசுமைப் படை

* மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய பசுமைப் படை திட்டத்தில் தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 150 பள்ளிகள் வீதம் 29 மாவட்டங்களில் 4,350 பள்ளிகளில் தேசிய பசுமைப்படை தொடங்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென கடந்த 4 ஆண்டுகளில் ரூ.128.84 இலட்சம் மைய அரசிடமிருந்து பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

### சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கு விருது

* சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரை ஆகிய பிரிவுகளில் பரிசுகள், சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் உலக சுற்றுச்சூழல் தின விழாவின்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையிலும் 42 நிறுவனங்கள் / வல்லுநர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### சுற்றுச்சூழல் தகவல் மையம்

* உலக வங்கியின் உதவியுடன் மத்திய அரசு செயல்படுத்தி வரும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திறனை ஊக்குவிக்கும் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் (EMCB - TAP Environmental Management Capacity Building Technical Assistance Project) "சுற்றுச் சூழல் தகவல் மையம்" (ENVIS - Environmental Information System) ஒன்று தமிழ்நாடு அரசின் சுற்றுச் சூழல் துறையில் அமைக்கப்பட்டுள்ளது.

* சுற்றுச்சூழல் தகவல் மையத்தினால் 5.12.2002 அன்று உயிர்ப்பன்மயம் குறித்து ஒரு கருத்துருப் பட்டறையும், 27.8.2003 அன்று நதிநீர்ப் பாதுகாப்பு குறித்த கருத்துப் பட்டறையும் நடத்தப்பட்டன. இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ.12.44 இலட்சம் மத்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2005 வரை ரூ.10.92 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

### தமிழக சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரித்தல்

* மத்திய அரசு நிதி உதவியுடன் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் மாநில சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி இத்துறையால் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென மத்திய அரசு ரூ.12.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

### கோவில் குன்றுகளில் சூழல் – மறு சீரமைப்பு முன்னோடித் திட்டம்

* கோவில் குன்றுகளில் சூழல் – மறு சீரமைப்பு முன்னோடித் திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் கோவிலின் குன்றுப் பகுதிகளை ரூ.9 இலட்சம் திட்டச் செலவில் பசுமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தரிசாகவும், தரங்குன்றியும் உள்ள மலைப் பகுதியில் மரக் கன்றுகள் நடும் பணி வனத்துறை மூலம் ரூ.6 இலட்சம் செலவில் நிறைவு பெற்றுள்ளது.

### சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

* மாநிலத்தில் பல்வேறு பல்கலைக்கழகங்களின் வல்லுநர்களிடமிருந்து சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கருத்துருக்கள் பெறப்பட்டு, வல்லுநர் குழு மூலம் மூன்று சிறந்த கருத்துக்கள் தேர்வு செய்யப்பட்டன. அரசு ஒதுக்கிய ரூ.10 இலட்சத்தில் சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை, சி.பி.ஆர். சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியவற்றிற்கு ரூ.9.78 இலட்சம் ஆராய்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### சுயஉதவிக் குழுக்கள் மூலமாக சுற்றுச்சூழல் மேம்பாடு

* கழிவுக் காகிதங்களிலிருந்து பயனுள்ள காகிதம் தயாரித்து, காகிதப் பை போன்ற பொருட்கள் தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க ரூ.12 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஐந்து மாநகராட்சிகளில் தலா ஒரு தன்னார்வ நிறுவனம் மூலம் சுயஉதவிக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### தூய்மைமிகு பசுமைத் தெருக்கள் – முன்னோடித் திட்டம்

* தூய்மைமிகு பசுமைத் தெருக்கள் – முன்னோடித் திட்டம், சென்னை மாவட்டத்திலுள்ள 40 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல் படுத்த பள்ளி ஒன்றிற்கு ரூ.18,750 வீதம் 40 பள்ளிகளுக்கு ரூ.7.50 இலட்சம் வழங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்கள்

* நிலங்கள் பாலைவனமாவதைத் தடுக்கும் முன்னோடித் திட்டம் 100 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

* சூழலுக்குகந்த நகரமாகத் திருவண்ணாமலை நகரினை மாற்றுவதற்குரிய சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் 2005 – 2006 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

* பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் குன்றில் ரூ.10 இலட்சம் செலவில் பல்வேறு சூழல் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

✶ சோளிங்கர் மலையில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள சூழல் மறுசீரமைப்புப் பணிகளின் தொடர்ச்சியாகக் கோயில் அடிவாரத்திலுள்ள திருக்குளம் தூர்வாரப்பட்டு ரூ.6 இலட்சம் செலவில் புதிய நந்தவனம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம்**

✶ பசுமைப் போர்வைத் திட்டத்தின்கீழ் தொழிற்சாலைகளில் சுமார் 30 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுப் பாதுகாத்து வளர்க்கப்படுகின்றன.



**அபாயகரமான கழிவுகளை வெளியேற்ற தீவிர கண்காணிப்பு**

✶ அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றிற்காக ஒரு பொது அமைப்பினை நிறுவுவதற்கு காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலக்கோட்டையூரில் ஓர் இடம் அரசினால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பொது அமைப்பினை நிறுவ பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்புகள் திருப்பூர் மற்றும் கரூர் பகுதியில் தலா ஒரு இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**நகர திடக்கழிவு மேலாண்மை**

✶ நகர திடக்கழிவுகளை உரமாக்கும் பணிகளை மேற்கொள்ள 23 நகராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன.

**மருத்துவக் கழிவுச் சுத்திகரிப்பு**

✶ தனியார் மருத்துவ நிலையங்களுக்காக, நவீன பல்முனை பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் நிலையங்களை ஏற்படுத்தி, மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மையில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தின் மூலம் 11 பொது அமைப்புகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டு, 6 அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. இத்தகைய விரிவான மேம்பட்ட மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகளைக் கையாளும் முறை வேறெந்த மாநிலத்திலும் இல்லை.

**தூக்கி எறியும் பிளாஸ்டிக்கினைத் தவிர்த்தல்**

✶ தூக்கி எறியும் பிளாஸ்டிக்கின் தீமைகள் குறித்து, நவீன மக்கள் தொடர்பு சாதனங்கள் மற்றும் பாரம்பரிய முறைகள் வழியாக முறையான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டன. பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பனை ஓலைகளில் பொருட்கள் தயாரிப்பதில் சுயஉதவித் தொழில் முனைவோர்களுக்கு கிராமத் தொழில் ஆணையத்தின் பனை மற்றும் பனைப் பொருட்கள் நிறுவனம் மூலம் 12 வகையான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

**காற்று ஒலிப்பான் போன்ற ஒலி மாசினைத் தவிர்த்தல்**

✶ அனைத்து மாவட்டங்களும் காற்று ஒலிப்பான் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதுமாக பேருந்துகள் மற்றும் லாரிகளில் பொருத்தப்பட்டிருந்த 52,586 காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டுள்ளன.

**சுற்றுச் சூழல் ஊக்குவிப்பிற்குப் பசுமை விருதுகள்**

✶ பசுமை விருது 2002 – சேலம், நீலகிரி, விருதுநகர் மாவட்ட ஆட்சியர்களுக்கும், பசுமை விருது 2003 – கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கும் , பசுமை விருது 2004 – கடலூர், கன்னியாகுமரி மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்டது.

**புதுமை படைப்போருக்கான பசுமை விருது**

✶ சுற்றுச்சூழலைப் பாதுகாக்க "புதுமை படைப்போருக்கான பசுமை விருது" அரசால் 2003ஆம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வனத்துறை

**தமிழ்நாடு**
**காடு வளர்ப்புத் திட்டம்**

✶ ஜப்பான் நாட்டின் சர்வதேச கூட்டுறவு நிதியத்தின் கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் நோக்கமானது, தரம் தாழ்ந்த காடுகள் மற்றும் அதனருகில் உள்ள 1,000 கிராமங்களின் அருகாமையில் உள்ள ஏனைய நிலங்களிலும் அழிந்த காடுகளின் உயிரினச் சூழல் மற்றும் சுற்றுச் சூழலைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதாகும். இத்திட்டமானது நீர்ப்பிடிப்புப் பகுதிகளை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

✶ ஜப்பான் நாட்டின் சர்வதேசக் கூட்டுறவு நிதியம் 2002–03 முதல் 2003–04 வரை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்து மேலும், 258 திட்ட கிராமங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.

✶ தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 1.80 இலட்சம் எக்டேர் பரப்பில் தரமிழந்த காடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினச் சூழல் மேம்படுத்தப்பட்டதுடன் 568 திட்டக்

கிராமங்களில் மக்கள் நலப் பணிகள் ரூ.272.22 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

* காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட மனித சக்தியளவு 249.10 இலட்சம் மனித நாட்களாகும். பயனடைந்தோர்களின் எண்ணிக்கை 78,245.

* நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளாக 12,038 தடுப்பணைகளும், 1,232 கசிவு நீர்க்குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன.



தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் – II

* ரூ.567.42 கோடி மதிப்பீட்டில், 2005–06 முதல் 2012–13 முடிய எட்டு ஆண்டு காலத்தில், 800 இடைபடுகாடு கிராமங்களில் (650 ஒருங்கிணைக்கப் பட்ட நீர்ப்பிடிப்பு வளர்ச்சிப் பணிகளின் கீழும் 150 ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும்) 1,755 சதுர கி.மீட்டர் பரப்பில் தரம் குன்றிய காடுகளைத் தரமிக்க காடுகளாக மேம்படுத்தும் வகையில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் – II செயல்படுத்தப்படவுள்ளது.

**மரம் வளர்ப்பு மற்றும் தரிசு நில மேம்பாட்டில் தலைசிறந்து விளங்கியவர்களுக்கு "இந்திரா பிரியதர்ஷினி விருக்ஷமித்ரா" விருது**

* தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினைச் சிறப்பாக நடைமுறைப்படுத்திய வேலூர் வனக் கோட்டத்திற்கும், தருமபுரி மாவட்டம் உங்கட்டி கிராம வனக் குழுவிற்கும், திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி கிராமம் திரு. என்.எஸ்.ஏ. வேலு முதலியார் அவர்களுக்கும் ரூ.50,000 ரொக்கப் பணம் மற்றும் பதக்கத்தினைக் கொண்ட "இந்திரா பிரியதர்ஷினி விருக்ஷமித்ரா" விருது வழங்கப் பட்டது.

* கடந்த 4 ஆண்டுகளில் 2,727.750 மெட்ரிக் டன் சந்தன மரக் கட்டைகளை ஏலம் விட்டதின் மூலம் ரூ.273.07 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

**வனக் குற்றவாளி வீரப்பனைக் கொல்ல அதிரடிப்படையினருடன் பணியாற்றிய வனக்காவலர்களுக்கு ஊக்கத் தொகை**

* வனக் குற்றவாளி வீரப்பன் கொல்லப்பட்ட தினத்தில் அதிரடிப்படையினருடன் பணிபுரிந்த வனப் பணியாளர்கள் அனைவருக்கும் தலா ரூ.1 இலட்சமும், பதவி உயர்வும் வழங்கப்பட்டது. மேலும், பணியில் ஈடுபட்ட 51 நபர்களுக்கு ரூ.51 இலட்சமும், உயிரிழந்த 3 வனப் பணியாளர்களின் குடும்ப வாரிசுகளுக்கு ரூ.29.20 இலட்சமும் வழங்கப்பட்டது.

* வீரப்பனைப் பிடிப்பதற்கு உறுதுணையாகப் பணியாற்றிய வன அலுவலர்கள் 50 பேருக்கு வெகுமதியாக ரூ.29 இலட்சங்களும், பங்கு கொண்டதற்குப் பதக்கமும், பதவி உயர்வும் மற்றும் பெறப்படும் ஊதிய விகிதத்தில் ஒரு படி மேல்நிலையிலும் நிர்ணயிக்கப்பட்டு வழங்கிட ஆணையிடப்பட்டது.

**கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள்**

* சுனாமி தாக்குதலால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழகக் கடலோரப் பகுதிகளில் கடலோரத் தொடர் தடுப்புத் தோட்டங்கள் மற்றும் சதுப்பு நிலக்காடுகளில் மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.10 கோடி மதிப்பீட்டிலான கருத்துரு, உலக வங்கியின் நிதியுதவி பெற அனுப்பப்பட்டுள்ளது.

**வனவியல் விரிவாக்கச் செயல்பாடுகள்**

* வன விரிவாக்க மையத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 297 எக்டேர் நிலப்பரப்பில் சுமார் 664 முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் நெல்லி, கட்டு புளி, சவுக்கு, மூங்கில், பலா, வேம்பு, சொர்க்க மரம் போன்ற செடிகளைக் கொண்டு செயல் விளக்கத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வன விரிவாக்க மையங்களின் மூலம் சுமார் 3,500 விவசாயிகளுக்கு மரங்கள் வளர்ப்பது சம்பந்தமான தொழில் நுட்பப் பயிற்சியும், சாசர் முறையில் மழைநீர் சேகரித்து மரங்கள் வளர்ப்பது போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

* 575 சுயஉதவிக் குழு நபர்களுக்கு மண்புழு உரம் தயாரிப்பது, மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**யானைகள் மற்றும் இதர வன உயிரின நீர்த் தேவைக்கு ஆழ்குழாய்க் கிணறுகள்**

* ஈரோடு, தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வனப் பகுதிகளில் உள்ள யானைகள் மற்றும் இதர வன உயிரினங்களின் நீர்த் தேவைக்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்த 79 ஆழ் குழாய்க் கிணறுகள் மற்றும் நீர்த் தொட்டிகள் ரூ.76.10 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன.

**யானைகள் புத்துணர்வு முகாம்**

* கோயில் யானை மற்றும் தனியாருக்குச் சொந்தமான யானைகளுக்கு முதுமலையில் 18.11.2003 முதல் 30 நாட்களுக்குப் புத்துணர்வு முகாம் நடத்த ஆணையிடப்பட்டு, 100 யானைகள் இம் முகாம்களின் மூலம் பயனடைந்தன. தொடர்ந்து 2004–ஆம் ஆண்டிலும் யானைகள் முகாம் நடத்தப்பட்டது.



### மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு

* அரசால் தோற்றுவிக்கப்பட்ட அறக்கட்டளையின் நிதியான ரூ. 140 கோடி மதிப்பீட்டிலான மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 18.7.2002–இல் தொடங்கி வைக்கப்பட்டது.

### நவீனமயமான புவித் தகவல் தரவு மையம்

* முதன்மைத் தலைமைப் பாதுகாவலர் அலுவலகத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், 2001–02ஆம் ஆண்டு ரூ.102.986 இலட்சம் செலவில் ஐதராபாத்தில் உள்ள விண்வெளித்துறையின்கீழ் இயங்கும் தேசிய தொலையுணர்வு மையத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் ஒரு நவீன மயமான புவித் தகவல் தரவு மையம் ஒன்று அமைக்கப்பட்டது. மேலும், புவித் தகவல் தரவு மையத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக மாநில அரசு கூடுதலாக ரூ.179.70 இலட்சம் நிதியளித்துள்ளது.

### புவித் தகவல் தரவு மையத்தின் செயல்பாடுகள்

* செயற்கைக்கோள் தொலையுணர்வு படம் மற்றும் புவித்தகவல் முறை ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் "மின்னணு வன வரைபடத் தொகுதி" செய்து முடிக்கப்பட்டுள்ளது. இவ்வன வரைபடத் தொகுதி தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காப்பு வனங்களின் "வனமூடிய பரப்பினை" குறித்த தகவல்களை (அடர்த்திக் காடுகள் மற்றும் திறந்த காடுகள்) அளிக்கிறது.
* மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் புவியியல் தகவல் முறை பயன்பட ஏதுவாக 26 வன ஆட்சிக் கோட்டங்களில் புவியியல் தகவல் முறை வசதி உருவாக்கப்பட்டுள்ளது.
* தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் முறைக்கான அடிப்படைப் பயிற்சி மாநிலத்திலுள்ள பல்வேறு வகையான வனத்துறைப் பணியாளர் களுக்கு இத்தகவல் தரவு மையத்தில் அளிக்கப் படுகிறது. இதுவரை 340 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 200 இலட்சம் நாற்றுகள்

* ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 200 இலட்சத்திற்கும் மேல் நாற்றுகள் எழுப்பப் பட்டுள்ளன. இதன் பயனாக வன சமூக மற்றும் பண்ணை நிலங்களில் எழுப்பப்பட்ட நாற்றுகளின் உயிர் தன்மையும், வளர்ச்சி விகிதமும் அதிகப் படுத்தப்பட்டுள்ளது.

### சமூக வனத் தோட்டங்கள்

* கடந்த 4 ஆண்டுகளில் 50,888 எக்டேர் நிலப் பரப்பிலுள்ள பண்ணைத் தோட்டங்கள் மற்றும் சமூக வனத் தோட்டங்களில் விற்பனை செய்தல் மூலம் அரசுக்கு ரூ.31 கோடி மதிப்பில் வருவாய் ஈட்டப் பட்டுள்ளது.

### தேக்கு மர விற்பனை மூலம் வருவாய்

* கடந்த 4 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் முதிர்ந்த தேக்கு மரங்களை வெட்டி விற்பனை செய்ததின் மூலம் ரூ.18.77 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
* கடந்த 4 ஆண்டுகளில் ரூ.96 இலட்சத்தில் 2,439 அரசுக் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### அரசு ரப்பர் கழகம்

* நலிவடைந்திருந்த அரசு ரப்பர் கழகத்தைப் புனரமைத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டதின் விளைவாக 2002 – 2003ஆம் நிதியாண்டில் ரூ.59.27 இலட்சம் நிகர இலாபம் ஈட்டப்பட்டது.
* பல வருடங்களாக விற்பனை செய்யப்படாமலிருந்த முதிர்ந்த ரப்பர் மரங்கள் 2003–04இல் விற்பனை செய்யப்பட்டு ரூ.2.38 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. இந்த வருவாயில் இருந்து ரூ.1.13 கோடி அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது.
* 2002–2003 மற்றும் 2003–2004 ஆண்டுகளில் 34.30 எக்டேர் மற்றும் 103.60 எக்டேர் பரப்பளவில் முறையே அதிக முதிர்வடைந்த ரப்பர் மரங்களை வெட்டிவிட்டு உயரிய வீரிய ரக ரப்பர் மரக் கன்றுகள் மறுநடவு செய்யப்பட்டது. மேலும் கழகம் இவ்வாண்டு ரூ.117.44 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியது.
* 2004–2005ஆம் ஆண்டும் 95.2 எக்டேர் பரப்பளவில் அதிக முதிர்ச்சியடைந்த ரப்பர் மரங்களை வெட்டி விட்டு மறுஉற்பத்தி தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது. இதுபோன்று 2005–2006ஆம் ஆண்டிற்கும் ரப்பர் மறு உற்பத்தி தோட்டம் எழுப்பத் தேவையான ரப்பர் நாற்றங்கால் தற்போது எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

* * *

# சிறுதொழில் துறையில் சீரிய வளர்ச்சி

வளர்ந்து வருகின்ற நாட்டின் வளர்ச்சிக்கு சிறு தொழில்களின் வளர்ச்சி ஒரு அடித்தளமாக அமைகிறது.

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடுவீரே!

என்று மகாகவி பாரதியார் அவர்கள் உழைப்பின் மேன்மையை வலியுறுத்தியுள்ளார்கள். இதனடிப் படையில், கிராமங்கள், நகரங்கள், மற்றும் மாவட்டங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு சிறு தொழில்கள் முன்னோடியாகத் திகழ்கின்றன. சிறு தொழில் வளர்ச்சி அடைகின்ற போதுதான் பொருளாதார வளர்ச்சியும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயமும் உருவாகிறது. நாட்டின் நிலைத்த வேலை வாய்ப்புக்கும் தொழில் முனைவோரின் செயல்திறன் மேம்பாட்டிற்கும் நாற்றங்காலாகச் சிறுதொழில்துறை விளங்குகிறது. அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கும் மூலகாரணங்களாக அமைபவை சிறுதொழில் நிறுவனங்களே. சிறு தொழில்களை ஊக்குவிக்கவும், கிராமங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தவும் கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் "புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம்" மற்றும் "நமது கிராமம் திட்டம்" போன்ற புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

### சிறுதொழில்களுக்கு அரசு கொள்முதலில் முன்னுரிமை

* 1.12.2001லிருந்து, தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் உற்பத்திப் பொருட்களுக்கு அரசு கொள்முதல்களில் 15 விழுக்காடு விலை முன்னுரிமை வழங்கப் பட்டுள்ளது.

### இணையதளம் மூலம் தற்காலிகச் சான்றிதழ்

* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.9.2002 அன்று தொடங்கப்பட்ட இணையதளம் மூலம், தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ் வழங்கல் திட்டத்தின் கீழ் 30.4.2005 வரை 73,172 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

* புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 30.4.2005 வரை வேளாண் சார்ந்த / உணவுப் பதப்படுத்தும் தொழில்களை மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ரூ.688.33 கோடி மதிப்பீட்டில் தொடங்குவதற்காக 1,048 திட்டங்களுக்கு மாநில அளவிலான உயர்நிலைக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், 307 திட்டங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 133 திட்டங்கள் தொழில் முனைவோரது சொந்த நிதியால் செயல்படுத்தப்படுகின்றன. மொத்தத்தில், ரூ.160.60 கோடி மதிப்பில் 246 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. இதன் மூலம் 6,352 பெண்கள் உட்பட 9,350 கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

### சிறுதொழில் நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம்

* சிறுதொழில் நிறுவனங்களுக்கு பின் முனை வட்டி மானியத்தின் கீழ், 31.3.2005 வரை முதலீட்டு மானியமாக ரூ.539 இலட்சமும், குறைந்தழுத்த மின் மானியமாக ரூ.650 இலட்சமும், மின்னாக்கி மானியமாக ரூ.10.80 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளன.
* கடந்த 4 ஆண்டுகளில் பொருள் விற்பனை செய்த சிறுதொழில் நிறுவனங்களுக்குப் பொருள் வழங்கிய நிறுவனங்களிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகை, 2004 டிசம்பர் முடிய, ரூ.1,845.68 இலட்சம் வசூலிக்க தீர்வு செய்யப்பட்டது.

### மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

* 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் இருந்து 20,000 மகளிருக்கும், பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 5,000 மகளிருக்கும் ஆக ஆண்டிற்கு 25,000 மகளிர் வீதம் கடந்த 4 ஆண்டுகளில் 1,00,839 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சிகள் பெற்ற 36,608 மகளிர் தமது சொந்தத் தொழில் அலகுகளைத் தொடங்கியுள்ளனர்.
* பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனா என்ற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 30.4.2005 வரை 64,088 நபர்களுக்கு வங்கிகள் மூலமாகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

### ஒற்றைச் சாளர முறை கூட்டம்

* தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள ஒற்றைச் சாளர முறையின்



மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 30.4.2005 வரை 4,510 மனுக்கள் பெறப்பட்டு 4,187 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன.

### ஊட்டி 'டீ' விற்பனை

* தேயிலை விற்பனையை ஊக்கப்படுத்திடும் வகையில், "ஊட்டி டீ" என்ற பெயரில் தேயிலைத் தூளை விற்கும் திட்டத்தின்படி, 30.4.2005 வரை ரூ.83.34 கோடி மதிப்பிலான 11,113 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது.
* தேயிலை ஏலத்தை மின்னணு முறையில் வெளிப் படையாக நடத்த ஏற்படுத்தப்பட்ட "டீ சேர்வ்" என்ற

புதிய ஏல மையம், 30.4.2005 வரை 266.30 இலட்சம் கிலோ கிராம் தேயிலைத் தூளை ஏலம் மூலம் விற்பனை செய்துள்ளது.

**இன்கோ சர்வ், குன்னூர்**

* குன்னூரில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளின் தலைமைச் சங்கமான "இன்கோ சர்வ்", கடந்த 4 ஆண்டுகளில், ரூ.88.40 கோடி மதிப்பிலான தேயிலைத் தூளை விற்பனை செய்துள்ளது.
* சேலத்தில் உள்ள "சேகோ சர்வ்", நிறுவனத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில், ரூ.733.35 கோடி அளவில் மரவள்ளிக் கிழங்கைப் பதப்படுத்தி தயாரிக்கப்படும் சவ்வரிசி மற்றும் மாவுப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**தாய்கோ வங்கி**

* சென்னை 'தாய்கோ' வங்கியால் 30.4.2005 வரை ரூ.222 கோடி வைப்பு நிதியாகத் திரட்டப்பட்டு ரூ.174.05 கோடி அளவிற்குக் கடன் மற்றும் முன்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தேனி மாவட்டத்தில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்கூட்டுறவுச் சங்கம்**

* கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை மற்றும் வருச நாடு பகுதியில் முந்திரி பதப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. 303 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இச்சங்கம் 2004–2005 முடிய 8.10 மெட்ரிக் டன் முந்திரிக் கொட்டைகளைக் கொள்முதல் செய்து ரூ.8.47 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்துள்ளது.
* கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 5,000 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் சந்தை வளர்ச்சி நிதியுதவியாகத் தமிழக அரசால் ரூ.1.23 கோடி வழங்கப்பட்டுள்ளது. கயிறு தொழிற்சங்கங்கள், கடந்த நான்காண்டுகளில் ரூ.3,821.14 இலட்சம் மதிப்புள்ள கயிறுப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)**

* சிட்கோ நிறுவனத்தின் மூலம், கடந்த நான்கு ஆண்டுகளில் 4,972 தொழில் மனைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. 4,222 தொழிற்கூடங்கள் கட்டப் பட்டுள்ளன. 41 தொழிற்பேட்டைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. மேலும், 200 முதல் 600 சதுர அடிவரை அளவுகள் கொண்ட 1,841 குறுந்தொழிற்கூடங்களும் கட்டப்பட்டுள்ளன.

**மகளிர்க்கென தொழிற் பூங்காக்கள்**

* **இந்தியாவிலேயே முதன் முறையாக, மகளிர்க்கென சிட்கோ நிறுவனம் மூலம், திருமுடிவாக்கத்தில் ரூ.54 இலட்சத்தில் தொழிற்பூங்காக்கள் உருவாக்கப் பட்டுள்ளன.**
* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இரண்டு மகளிர் தொழிற் பூங்காக்கள்



சென்னைக்கு அருகிலுள்ள திருமுல்லைவாயிலிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள வாழவந்தான் கோட்டையிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

* 2004–2005 ஆம் ஆண்டில், சிட்கோ நிறுவனத்தின் மூலம் சென்னை, விச்சூர் தொழிற்பேட்டை பகுதி–IIலும், கும்பகோணம் தொழிற்பேட்டை பகுதி–IIலும் மற்றும் சேலத்திலுள்ள கருப்பூர் மகளிர் தொழிற் பூங்காவிலும், ரூ.3.38 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 316 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
* சிட்கோ நிறுவனம் மூலம் 2001–2005 ஆம் ஆண்டுகளில் 7 தொழிற்பேட்டைகளில் 1,080 தொழில் மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**மூலப்பொருள் உதவித்திட்டம்**

* கடந்த 4 ஆண்டுகளில் சிட்கோவின் மூலம், ரூ.129.17 கோடி மதிப்புள்ள 48,408 மெட்ரிக் டன் மூலப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**விற்பனை உதவித்திட்டம்**

* சிட்கோவின் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.2.21 கோடி மதிப்பிலான வழங்கல் ஆணைகள் பெறப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 311 சிறுதொழில் நிறுவனங்கள் சிட்கோ மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஏற்றுமதி உதவித்திட்டம்**

* சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணைய தளத்தின் மூலம் விளம்பரப்படுத்தி உதவி புரிந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் 95 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
* அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகள் 'தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத்' திட்டத்தின் மூலம் ரூ.47.20 கோடி செலவில் மேம்படுத்தப்பட உள்ளன.
* தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) கடந்த 4 ஆண்டுகளில் ரூ.186.71 கோடி மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளது.
* டான்சி நிறுவனத்தின் இரு கைப்பம்புகள் உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் மற்றும் தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாப்பாப்) ஆகியவை ISO : 9001–2000 தரச் சான்றிதழைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது.



# மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் எரிசக்தித் துறை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலக அளவில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்கும், பிற்பகுதியில் இந்தியாவில் நடந்த பசுமைப் புரட்சிக்கும் இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்க காலமான தற்காலத்தில் நிகழ்ந்துவரும் கணினிப் புரட்சிக்கும் அடித்தளமாக இருப்பது மின்சாரம் தான். மின்சக்தி இல்லையேல் இவ்வுலகம் இல்லை. மின்சார உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்று ஒவ்வொரு குடிமகனும் மின்சாரத்தின் பயனை நுகரும் வண்ணம் தமிழ்நாடு மின்சார வாரியம் செவ்வனே சேவையாற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டின் மின்உற்பத்தியை அதிகரிக்க அனைத்து வித உதவிகளையும், சிறப்புத் திட்டங்களையும் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும். தனியார் மின் உற்பத்தி, தாவர எரிசக்தித் திட்டங்கள், காற்றாலை மின்உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங் களிலிருந்து மின்உற்பத்தி, கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்தல் போன்ற நவீனத் தொழில் நுட்பங்கள் மூலமாக மின்சாரம் தயாரிக்கும் புதுமையான திட்டங்களுக்கும் தமிழக அரசு அளப்பரிய ஊக்கத்தை அளித்து வருகிறது.

மேலும், சீராக மின் அனுப்புகையை மேற்கொண்டு மின்வெட்டு இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், கடந்த 4 ஆண்டுகாலமாக, தமிழ்நாடு மின்சார வாரியம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, தனித்தன்மையை நிலைநிறுத்தி வருகிறது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வாரியம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் போன்றவற்றிற்கு மின் இணைப்புகள் வழங்கியும், மின்வெட்டு, மின் தடையில்லாத மின்சாரத்தை வழங்கி, தமிழகத்திலுள்ள அனைவருக்கும் மின்சாரத்தின் பயனைப் பெற்றிட பெருந் தொண்டாற்றி வருகிறது.

**புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மின் உற்பத்தி**

* மின் உற்பத்தி தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மொத்த மின் உற்பத்தித் திறன் கடந்த நான்கு ஆண்டுகளில் 1,380 மெகாவாட் அதிகரித்துள்ளது. நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் உற்பத்தியின் ஒட்டுமொத்த சராசரியான 5 சதவிகிதத்தோடு ஒப்பிடும்போது, தமிழகத்தில் 20% திறனை எய்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.



**காற்று சக்தி மூலம் மின் உற்பத்தித்திறனில் முதலிடம்**

* காற்று சக்தி மூலம் மின் உற்பத்தித் திறனில் கடந்த நான்கு ஆண்டுகளில் (2001–2005) 1,227 மெகாவாட் அதிகரித்துள்ளது. இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், தமிழ்நாட்டில் காற்றாலை மூலம் மொத்த உற்பத்தித்திறன் 31.3.2005 வரை 2,040 மெகாவாட்டாக உள்ளது. இது நாட்டின் மொத்த உற்பத்தித்திறனில் 60 சதவிகிதம் ஆகும். இந்தியாவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் தொடர்ந்து இத்துறையில் சாதனை படைத்து வருகிறது.

**கரும்புச் சக்கையின் மூலம் மின்உற்பத்தியில் தமிழகம் முதலிடம்**

* இந்தியாவிலேயே கரும்புச் சக்கையினைப் பயன்படுத்தி மின்உற்பத்தி செய்வதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. நான்கு ஆண்டுகளில் 132 மெகாவாட் மின்உற்பத்தி அதிகரித்துள்ளது. இது இந்தியாவில் மொத்த இத்தகு உற்பத்தித்திறனில் 30 சதவிகிதம் ஆகும் என்பதும் ஒரு குறிப்பிடத் தகுந்த சாதனையாகும்.

**சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி**

* சூரிய ஒளி சாதனங்களைப் பயன்படுத்தி கடந்த நான்கு ஆண்டுகளில் 4,500 சூரிய ஒளி லாந்தர், 1,229 வீட்டு விளக்குகள் மற்றும் 4,346 தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் சூரிய ஒளி சக்தி மூலம் விவசாயத்திற்கும், குடிநீர் இறைப்பதற்கும் அரசு மானியத்துடன் 90 இடங்களில் இறைப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன.

* சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகள் 500 சதுர மீட்டர் (ம) அதற்கு மேல் கட்டப்படும் வணிக ரீதியான புதிய கட்டடங்களில் 150 சதுர மீட்டருக்கு மேற்படி கட்டப்படும் குடியிருப்புக் கட்டடங்களில் நிறுவுவது கட்டாயமாக்கி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சூரிய வெப்ப சக்தியைப் பயன்படுத்துவதிலும் தமிழ்நாடு முதல் மாநிலமாக உருவாகி வருகிறது.

* தமிழக சூரிய சக்தி சுடுநீர்க் கலன்களை அரசு கட்டடங்களில் நிறுவுவதற்கு ரூ.54.32 இலட்சம் நிதிஉதவியாகவும், தனியார் நிறுவனங்களுக்கு மானியமாகவும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**தாவர எரிசக்திசாதனங்கள்**

* தொழிற்சாலைகளில் வெப்ப சக்தி (ம) மின்சக்தி தேவைகளுக்கு, தாவர எரி சக்தி வாயுக்கலன்களை அமைப்பதற்கு அரசு மானிய உதவி அளிக்கிறது. நான்கு ஆண்டுகளில் 13 தாவர எரிசக்தி வாயுக்கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

* கோவை மாவட்ட ஊராட்சிகளில் தாவர எரிசக்தி வாயுக்கலன்களை நிறுவுவதில் முதன்மையாகத் திகழ்கிறது.

* மனிதக் கழிவுகளிலிருந்து பெறப்படும் வாயு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் திட்டத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்கி உள்ளது. 2003–04 ஆம் ஆண்டில் 14 சுகாதார வளாகங்களில் மனிதக்கழிவு எரிவாயுக் கலன்கள் அமைத்து, கிடைக்கும் வாயு மூலம் பம்புகளை இயக்கி அந்த வளாகங்களை, சுயசார்புடையவைகளாக மாற்றும் பணியினைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் செய்து வருகிறது. இதைத் தவிர 29 நிறுவனங்களில் மனிதக்கழிவு எரிவாயுக் கலன்கள் அமைக்கப்படுகின்றன. இதற்காக தமிழக அரசு மொத்தம் ரூ.43.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மனிதக் கழிவிலிருந்து 20 எரிவாயுக் கலன்களை நிறுவுவதற்கு ரூ.20 இலட்சம் அரசால் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

## தமிழ்நாடு மின்சார வாரியம்

**தடையில்லா மின்சாரம்**

* மாநிலத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் எந்த ஒரு பகுதியிலும் மின்தடையின்றி, தமிழ்நாட்டிலுள்ள 1.7 கோடி மின்பயனீட்டாளர்களுக்குத் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**தங்கப்பதக்கம்**

* தூத்துக்குடி, வடசென்னை மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு நான்கு ஆண்டு காலமாக இந்திய அரசின் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. 2005ஆம் ஆண்டிலும் தங்கப்பதக்கத்தைப் பெறத் தகுதி பெற்றுள்ளது.



**பன்னாட்டுத் தரச்சான்றிதழ்**

* வடசென்னை, தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்கு இந்தியத் தரச் செயலக நிறுவனம் ஐ எஸ் ஓ (ISO) – 9002 : 1994 தரச் சான்றிதழை வழங்கியுள்ளது. மேற்கண்ட அனல்மின் நிலையங்கள் மேலும் தகுதி மேம்பட்ட

ஐ எஸ் ஒ (ISO) – 9001 : 2000 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளன.

**1,000 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் திட்டங்கள்**

* 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் திட்டத்தைக் கூட்டு முயற்சியில் தமிழ்நாடு மின்சார வாரியமும், தேசிய அனல்மின் கழகமும் இணைந்து சென்னையில் செயல்படுத்தவுள்ளன.

* தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தைக் கூட்டு முயற்சியில் நிறுவ தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் இணைந்து செயல் படுத்தவுள்ளன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 19.6.2003 அன்று கையெழுத்தானது.

* வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சொந்த மின் திட்டம் 13.3.2003இல் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றது. அதேபோன்று குத்தாலத்தில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 101 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் 24.3.04 முதல் இயங்கி வருகின்றது.

**துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள்**

* ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியின் உதவியுடன் ரூபாய் 185.75 கோடி மதிப்பீட்டில் 14 மாவட்டங்களில் துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மின் தடை நீக்கும் மையம்**

* மின்நுகர்வோர்களின் மின்தடை பற்றிய குறைகளை உடனடியாகத் தீர்க்கும் பொருட்டு கணினி மயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையங்கள் 12.11.2003 முதல் சென்னை மாநகரிலும், 1.3.2005 முதல் சேலம், மதுரை மற்றும் திருச்சியிலும் இயங்கி வருகின்றன.

**விவசாயிகளுக்கும் – குடிசைவாழ் மக்களுக்கும் மீண்டும் 1–4–2004 முதல் இலவச மின்சாரம்**

* **விவசாயிகள் மற்றும் குடிசைவாழ் மக்களுக்கு 1.4.2004 முதல் மீண்டும் இலவச மின்சாரம் வழங்க ஆணையிட்டுள்ளது. இதற்கென மானியமாக முறையே ஒரு வருடத்திற்கு ரூபாய் 196 கோடி மற்றும் ரூபாய் 16 கோடி வழங்கி உள்ளது. இதன் மூலம் சுமார் 15.3 இலட்சம் விவசாயிகளும், சுமார் 9 இலட்சம் குடிசை வாழ் மக்களும் பயனடைகின்றனர். இந்த மானியம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரையாண்டிற்கு ஒருமுறையாக முன்கூட்டியே வழங்கி வருகின்றது.**

**வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டணம் குறைப்பு**

* **தமிழக மக்களின் நலன் கருதி தமிழக அரசு வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை 16.6.2004 முதல் குறைத்து ஆணையிட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.910 கோடி மின் வாரியத்திற்கு அரசு மானியமாக வழங்குகிறது.**

**கட்டட அனுமதிக்குச் சான்றிதழ் தேவை ரத்து**

* கட்டடங்களுக்கு மின் இணைப்பு வழங்கும்போது கட்டட அனுமதி மற்றும் கட்டட நிறைவுச் சான்றிதழ் ஆகியவை அளிக்குமாறு வலியுறுத்தப்பட்டதை நீக்கி அரசு ஆணை பிறப்பித்து, ஆண்டொன்றுக்கு சுமார் 6 இலட்சம் வாய்ப்புள்ள பயனீட்டாளர்கள் விரைவில் மின் இணைப்புப் பெற வழிவகை செய்துள்ளது.

**மின் உற்பத்தித்திறன் அதிகரித்தல்**

* கடந்த நான்கு ஆண்டுகளில் இயக்கி வைக்கப்பட்ட கூடுதல் மின்உற்பத்தித் திறன் 1,648 மெகாவாட். கடந்த நான்கு ஆண்டுகளில் 1,92,091 மி. யூனிட்கள் நுகரப்பட்டது. புதிய மின் நிலையங்கள், துணை மின் நிலையங்கள், அதிக திறனாக்குதல் மற்றும் துணை மின் நிலையங்களில் கூடுதல் வோல்டேஜ் மின்னூட்டியை அறிமுகப்படுத்துதல் உட்பட 241 துணை மின்நிலையங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் இயக்கி வைக்கப்பட்டன.

**மின் இணைப்பு**

* கடந்த நான்கு ஆண்டுகளில் 59,480 தொழிற் சாலைகளுக்கும், 31,057 உயர்மட்ட, தரைமட்ட நீர்தேக்கி தொட்டிகளுக்கும், 93,425 தெருவிளக்கு களுக்கும், 21,30,925 வீடுகளுக்கும், 1,37,371 குடிசைகளுக்கும், 1,30,693 பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு**

* கடந்த நான்கு ஆண்டுகளில் 27,883 மின் திருட்டுகள் பிற முறைகேடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதற்குரிய அபராதத் தொகை ரூ.10,383 இலட்சம் ஆகும்.

* * *

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

'உழைப்பே உயர்வு' – என்ற முதுமொழிக்கு ஏற்ப, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்தாக அமைபவர்கள் தொழிலாளர் பெருமக்கள் ஆவார்கள். தொழிலாளர்களின் உண்மையான முன்னேற்றமே நாட்டின் முழுமையான வளர்ச்சியாகும்.

உற்பத்தியை மென்மேலும் பெருக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும் தொழிலாளர்களின் உழைப்பு பெரும் பங்காற்றுகிறது.

**தொழிலாளர்களின் நலனைப் போற்றும் வகையில், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியங்கள் அமைத்து, தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கெனத் தீர்வு கண்டு, அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வரும் தமிழக அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.**

### தொழிற் சிக்கல்களுக்குத் தீர்வு

* தொழிலாளர் துறையின் மூலம் 16 தொழிற்சாலைகளின் தொழிற் சிக்கல்கள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப் பட்டன.

### முத்தரப்புக் குழு

* மூடப்பட்டத் தொழில் நிறுவனங்களைத் திறப்பதற்கு மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் முத்தரப்புக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 3 மாதத்திற்கு ஒருமுறை கூடி விவாதிக்கும்.

### தொழிலாளர்களுக்கு உதவித்தொகை

* நீண்டகாலமாக மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த 4,167 தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.250 வீதம் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், நான்கு ஆண்டுகளில் ரூ.60,98,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### மக்கள் நீதிமன்றம்

* பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சிரமமின்றி மிகக் குறைந்த செலவில் விரைவாக நீதி கிடைக்க சென்னை மற்றும் மதுரையில் "லோக் அதாலத்" என்ற மக்கள் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 43 வழக்குகள் முடிக்கப்பட்டு, கேட்புரிமை தாரர்களுக்கு 73,03,521 ரூபாய் இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சேலம் மாவட்டத்திலும் அமைக்கப்படவுள்ளது.

### பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம்

* ஒருங்கிணைந்தபீடித் தொழிலாளர்கள்வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 2002ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளில் 10,000 வீடுகள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

### குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

* 2005 ஆம் ஆண்டுக்குள் அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றவும், 2007ஆம் ஆண்டிற்குள் அபாயகரமற்ற தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றவும் அரசாணையிடப்பட்டது. இத்திட்டத்தினை மாவட்ட மற்றும் மாநில அளவில் செயல்படுத்த ரூ.1.25கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* அனைத்து மாவட்டங்களிலும் "மாவட்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டன.
* குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாகச் செயல்படும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாநில விருது வழங்கப்பட்டு வருகிறது. 2003ஆம் ஆண்டிற்கான விருது கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டங்கள்

* சிவகங்கை, இராமநாதபுரம், தஞ்சாவூர், பெரம்பலூர், திருவாரூர், கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்கள் குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டங்களாக அறிவிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

### விழிப்புணர்வு முகாம்கள்

* குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தொடர்பாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி துண்டுப் பிரசுர வெளியீடு, சிறுநூல்கள், சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படுகின்றன. பேருந்துகளிலும், பொது இடங்களிலும் சுவரொட்டி மூலம் விளம்பரப் படுத்தப்படுகின்றன. மேலும், சுயஉதவிக் குழுக்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றன.

### குழந்தைத் தொழிலாளர்களுக்குக் கல்வி

* 408 சிறப்புப் பள்ளிகளில், 15,059 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயில்கின்றனர். சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு தலா ரூ.100 மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

* தையற்பயிற்சி மட்டும் இயங்கி வந்த 19 மையங்களில் குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
* அடிப்படைக் கணினிப் பயிற்சி பெற, தொழிலாளி மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு மாவட்டத்திற்கு 5 நபர் வீதம் 150 பேருக்கு தலா ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

* தொழிலாளர் நல மையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மின் மோட்டார் இயந்திரம் பொறுத்திய தையல் இயந்திரம் 3,97,292 ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

* ஈமச் சடங்கு உதவித்தொகை ரூ.500லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டது.

* 25,841 தொழிலாளர்களுக்கு ரூ.1,03,13,367 மதிப்பீட்டில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கல்வி உதவித்தொகை உயர்வு**

* பொறியியல், மருத்துவம், சட்டம் மற்றும் வேளாண்மைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,200லிருந்து ரூ.2,400ஆகவும், பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டயப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.720லிருந்து ரூ.1,440ஆகவும், தொழிற் பயிற்சிக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.500லிருந்து ரூ.1,000 ஆகவும், மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ.600லிருந்து ரூ.1,200 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

**கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்**

* தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 13.5.2001 முதல் 31.1.2005 வரை பதிவு செய்து கொண்ட 3,24,166 தொழிலாளர்களில் 50,691 நபர்களுக்கு, ரூ.16,32,32,553 நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* தகுதியுடைய பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.200 மாத ஓய்வூதியம்.

* பதிவு செய்து கொண்ட தொழிலாளர்களின் பெண் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை 10ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 11ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 12 ஆம் வகுப்பிற்கு ரூ.1,500 என வழங்கப்பட்டு வருகிறது.

* தற்போதுள்ள மகப்பேறு உதவித் தொகை ரூ.2,000 என்பதை ரூ.4,000 ஆகவும், இயற்கை மரணம் ஏற்பட்டால் நிவாரண உதவி ரூ.10,000 லிருந்து ரூ.15,000 ஆகவும், கண் கண்ணாடி வாங்க ரூ.250லிருந்து ரூ.500 ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



* பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காக சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும்.



**தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியம்**

* தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள – தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,23,905.

* கடந்த 4 ஆண்டுகளில், 26,594 பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு ரூ.5,97,91,750 அளவில் பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

* **பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் பெண் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை 10ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 11ஆம் வகுப்பிற்கு ரூ.1,000, 12ஆம் வகுப்பிற்கு ரூ.1,500.**

* மகப்பேறு உதவித்தொகை ரூ.2,000லிருந்து ரூ. 4,000 ஆக உயர்த்தப்பட்டது.

* இயற்கை மரணம் ஏற்பட்டால் ரூ.10,000லிருந்து ரூ.15,000ஆக உயர்த்தப்பட்டது.

* கண் கண்ணாடி வாங்க ரூ.500 வழங்கப்படுகிறது.

**வேலைவாய்ப்புத்துறை**

* தமிழகத்திலுள்ள 34 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை நாடுவோரின் விவரங்களைப் பதிவு செய்தல், அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு மனுதாரர்களின் பெயர்களைப் பரிந்துரைத்தல் ஆகிய பணிகளுடன் தொழில்முறை வழிகாட்டுதல், சுயவேலைவாய்ப்பு வழிகாட்டுதல் ஆகிய முக்கியப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

* வேலைவாய்ப்புத்துறையின் இணையதளம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

* இவ்விணையதளத்தில் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் செல்லாமலேயே "ஆன் லைன்" முறையில் தங்கள் பதிவுகளைப் புதுப்பிக்க வசதி

உள்ளது. இதுவரை 49,153 பதிவர்கள் சென்னை வராமலேயே தங்கள் ஊரிலிருந்து ஆன்லைன் முறையிலான புதுப்பித்தல் வசதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

* பொதுமக்களுக்கு விரைவான மற்றும் புகாரற்ற சேவை அளிப்பதற்காக அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் கணினி மையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

**தனியார் துறையில் பணியமர்த்தல்**

* எல்லா மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வெள்ளிக்கிழமையன்று தனியார் துறை வேலையளிப்பவர்கள் மற்றும் வேலை நாடும் மனுதாரர்கள் சந்திக்கின்றனர். நேரடியாகத் தேர்வுகள் நடைபெறுகின்றன. உடனுக்குடன் மனுதாரர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**கிராமப்புற இளைஞர்களுக்கான தன்னார்வப் பயிலும் வட்டங்கள்**

* வேலை தேடும் இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் போட்டியிடும் தங்களது திறனை மேம்படுத்த தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

* ஊராட்சி ஒன்றிய தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு ரூ.99.88 இலட்சம், மாவட்ட தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு ரூ.67.98 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தொழிற்கல்வி துறைத் தேர்வுக்குப் பயிற்சி**

* ரூ.27.16 இலட்சம் செலவில் 4,922 ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கான பயிற்சியளிக்கப்பட்டு, இதில் 823 மாணவர்கள் பல்வேறு தொழிற் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர்.

**சுயவேலைவாய்ப்பு**

* 6,866 பேருக்கு சுயவேலைவாய்ப்பிற்காக ரூ.2,906 இலட்சம் வங்கிகள் மூலம் கடன் உதவிகள் பெற்றுத் தரப்பட்டன.

**மகளிருக்கான புதிய தொழிற்பயிற்சி மையங்கள்**

* மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆண்டிபட்டி, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் ரூ.2.79 கோடி செலவில் மகளிருக்கான புதிய தொழிற் பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு 616 மகளிர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**புதிய தொழிற் பிரிவுகள்**

* தொழிற்பயிற்சி நிலையங்களில் கம்மியர் மெக்கட்ரானிக்ஸ் மற்றும் கம்மியர் வன்பொருள் ஆகிய தொழிற்பிரிவுகள் ஆகஸ்ட் 2005 முதல் 8 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.181.65 இலட்சம் செலவில் தொடங்கப்படவுள்ளன.

* வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்றாற்போல், 35 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளில் புதிய கருவிகள் மற்றும் தளவாடங்கள் ரூ.5 கோடி செலவில் வழங்கப் படவுள்ளது.

**அகில இந்திய திறனாய்வுத்தேர்வு**

* 1964ஆம் வருடம் முதல் தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய அளவில் திறனாய்வுப் போட்டி மத்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடைபெற்ற 40 போட்டிகளில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக 2001 முதல் 2003ஆம் ஆண்டுகளில் 20 முறை தேர்வு செய்யப்பட்டு, குடியரசுத் தலைவர் அவர்களின் கேடயத்தைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் அளிக்கப் படும் தொழிற்பயிற்சி இந்திய துணைக் கண்டத்திலேயே தரம் வாய்ந்ததாகும்.

**தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம்**

* தொழிற்சாலைகள் மற்றும் ஆய்வகத்துறையின் மூலம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் பணி நிரந்தரம் செய்யும் சட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளி தான் பணிபுரியும் தொழிற்சாலையில் தொடர்ந்து 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் பணிபுரிந்திருப்பின் அவருக்கு அத்தொழிற்சாலையில் பணிநிரந்தரம் செய்ய வழி செய்யப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த 4 ஆண்டுகளில் 25,643 தொழிற் சாலைகளில் 82,860 தொழிலாளர்களின் பணிகள் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளன.

**மாநிலப் பாதுகாப்பு விருதுகள் வழங்குதல்**

* தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிருவாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. இதுவரை கடந்த நான்காண்டுகளில் பாதுகாப்பு விருதுகள் 313 நிருவாகத்தினருக்கு முதல் பரிசும், 228 நிருவாகத்தினருக்கு இரண்டாம் பரிசும் வழங்கப் பட்டன.

**"உயர்ந்த உழைப்பாளர் விருது"**

* விபத்துத் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர் விருது" வழங்கப் படுகின்றன. கடந்த நான்காண்டுகளில் இதுவரை 168 தொழிலாளர்கள் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

* * *

# போக்குவரத்துத் துறையின் மகத்தான சாதனைகள்




**நா**ட்டின் பொருளாதார வளர்ச்சியில், அந்நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சியும், வாழ்க்கைத்தரமும் முக்கியமான அடிப்படை காரணங்களாகும். மக்களின் பொருளாதாரமும், வாழ்க்கைத்தரமும் உயர வேண்டுமானால் அனைத்து அடிப்படை வசதிகளோடுப் போக்குவரத்து வசதி சிறப்பாக அமைந்திடல் வேண்டும். போக்குவரத்து வசதிகளான சாலை, ரயில்வே, விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து வசதிகளில் சாலைப் போக்குவரத்து வசதி மிகவும் இன்றியமையா ஒன்றாகும். சாலைப் போக்குவரத்து வசதி சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் அமைந்தால்தான் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய முடியும். வளர்ச்சித் திட்டங்கள் செயல் வடிவம்பெறச் சாலைப் போக்குவரத்து முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதலிடமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வரும் அனைத்துத் துறைகளின் செயல் வடிவங்களில் சாலைப் போக்குவரத்து ஏனைய போக்குவரத்துச் சாதனங்களைவிட மக்களை நெருங்கி பயனளிப்பதில் உலக அளவில் முதலிடம் பெற்றுள்ளது.

**போக்குவரத்துக் கழகங்களின் ஒருங்கிணைப்பு**

* போக்குவரத்துக் கழகங்களின் நிருவாக அமைப்பைச் சீரமைக்கும் நோக்கத்தில், 21 போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

**பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு**

* அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை 2003–2004–ஆம் ஆண்டில் 487.92 கோடியாக இருந்தது, 2004–2005–ஆம் ஆண்டில் 508.54 கோடியாக உயர்ந்துள்ளது.

**இலாப நோக்கு செயல்**

* மத்திய அரசின் அதிவேக டீசல் எண்ணெய் விலை உயர்வினால் ரூ.182 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்ட போதிலும் போக்குவரத்துக் கழகங்கள் 2004–2005ஆம் ஆண்டில் ரூ.14.45 கோடி இலாபம் ஈட்டியுள்ளன.

**நாட்டிலேயே உயர்ந்த இயக்கத் திறன்**

* மைய அரசின் திட்ட கமிஷன் (போக்குவரத்துத் துறை), 2004–2005 மற்றும் 2005–2006, ஆண்டுத் திட்டத்தை ஆய்வு செய்தபோது, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் உற்பத்தித் திறன் மிகச் சிறப்பாகவும், தொடர்ந்து முன்னேற்றமடைந்தும் உள்ளது என்று பாராட்டியுள்ளது. மேலும், 2003–2004–ஆம் ஆண்டில் வாகன இயக்கத் திறன் 385 கி.மீட்டரானது, 2004–2005இல் 392 கி.மீட்டராக உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பாகச் சொல்லி, இது நாட்டிலேயே உயர்ந்த இயக்கத்திறன் என்று குறிப்பிட்டுள்ளது.

**சலுகை விலையில் டீசல்**

* இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட், இந்துஸ்தான் பெட்ரோலியம் மற்றும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய எண்ணெய் நிறுவனங்களுடன் ஏழு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.700 என்ற தள்ளுபடி அடிப்படையில் 1.10.2003 முதல் அதி வேக டீசல் வாங்க ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தம் 31.3.2005 வரை செயல்பாட்டில் இருந்தது. மேற்கண்ட ஒப்பந்தத்தினால் எரிபொருள் செலவில் ஏப்ரல் 2004 முதல் ஜனவரி 2005 வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.30 கோடி சேமித்துள்ளன.

**தொழிலாளர்களின் நலன்**

* போக்குவரத்துத் துறைப் பணியாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் 1.67 சதவிகிதம் கருணைத் தொகை மற்றும் இடைக்கால நிவாரணமாக 1.9.2003 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் வழங்கப்படுகிறது.

* தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ஓர் ஆண்டில் தங்கள் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பில் 15 நாட்கள் விடுப்பில் செல்லாமல் சரண் செய்து அதற்கு ஈடாக ரொக்கத்தொகையை ஏற்கெனவே உள்ள சுழற்சி முறையில் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

**புதிய பேருந்துகள்**

* 2001–2002–ஆம் ஆண்டில் 1,550 பேருந்துகளும், 2002–2003–ஆம் ஆண்டில் 659 பேருந்துகளும், 2003–2004–ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 1,050 பேருந்துகள் வாங்கப்பட்டன. 2004–2005–ஆம் ஆண்டில் 1,325 பேருந்துகள் வாங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## ASRTU (புதுடில்லி) விருது

அகில இந்திய அளவில் எரிபொருள் (டீசல்) சிக்கனத்திற்கான முதலிடத்தை 2001–2002–ஆம் ஆண்டிலும், இரண்டாம் இடத்தை 2002–2003–ஆம் ஆண்டிலும் திருநெல்வேலியில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகம் தொடர்ந்து பெற்றுள்ளது.

2001–2002–ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சேலத்திற்கு அகில இந்திய அளவில் மசகுஎண்ணெய்ப் பயன்பாட்டில் சேமிப்பிற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

2001–2002–ஆம் ஆண்டிற்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு, அகில இந்திய அளவில் நாள் ஒன்றிற்கு அதிக கி.மீ. இயக்கத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

## பெண் ஓட்டுநர்

* தமிழக போக்குவரத்துக் கழகங்களில் முதல் பெண் ஓட்டுநர் நாகர்கோயில் போக்குவரத்துக் கழகத்தில் நியமனம் செய்யப்பட்டார். மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் 2 பெண் ஓட்டுநர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## இலவச பஸ் பாஸ்

* 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உள்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் விடுமுறை நாட்கள் உள்பட அனைத்து நாட்களுக்கும் செல்லுபடியாகும் இலவசப் பேருந்துப் பயணச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

## பேருந்தில் மாணவர்களுக்குப் பயணச் சலுகை

* தனியார் கல்லூரிகள் உள்பட அனைத்துக் கல்லூரிகளிலும் பயிலும் அனைத்து மாணவர் களுக்கும் விடுமுறை நாட்கள் உட்பட எல்லா நாட்களுக்கும் பயணம் செய்ய 50 சதவிகிதம் சலுகையில், பேருந்துப் பயணச்சீட்டுகள் வழங்கப் படுகின்றன. சென்னை மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்குச் சென்று பின் வீட்டிற்குப் பயணிக்க 60 மாற்று டோக்கன்கள் வரை வழங்கப்படுகின்றன.
* 2003–2004ஆம் ஆண்டில் 17,41,740 மாணவ, மாணவியரும், 2004–05ஆம் ஆண்டில் 20,88,111 மாணவ, மாணவியரும் இலவசப் பயணச்சலுகை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், 50 சதவிகிதம் பயணச் சலுகை அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 2003–2004ஆம் ஆண்டில் 1,72,394 ஆகும். 2004 – 2005 ஆம் ஆண்டில் 2,68,200 ஆகும். மாணவர் பயணச் சலுகையினால் 2004–2005ஆம் ஆண்டில் சுமார் 24 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

## புதிய பணிமனைகள்

* பொதுமக்களின் பேருந்து வசதிகளை மேம்படுத்த ரூ.83.75 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரியிலும், ரூ.31 இலட்சம் செலவில் சேலம் மாவட்டம் தாரமங்கலத்திலும், ரூ.14.95 இலட்சம் செலவில் மதுரை மாவட்டம் புதுக்குளத்திலும் மூன்று புதிய பணிமனைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

## சுற்றுலா மற்றும் புனிதத் தலங்களுக்குப் பேருந்து வசதி

தமிழ்நாட்டில் உள்ள புனித மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கும் தொடர்ந்து மக்களின் தேவைக்கு ஏற்ப குறைந்த கட்டணத்தில் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், 'ஒப்பந்த ஊர்தி' என்ற முறையில் இயக்கப்படும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் வாடகைக் கட்டணம், ஏற்கெனவே உள்ள ரூ.6500க்குப் பதிலாக நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஒப்பந்த வாடகையாக ரூ.3500 வசூலிக்கப்படுகிறது.

## பயணிகளுக்குச் சலுகைகள்

* வெளிமாநிலத்திற்கு இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இருக்கை முன் பதிவு செய்பவர்களுக்கு அவர்கள் சென்னையில் வசிக்கும் இடத்திலிருந்து, கோயம்பேடு பேருந்து நிலையம் (CMBT) செல்ல மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச அனுமதி சீட்டு வழங்கப்படுகிறது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் தமிழகத்திற்குள் இயக்கப்படும் பகல் நேரப் பேருந்துகளில் (செமி–டீலக்ஸ்) மற்றும் சொகுசு (டீலக்ஸ்) பேருந்துகளிலும் பயணிகளின் நலன் கருதி, மற்ற புறநகர்ப் பேருந்துகளைப் போல குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இருக்கை முன்பதிவு செய்பவர்கள், போகவும் திரும்ப வரவும் ஒரே நேரத்தில் முன்பதிவு செய்தால் (Return ticket reservation) அவர்களுக்கு மொத்த பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் கழிவு வழங்கப்படுகிறது.
* மேலும் தற்போது கணினி மூலம் வீட்டிலிருந்தபடியே (Online reservation system) முன் பதிவு செய்யும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 8 நபர்கள் மற்றும் அதற்கு மேலும் மொத்தமாக முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.
* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 60 வயது நிரம்பியவர்கள் பயணம் செய்ய, முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் சலுகை அளிக்கப்படுகிறது.
* பயணிகள் தங்கள் விருப்பம் போல் மாநகரத்தில் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்ய ஒரு நாளைக்கு ரூ.30ம், வாரத்திற்கு ரூ.160ம், மாதத்திற்கு ரூ.600ம் என கட்டணச் சீட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டு, பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

## சாலைப் போக்குவரத்து நிறுவனம்

* சாலைப் போக்குவரத்து நிறுவனம் நடத்தி வரும் பெருந்துறை மருத்துவக் கல்லூரியிலும், ஈரோட்டில்



பொறியியல் கல்லூரியிலும் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் குழந்தைகள் தனி ஒதுக்கீடு மூலம் அனுமதிக்கப்பட்டு 3,845 பொறியாளர்கள், 705 மருத்துவர்கள், 215 எம்.சி.ஏ. பட்டதாரிகள் உருவாகி உள்ளார்கள்.

**ஓட்டுநர் பயிற்சி மையம்**

* சாலைப் போக்குவரத்து நிறுவனம் தரமணி வளாகத்தில், புதிய ஓட்டுநர் பயிற்சித் தளம் ஒன்று (Driving Range) ரூ.68.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.19.92 இலட்சம் செலவில் திருநெல்வேலியில் ஓட்டுநர் பயிற்சித் தளம் ஒன்று அமைக்கப் பணி நடைபெற்று வருகிறது.

**கடல் கொந்தளிப்பால் (சுனாமி) பாதிக்கப்பட்ட மக்களுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடை**

* ரூ.5,31,57,000 நிதி திரட்டி சுனாமி கடல் கொந்தளிப்பு ஏற்பட்ட ஒன்பதாவது நாளான 4.1.2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியாக அளிக்கப்பட்டது. இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்ல இரவு பகலாகப் பேருந்துகள் இயக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளூர் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டதோடு மக்கள் தங்கியிருந்த முகாம்களைப் பார்வையிட்டு அவர்களின் தேவைக்கேற்ப கடலோரப் பகுதியிலுள்ள மக்களைக் கொண்டு செல்லவும் நிவாரணப் பணிகளை இலவசமாக மேற்கொள்ளவும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்றதோடு அந்தமானிலிருந்து வந்த பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களுடைய சொந்த ஊருக்குப் பேருந்துகளில் இலவசமாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

போக்குவரத்துத்துறை, பயணிகளுக்கு நல்ல தரமான போக்குவரத்து வசதிகளைத் தொடர்ந்து அளிக்கும் பொருட்டு பல்வேறு தடங்கல் களுக்கிடையே சிறந்த முனைப்புடன் செயல்பட்டு அதன் செயல்திறனை நிரூபித்ததோடு 2003–04 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து நிலையான லாபம் ஈட்டியுள்ளன. ✶

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

திட்டமிட்டுச் செயலாற்றும் நாடுதான் வளர்ச்சி யடையும். மாநில அரசினைப் பொறுத்தவரையில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்களையும் மற்றும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரித்து அதன் செயல்பாட்டைக் கண்காணித்து வருகின்றது. இதுதவிர, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணிப்பதுடன் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம், இராஷ்ட்ரிய சம் விகாஸ் யோஜனா ஆகியவற்றின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுகின்றது.

திட்டப்பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டப்பணிகள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை மூலம் மதிப்பீடு செய்கின்றது. மேலும், பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலமாக புள்ளி விவரங்கள் சேகரித்து அவற்றை ஒருங்கிணைத்து வெளியிடுகின்றது.

இருபது அம்சத் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் கிராமோதயத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்து வருகின்றது.

* 2001 – 2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்த ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டை 2003 – 2004 ஆம் ஆண்டில் ரூபாய் 7,000 கோடியாக உயர்த்திப் பெறப்பட்டது. 2002 – 2003 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 5,750 கோடி என நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கு முழுமையாக எய்தப்பட்டது. 2003 – 2004 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 7,000 கோடி மற்றும் 2004 – 2005 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 8,001 கோடி என்ற திட்ட இலக்குகள் முழுவதுமாக எய்தப்பட்டன. 2005 – 2006 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூபாய் 9,100 கோடி என்ற உயரளவு வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்**

* மெரினா கடற்கரையினை அழகுபடுத்துதல், தரமான கட்டமைப்பு வசதிகளையும், சுகாதாரமான வாழ்க்கைச் சூழலையும் ஏற்படுத்துவது, சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, படிப்படியாக தரமான சாலைகளாக மாற்றிடும் வகையில், சென்னை மாநகருக்கு ஒட்டுமொத்தப் போக்குவரத்து மேலாண்மைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.
* ரூபாய் 18,000 கோடி முதலீட்டில் 10 ஆண்டு கால அளவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

* சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 2003 – 2004 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் அதற்காக இலக்கிடப்பட்ட ஒதுக்கீடான ரூபாய் 1,780.95 கோடியை விடக் கூடுதலாக உள்ளது.

* சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சாலைப் போக்குவரத்து, வடிகால் வசதிகள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல், வீட்டு வசதி, குடிசை வாழ் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் மின்சக்தி வழங்குதல் போன்ற துறைகளில் 2004 – 2005 ஆம் ஆண்டிற்கான முதலீட்டினை உயரளவாக ரூபாய் 2,010 கோடி எனவும் 2005 – 2006 ஆம் ஆண்டிற்கான முதலீட்டினை ரூபாய் 2,054.09 கோடி எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டம்**

* இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா என்ற திட்டம் திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் மத்திய அரசின் திட்டக் குழுவின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

* மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.8,840 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

* மண் வளப் பாதுகாப்புப் பணிகள் நான்காண்டுகளில் ரூ.1,446.71 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டன.

* தோட்டக்கலை மேம்பாட்டுப் பணிகள் 2001 – 2002, 2002 – 2003 மற்றும் 2003 – 2004 ஆகிய ஆண்டுகளில் ரூ.886.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. 2004 – 2005இல் ரூ.315 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* கால்நடைகளைப் பராமரித்து பால்வளத்தைப் பெருக்கும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.187.14 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

* சுற்றுச் சூழலை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்திடும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,407.08 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

* சிறுபாசன முன்னேற்றப் பணிகள் 2001 – 2002, 2003 – 2004 மற்றும் 2004 – 2005 ஆகிய ஆண்டுகளில் ரூ.90.80 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

* பட்டு வளர்ச்சியை அபிவிருத்தி செய்ய கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.18.86 இலட்சம் உதவித் தொகையாக 420 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

* தேயிலை விவசாயம் செய்யும் சிறு குறு விவசாயிகளின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 2001 – 2002, 2002 – 2003 மற்றும் 2003 – 2004 ஆகிய ஆண்டுகளில் ரூ.60 இலட்சம் செலவில் 10 நலிந்த தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கப்பட்டன. 2004 –2005இல் ரூ.20 இலட்சத்தில் குந்தாவில் தேயிலை பயிரிடும் பகுதி மேம்படுத்தப்பட்டது.

* 2001 முதல் 2005 வரையிலான நான்கு ஆண்டுகளில், ரூ.727.80 இலட்சம் செலவில் ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

* சுற்றுலா வளர்ச்சிக்கு 2001ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை ரூ.216.25 இலட்சம் செலவிடப்பட்டு சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப் பட்டன. 2004–2005ஆம் ஆண்டில் ரூ.72.50 இலட்சம் மதிப்பில் உதகை படகு இல்லம் மேம்படுத்தப்பட்டது.

**உள்ளாட்சி நிறுவனங்கள் மேம்பாட்டுப் பணிகள்**

* 2001 முதல் 2005ஆம் ஆண்டு வரை ரூ.925.41 இலட்சம் செலவில் உள்ளாட்சி நிறுவனங்கள் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**நீர்வரத்துத் தலைவாயில் பணிகள்**

* ஒருங்கிணைந்த நீர்முகட்டு மேம்பாட்டு அடிப்படையில் நீர்வரத்துத் தலைவாயில் பணிகள் 2001 முதல் 2005 வரையிலான 4 ஆண்டுகளில் ரூ.464.23 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

**தொலையுணர்வு ஆய்வுப் பணிகள்**

* தொலையுணர்வு ஆய்வுப் பணிகள் 2001 முதல் 2005 வரை ரூ.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

**சுகாதாரப் பணிகள்**

* பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் பணி மற்றும் மருத்துவ வசதிகளை அளிக்கும் பணிகள் 2001 முதல் 2005 வரை ரூ.284.45 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

**மனித வள மேம்பாட்டுப் பணிகள்**

* பள்ளிகள் கட்டுதல், பள்ளிகளுக்குத் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறைகள், விளையாட்டு மைதானங்கள் செப்பனிடுதல் போன்ற மனித வள மேம்பாட்டுப் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.517.07 இலட்சம் செலவில் மேம்படுத்தப் பட்டுள்ளன.

**ஆதிதிராவிடர் நலன்**

* ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக 2001 முதல் 2005 வரை ரூ.425.56 இலட்சம் செலவிடப்பட்டு தொகுப்பு வீடுகள், தெருவிளக்கு வசதிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவை அமைத்துத் தரப்பட்டன.

**ஊரக எரிசக்திப் பணிகள்**

* ஊரக எரிசக்திப் பணிகளுக்கு 2001 முதல் 2005 வரை ரூ.100.13 இலட்சம் செலவிடப்பட்டது. ★

# விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வரும் வேளாண்மைத்துறை

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

– இது வள்ளுவர் வாக்கு

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

– என்றார் மகாகவி பாரதியார்

உழவுத் தொழிலே ஒரு நாட்டின் உயிர்நாடி போன்றது. 70 விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பியே வாழுகின்றனர். இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வேளாண் தொழிலுக்கான அனைத்து உதவிகளை வழங்கி ஒத்துழைப்பு நல்குவதே வேளாண்மைத் துறையின் பணியாகும். மாநிலத்தின் உணவு உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு பெற முதன்மைத்துறையான வேளாண்மைத் துறைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து ஊக்கமளித்து வருகிறார்கள்.

## அரசின் சாதனைகள்

### தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

★ மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 2,40,000 ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. 18,03,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட தரிசு நிலங்கள் பல்வேறு நீர்வடிப்பகுதி திட்டங்களின் கீழ் சீரமைக்கப்பட்டுள்ளன.

### உணவு தானிய உற்பத்தியின் பெருக்கம்

★ 2001–2002ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 76.89 இலட்சம் மெ.டன்கள் என்ற அளவில் இருந்தது. 2002–2003 மற்றும் 2003–2004ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சியால் உணவு தானிய உற்பத்தி குறைந்த நிலையில், 2004–2005ஆம் ஆண்டு பெறப்பட்ட மழை காரணமாக உணவு உற்பத்தி 90 இலட்சம் மெ.டன் என்ற அளவினைக் கடந்துள்ளது. இதில் 75 இலட்சம் மெ.டன் அரிசி உற்பத்தியும் அடங்கும்.

### சிறுதானியப் பயிர்கள் சாகுபடி

★ குறைந்த நீரைக் கொண்டு பலன் தரும் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தின்கீழ் 2003–04 ஆம் ஆண்டு 9.03 இலட்சம் எக்டேரிலும், 2004–05 ஆம் ஆண்டு இதுவரை 12.12 இலட்சம் எக்டரிலும் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

### செம்பான் சிலந்தி கட்டுப்படுத்தும் திட்டம்

★ செம்பான் சிலந்தியைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் 2004–2005ஆம் ஆண்டில் ரூ.9.5 கோடி செலவில் 141.426 இலட்சம் மரங்களில் பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டு 67,620 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள்.

### பெண்பிள்ளைக்கு இலவச தென்னம்பிள்ளை வழங்கும் திட்டம்

★ உலகத் தென்னை தினத்தினை முன்னிட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 2–9–2004க்குப் பிறகு பிறக்கும் கிராமப்புற பெண் குழந்தைகளுக்கு இரு தென்னம்பிள்ளைகள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, கிராமப் புறங்களில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு 31–3–2005 வரை 76,764 தென்னம்பிள்ளைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.



### மாற்றுப்பயிர்ச் சாகுபடித் திட்டம்

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த மாற்றுப்பயிர்ச் சாகுபடித் திட்டத்தின் கீழ், காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு பயிர்களில் அரசு விதைப் பண்ணைகளில் 1,500 ஏக்கர் பரப்பில் காட்டாமணக்குப் பயிரிட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு இயற்கைச் சீரழிவு நிவாரண நிதி

★ காவிரி ஆற்றுப்படுகை மாவட்டங்களில் பிப்ரவரி 2002இல் பெய்த பெருமழையால் நெல் மற்றும் பிற பயிர்களுக்கு ஏற்பட்ட பெருத்தச் சேதத்திற்கு விவசாயிகளுக்கு நிவார்ணத் தொகையாக ரூ.48.10 கோடி வழங்கப்பட்டது. 2004–2005ஆம் ஆண்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட

மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 2,73,742 விவசாயிகளுக்கு இயற்கைச் சீரழிவு நிவாரண நிதியிலிருந்து ரூ. 35.65 கோடி நிவாரணத்தொகை வழங்கப்பட்டது.

★ இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமி எனும் ஆழிப்பேரலை, 2004 டிசம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று தமிழகக் கடலோரப் பகுதிகளைத் தாக்கியதால், 8,460 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிப்புக்குள்ளானது. இதற்கு நிவாரணமாக ரூ.1.80 கோடி வழங்கப்பட்டது. மேலும், நிலங்களைச் செம்மைப்படுத்த ரூ.16.96 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**வீரிய ஒட்டு நெல் நிரூபணத் திடல்கள்**

★ 2001ஆம் ஆண்டு முதல் 2003-2004 வரை வீரிய ஒட்டு நெல் நிரூபணத் திடல்கள் 7,761 இடங்களில் ரூ.88.32 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. 2004-2005ஆம் ஆண்டில் ரூ.31.67 இலட்சம் செலவில் 3,167 செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ 5 இலட்சம் உயிர் உரப் பொட்டலங்கள் 25 சதவிகித மானியத்தில் விநியோகிக்கப்பட்டன.

★ 20.73 இலட்சம் தரமான நெட்டை தென்னங் கன்றுகள் மற்றும் 14.38 இலட்சம் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் துறை மூலமாக உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

★ சிறுவிவசாயிகளுக்கு ரூ.1.92 கோடி மானிய செலவில் வேளாண் உதவி இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

★ ஒருங்கிணைந்த முறையில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், மண்வளம் காத்தல் மற்றும் மானாவாரி மற்றும் நிலமற்ற வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ.51.47 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.

★ கடந்த நான்காண்டுகளில் ரூ.75.013 இலட்சம் செலவில் மக்காச்சோளம் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம், ரூ.4.89 கோடி செலவில் தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம், ரூ.23 கோடி மதிப்பில் எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் ஆகியன செயல்படுத்தப்பட்டன.

★ தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டத்தில் ரூ.10.36 கோடி செலவில் 1.14 இலட்சம் பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.



**பேரியல் மேலாண்மைத் திட்டம்**

★ பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், தானிய உற்பத்தித் திட்டம், கரும்பு உற்பத்தித் திட்டம், மானாவரி நீர்வடிப் பகுதி மேம்பாடுத் திட்டம் போன்ற திட்டங்கள் ரூ.83.71 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ கடந்த 4 ஆண்டுகளில் பசுந்தாள் உர விதைகள் 25 சதவிகித மானியத்தில் ரூ.84 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

**பயறு கிராமத் திட்டம்**

★ பயறுவகைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த ரூ.106.25 இலட்சம் செலவில் 17 மாவட்டங்களில் பயறு கிராமத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ தீவிர நெல் சாகுபடித் திட்டத்தின்கீழ், 2004-2005ஆம் ஆண்டு 5,804 செயல் விளக்கங்கள் ரூ.29.016 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2003-2005ஆம் ஆண்டுகளில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிருவாகம் மூலம் மண்வளத்தைக் காக்க ரூ.51.84 இலட்சம் செலவில் 16,200 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ விதைத் தரத்தை மேம்படுத்தவும் விவசாயிகளுக்குத் தரமான விதை வழங்கவும் ரூ.20.87 இலட்சம் செலவில் 9 விதைச் சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்படுத்தப்பட்டன.

★ அனைத்து வேளாண் மற்றும் சகோதர துறையைச் சார்ந்த 1,400 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பில் தொழில்நுட்பப் பயிற்சி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் அளிக்கப் பட்டது.

★ ராபிப் பருவ செயல் திட்டத்தின் கீழ் அனைத்துக் கிராமப்பள்ளிகளிலும் 22,779 தீவிர முன்பருவ முகாம்கள் நடத்தப்பட்டு, 5,47,545 விவசாயிகள் பயனடைந்தனர்.

★ 2004-05 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்களை உரிய முறையில் பாதுகாக்க 100 விரிவாக்க மையங்கள் ரூ.107.23 இலட்சம் செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

★ நடப்பு ஆண்டு சுமார் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் விநியோகிக்கவும், 36,200 இலை வண்ண அட்டைகள் விநியோகிக்கவும், மண் வள வரைபடம் தயாரிக்கவும் ரூ.22.37 இலட்சம் செலவில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வேளாண்மைப் பொறியியல் துறை

★ நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 2001 – 2002ஆம் ஆண்டில் ரூ. 547.25 இலட்சம் செலவில் குந்தா, கீழ்பவானி மற்றும் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 4,473 எக்டேர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டன. 2002 – 2003ஆம் ஆண்டில் ரூ. 521.26 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்திலுள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 3,058 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப் பட்டன. 2003 – 2004ஆம் ஆண்டில் ரூ. 614.19 இலட்சம் செலவில் தேனி மாவட்டத்திலுள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் தருமபுரி மாவட்டத்திலுள்ள தென்பெண்ணை ஆறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் 3,812 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2004–2005ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணை ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 5,965 எக்டேர் பரப்பில் ரூ.627.52 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

★ களர் நிலச் சீர்திருத்தத் திட்டத்தின்கீழ், களர் நில சீராக்கத் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி 2003–2004ஆம் ஆண்டில் 1,527 எக்டேர் பரப்பில் ரூ.19.28 இலட்சம் செலவில் களர் நிலச் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன . 2004–2005ஆம் ஆண்டில் 1,529 எக்டேர் பரப்பில் களர் நில சீர்திருத்தப்பணிகள் ரூ.37.07 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் 47,934 எக்டேர் பரப்பில் ரூ.33.64 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தமிழக அரசின் மூலம் 2003–2004 மற்றும் 2004–2005ஆம் ஆண்டுகளில் ரூ.12.35 கோடி செலவில் பணிகள் செயல்படுத்தப் பட்டன.

### வேளாண் இயந்திரங்கள்

★ 2002–2003 முதல் 2004–2005 வரை வேளாண் இயந்திரங்கள் உட்பட பல்வேறு கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு ரூ.5.44 கோடி மானியமாகவும் வழங்கப்பட்டது.

★ 2001 முதல் 2005 வரையிலான நான்காண்டுகளில் ரூ.169.47 கோடி செலவில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளும் சுழற்சிமுறை நீர்ப்பாசனப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை பதிவு செய்யப்பட்ட 698 விவசாயிகள் குழுக்களில் (Farmers'Councils) 663 விவசாயிகள் குழுக்களுக்கு மார்ச் 2005 வரை மேலாண்மை மானியமாக ரூ.1,626.514 இலட்சம், உருவாக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ளது.

★ பண்ணைக்குட்டைகள் அமைத்தல் மற்றும் வறண்ட கிணறுகள் சீரமைத்தல் போன்ற மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் மூலம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ஜூலை 2002 முதல் மார்ச் 2004 முடிய 8,833 பண்ணைக் குட்டைகள் ரூ.25.64 கோடி செலவில் அமைக்கப்பட்டன. மேலும் 2,093 வறண்ட கிணறுகளை ரூ.2.64 கோடி செலவில் புதுப்பித்து மழை நீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் திட்டத்தில், கடந்த நான்காண்டுகளில் ரூ.3.71 கோடி செலவில் 2,702 எக்டேர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

### மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

★ மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கடந்த நான்காண்டுகளில், ரூ.13.41 கோடி செலவில் 8,650 எக்டேர் நிலப்பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல் படுத்தப்பட்டன.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மண்வளப்பாதுகாப்புப் பணிகள், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.13.97 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

### குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்

★ குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ், கடந்த 4 ஆண்டுகளில் புதிய குழாய் கிணறுகள் அமைத்தல், வடிமுனை குழாய் கிணறுகள் அமைத்தல் போன்ற 20,562 எண்ணிக்கையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ வேளாண்மைக்குப் பயன்படும் நீரேற்றப் பம்புகளின் திறனை மேம்படுத்தும் திட்டமாக 2003–2004ஆம் ஆண்டில் தேனி, கோயம்புத்தூர், விழுப்புரம் மாவட்டங்களில் மூன்று மின்பிரிவுகள் பகுதிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டு, இதுவரை 34 விசை இறைப்பான்களின் உபயோகிக்கும் திறன் ரூ.11.12 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2004–2005ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 15,309 விசை இறைப்பான்களை மேம்படுத்தும் வகையில் ரூ.919.32 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### வேளாண்மைக் கல்வி

✶ இளம் அறிவியல் பட்டப்படிப்பு பாடத்துடன் நடத்தப்படும் புதியதாக ஆற்றல் சுற்றுச்சூழல் பொறியியல் துறையில் தற்சார்பு இளநிலை பட்டப்படிப்புக் கல்வியில் 603 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் 289 நபர்கள் மாணவியர்கள் ஆவர். இக்கல்வியாண்டு முதல் மூதறிவியல் பட்டப்படிப்பில் வேளாண்மை சார்ந்த வானிலையியல், வேளாண்மை உயிர்வேதியியல், உயிரியல் தொழில்நுட்ப தகவலியல் ஆகிய புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

✶ திண்டிவனத்திலுள்ள எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் அமைந்திருக்கும் முனைவர்.சி.சுப்பிரமணியம் வேளாண்மைக் கல்வி நிலையத்தில்; வேளாண்மையில் பட்டயப்படிப்பு தற்சார்பு முறையில் தொடங்கப்பட்டுள்ளது. இதில் 49 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

- ★ இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் முழு நிதியுதவியுடன் தமிழகத்தில், திரூர்குப்பம், விரிஞ்சிபுரம், சிக்கல், நீடாமங்கலம், வம்பன், இராமநாதபுரம், பேச்சிப்பாறை, மதுரை, திண்டிவனம் ஆகிய ஒன்பது இடங்களில் புதிய வேளாண் அறிவியல் நிலையங்கள் 2004-ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளன.

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

### தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

வேளாண்மையில் தோட்டக்கலை ஒரு வளர்ச்சி அங்கமாக உருவாகி வருவதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, "தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்ககம்" ஏற்படுத்தியது.

### வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

- ★ தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்றுமதி வாய்ப்பைக் கருத்தில்கொண்டு 2002-2003ஆம் ஆண்டில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலங்கள் ஒசூர் மற்றும் நீலகிரியிலும் "மா"விற்காக ஒரு ஏற்றுமதி மண்டலம் தேனியிலும் (மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கியது) ஏற்படுத்தப் பட்டுள்ளன.

### தமிழ்நாடு துல்லியப் பண்ணையம்

- ★ வேளாண் சாகுபடி முறைகள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இஸ்ரேல் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தொழில் நுட்பங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு ரூ.720.60 இலட்சம் செலவில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் "தமிழ்நாடு துல்லியப் பண்ணையம்" என்னும் திட்டம் அரசால் ஏற்படுத்தப்பட்டு, முதலாமாண்டு இலக்கான 100 எக்டேர் 2004-05ஆம் ஆண்டில் செயல்படுத்தப் பட்டது. இத்திட்டத்தினுடைய ஆக்கப்பூர்வமான வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு 2005-2006ஆம் ஆண்டில் மேலும், ஆறு மாவட்டங்களில் செயல்படுத்துவதற்காக அரசு ரூ.10 கோடி துல்லியப் பண்ணையத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்துள்ளது.

### காட்டாமணக்கு மாதிரிப் பண்ணைகள் அமைத்தல்

- ★ 11 அரசுத் தோட்டக் கலைப் பண்ணைகளில் 500 ஏக்கரில் காட்டாமணக்கு மாதிரிப் பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ★ 2003-04 மற்றும் 2004-05ஆம் ஆண்டுகளில், நீலகிரி மாவட்டத்தில் தேயிலையுடன் மாற்றுப் பயிர்த் திட்டம் ரூ.100 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப் பட்டது.
- ★ ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பல்லாண்டு பழவகைப் பயிர்களைப் பயிரிடத் திட்டமிடப்பட்டு, ஒரு பழங்குடி விவசாயிக்கு அதிகபட்சமாக 0.40 எக்டர் பரப்பிற்குத் தரமான நடவுச் செடிகளை 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படுகிறது.
- ★ மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையம், குடுமியான்மலை தோட்டக்கலைப் பயிற்சி மையம், "பெரியகுளம்" தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றை மேம்படுத்திட தலா ரூ.5 இலட்சம் உதவி நிதியாக வழங்கப்படுகிறது.
- ★ தோட்டக்கலை பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு முழு உதவித்தொகையாக ரூ.5,000க்கு மிகாமல் கல்வி நிறுவனங்களில் மாதிரித் தோட்டக்கலை தோட்டங்கள் அமைக்கப்படுகிறது.
- ★ கடந்த நான்காண்டுகளில் தோட்டக்கலை வளர்ச்சிக்காக மாநிலத் திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ.38.40 கோடியும், மத்திய மாநில அரசுகள் பங்குபெறும் திட்டங்களின்கீழ் ரூ.49 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

## விதை சான்றளிப்புத் துறை

- ★ விதை உற்பத்திப் பெருக்கம் 2001-2002 ஆண்டில் 43,216 மெட்ரிக் டன்களாகவும், 2002-2003 ஆண்டில் 41,325 மெட்ரிக் டன்களாகவும், 2003-2004 ஆண்டில் 41,331 மெட்ரிக் டன்களாகவும், 2004-05 ஆண்டில் 48,269 மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்தது.

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

- ★ ஒசூர் டான்ஃப்ளோரா மலர் ஏற்றுமதி மண்டலத் திலிருந்து தற்போது ரூ.10.80 கோடி மதிப்புடைய 400 மெட்ரிக் டன் கொய்மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
- ★ கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளது.
- ★ திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் 100 ஏக்கர் பரப்பளவில் உணவுப்பூங்கா அமைக்கப்படவுள்ளது.
- ★ ஈரோட்டில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ.36.32 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது.
- ★ பருத்தி தொழில்நுட்பக் குழுமம் உதவியுடன் ரூ.919 இலட்சம் செலவில் விழுப்புரம், திருப்பூர், அன்னூர் மற்றும் மூலனூர் ஆகிய நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பருத்தி விற்பனைக்கென சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ★ ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வெல்லத்திற்கென நவீன உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.101.60 இலட்சம் செலவில் ஏற்படுத்தப் படவுள்ளது.

★ ★ ★

# செய்தி மற்றும் சுற்றுலாத்துறை

மக்களாட்சி முறையை முழுமையாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற அரசியல் அமைப்பில், அரசின் அன்றாடச் செயல்பாடுகள் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பது அரசின் கடமையாகும். அரசின் கொள்கைகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி அரசு அளித்து வரும் சலுகைகள் போன்றவற்றை அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயனுள்ளதாக்கிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத்துறை முக்கியப் பங்கு வகிக்கின்றது. அரசுக்கும், மக்களுக்கும் ஒரு பாலமாகச் செய்தி – மக்கள் தொடர்புத்துறை சிறப்பான முறையில் பணியை ஆற்றி வருகின்றது.

## அரசின் சாதனைகள்

**பத்திரிகையாளர்கள் நலன்**

* பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற ஓய்வூதியம் 2001 ஆம் ஆண்டிலிருந்து ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தப்பட்டு 67 பத்திரிகையாளர்கள் பயனடைகின்றனர்.
* பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் ரூ.500லிருந்து ரூ.1,500ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
* அங்கீகாரம் அல்லது அடையாள அட்டைகள் பெற்று 20ஆண்டுகள் அல்லது அதற்குமேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பத்திரிகை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் இவர்களில் பணியிலிருக்கும் போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவித்திட்டத்தின் மூலம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி உதவி 2001 ஆம் ஆண்டு முதல் ரூ.50,000/– விருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப் பட்டு, இதுவரையில் இத்தகு இயற்கை எய்திய 3 பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
* சென்னை மற்றும் மாவட்டங்களில் உள்ள செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் உட்பட 1,032 பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
* காஞ்சிபுரம், இராமநாதபுரம், மதுரை, தருமபுரி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 238 பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

**நினைவகங்கள்**

நாட்டிற்காக உழைத்த தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் சான்றோர்களின் நினைவினை, எதிர்கால சந்ததியினர் அறிந்திடும் வகையிலும், அவர்தம் நினைவைப் போற்றிடும் வகையிலும் அரசின் சார்பில் மணிமண்டபங்கள், நினைவு மண்டபங்கள் அமைத்துச் சிறப்பு செய்யப்படுகிறது. மேலும் அவர்களின் பிறந்த நாள் விழாக்கள், நினைவுநாள் விழாக்கள் அரசின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள நினைவகங்கள் மற்றும் மணிமண்டபங்கள் பின்வருமாறு :

* **கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார்** அவர்களுடைய நினைவாக, திருநெல்வேலியில் ரூ. 75 இலட்சம் செலவில் **மணிமண்டபம்** கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
* **நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவாக,** தென்னிந்திய நடிகர் சங்கத்தின் மூலமாக நினைவு மண்டபம் அமைப்பதற்கென, அடையாறு ஆந்திர மகிளசபா அருகில் ரூ.10 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டிலான 0.65 ஏக்கர் அரசு மனையிடம் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு இலவசமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* தமிழகத்தின் முன்னாள் **முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்** அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்கும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓமந்தூர் கிராமத்தில் 0.46.5 எக்டேர்நிலம் ரூ.43,500 செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மணிமண்டபம் கட்டுவதற்கு ரூ.75 இலட்சத்திற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.
* கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளிக்கு அருகிலுள்ள மோர்னப்பள்ளியில் **மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம்** அமைத்திட 1.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
* ஈரோடு மாவட்டம் அரச்சலூர் கிராமம் ஓடாநிலையில் **தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம்** அமைக்க 3.05.0 எக்டேர் தனியார் நிலம் ரூ.19.67 இலட்சம் செலவில் அரசின் சார்பில் கையகப்படுத்தப் பட்டுள்ளது. இங்கு ரூ.30 இலட்சத்தில் மணி மண்டபமும், ரூ.20 இலட்சத்தில் சமுதாயக் கூடமும் உருவாக்கிடும் வகையில், அரசின் சார்பில் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப்பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

* தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில், **அதியமான் கோட்டம் மற்றும் திருமண மண்டபம்** அமைத்திடும் வகையில், 0.81.0 எக்டேர் நிலம் ரூ.1,28,253 செலவில் கையகப்படுத்தப்பட்டு, அவற்றை உருவாக்குவதற்கான ரூ.112 இலட்சம் மதிப்பீட்டிலான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா நினைவாகப் **பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஊரான விருதுநகரில்** நகராட்சி தங்கும் விடுதி வளாகத்தில் **ரூ.5 இலட்சத்தில் நினைவுத்தூணும், ரூ.9 இலட்சத்தில்** மணிமண்டபமும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

* திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாவினையொட்டி, திருப்பூர் குமரன் நினைவகத்தில் அவரது **மார்பளவு வெண்கலச் சிலை** நிறுவப்பட்டுள்ளது. மேலும் திருப்பூர் குமரன் நூற்றாண்டு நினைவாகத் தபால் தலை வெளியிடப்பட்டது.

* சென்னை மெரினா கடற்கரையில் உள்ள **பாரதரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில், டாக்டர் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம்** ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

* முன்னாள் குடியரசுத் தலைவர் **டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன், தந்தை பெரியார்** ஆகியோரின் 9 அடி உயர வெண்கலச்சிலைகள், ஒவ்வொன்றும் தலா ரூ.2.50 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு, புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவப்படவுள்ளன.

* ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் 28 நினைவகங்களில் தொடர்புடைய தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய கிரானைட் கல்வெட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

* **தியாகி செண்பகராமன்** அவர்களின் முழுவுருவச் சிலை சென்னை, கிண்டியிலுள்ள காந்திமண்டப வளாகத்தில் நிறுவப்படவுள்ளது.

* செஞ்சிக்கோட்டை அரசன் **தேசிங்கு ராஜன்** உயிர்நீத்த இடமான விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திலுள்ள கடலி கிராமத்தில் நினைவகம் கட்டப்படும்.

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 9–3–2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவுச்சின்னம், நினைவு மண்டபம்** அரசு சார்பில் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையின் சார்பில் இதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் 10–3–2005 அன்று **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள்** கடைசி காலத்தில் வாழ்ந்த மதுரை – திருநகர் **இல்லம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவில்லமாக அரசின்** சார்பில் உருவாக்கப் படுமென்று அறிவிக்கப்பட்டு, இதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* **வீரன் சுந்தரலிங்கம், வீரபாண்டிய கட்ட பொம்மனுடன் போர்ப்படைத் தளபதியாக விடுதலைப்போரில் உடன் இருந்த வெள்ளையத் தேவன், மொழிவளர்ச்சிக்காகப் பாடுபட்ட தேவநேயப் பாவாணர்** ஆகியோர்களின் நினைவைப் போற்றிடும் வகையில் அரசின் சார்பில் மணிமண்டபங்கள் அமைக்கப்படுவதற்கான கருத்துருக்கள் ஆய்வில் உள்ளன.

**திரைப்பட விருது வழங்கும் விழா**

* 2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுக்கான திரைப்படத்துறையினருக்கான விருதுகளை 3.12.2004 அன்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 134 திரைப்படக் கலைஞர்களுக்கு வழங்கி, சிறப்புச் செய்தார்கள்.

* திரைப்பட விருது வழங்கும் திட்டத்தின் கீழ் புதிய விருதுகள் தோற்றுவித்துச் சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர் மற்றும் சிறந்த குணச்சித்திர நடிகை ஆகியோருக்கு விருதுகள் 2002ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

* 1.10.2004 முதல் அரசு இடங்களிலும் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களிலும் படப்பிடிப்பு நடத்தப்படும் படப்பிடிப்புகளுக்கான கட்டணம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**அரசுமானியம்**

* குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.5 இலட்சமாக இருந்த மானியத்தொகையை 2003 ஆம் ஆண்டு முதல் ரூ.7 இலட்சமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்**

* 2001–2002ஆம் ஆண்டு கல்வி ஆண்டு முதல் ஒவ்வொருப் பட்டயப் படிப்பிற்கு அனுமதிக்கப் பட்டிருந்த 12 இருக்கைகள் 14ஆக அதிகரிக்கப் பட்டன.

* இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் 5 பட்டயப் படிப்புகளுக்கும், புதுடெல்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது.

* 11.5.2005 முதல் 22.5.2005 வரை பாரிஸ் நகரில் நடைபெற்ற CANNES FILM FESTIVALக்கு இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 4 பட்டயப் படங்கள் திரையிடப்பட்டன.

* 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஜெர்மனியில் நடைபெறவுள்ள பாலிவுட் அண்ட் பிளாண்ட் என்கிற

திரைப்பட விழாவில் கலந்து கொள்வதற்காக இந்நிறுவன மாணவர்களின் 6 பட்டயப் படங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.




★ மாணவர்களுக்கு நவீனத்தொழில்நுட்ப அடிப் படையில் பயிற்சி அளித்திடும் வகையில், ரூ.11 இலட்சத்தில் இன்டர்நெட் வசதியுடன் கணினிகள் வாங்கப்பட்டுள்ளன. திரைத்துறைத் தொடர்பான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூ.61.45 இலட்சத்தில் வாங்கப்பட்டுள்ளன.

**தமிழரசு**

தமிழக அரசின் செயல்பாடுகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே சேர்க்கும் ஊடகம் 'தமிழரசு' இதழ்.

அரசின் சாதனைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைகள், அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், அறிவிப்புகள், மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், திட்டங்கள், செயல்பாடுகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள், இலக்கியம், மருத்துவம் போன்ற பொதுக்கட்டுரைகள் மற்றும் பிறமொழிக் கதைகள் போன்றவை தமிழரசு இதழில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன.

2001 ஏப்ரல் வரையில் மொத்தம் 48,000ஆக இருந்த தமிழரசு தமிழ் இதழின் சந்தாக்கள், தற்பொழுது 75,638ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்பு 1,131ஆக இருந்த ஆயுள் சந்தாக்கள், தற்பொழுது 42,712ஆக உயர்த்தப்பட்டு, இதன் மூலம் 4 கோடியே 27 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் அரசுக்கு வருவாயாக ஈட்டப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

**பொருட்காட்சி**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள், அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த உரிய விளக்கங்களைப் பொது மக்கள் எளிதில் அறிந்திடும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் ஏப்ரல் – ஜூன் மாதங்களிலும், சேலத்தில் ஜூலை – செப்டம்பர் மாதங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப் படுகின்றன.

பொருட்காட்சிகளில், அரசுத்துறைகள், அரசுச் சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை பங்கேற்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்கு பொழுதுபோக்காக அமைவதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்பையும் அளித்து வருகின்றன.

கடந்த 4 ஆண்டுகளில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிகளின் மூலம் ரூ.4,35,56,000 இலாபம் அரசுக்கு வரப்பெற்றுள்ளது. சென்னையில் ஆண்டு தோறும் நடைபெறும் குடியரசு தினவிழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்வதும், ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். ★

## சுற்றுலாத் துறை

தமிழகத்தில் சுற்றுலாத்துறை தமிழகப் பொருளாதார மற்றும் மக்களின் பண்பாடு, வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த ஒரு முக்கியப் பங்காற்றி வருகிறது. இத்துறையால் அயல்நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டின் பாரம்பரியமிக்க கோயில் தலங்கள், அருவிகள், பூங்காக்கள், பொங்கல் திருநாள் போன்ற கலாச்சார விழாக்களில் கலந்துகொள்ள ஏதுவாக இத்துறையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இத்துறை மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதனால் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டின் சொகுசு வரி மற்றும் அயல்நாட்டுச் செலாவணி அதிகரிக்க வழிவகுக்கப்பட்டு வருகிறது. அரசு இத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுலாவை மேம்படுத்தி வருகிறது என்பது மிகையாகாது.

**ஆசியாவின் சிறந்த நுழைவு வாயில்**

ஆசியாவின் வளர்ச்சிக்கோட்டில் சிறந்த இடத்தில் தமிழ்நாடு உள்ளதால், ஆசியாவின் **இந்திய நுழைவாயிலாகத்** தமிழ்நாடு கருதப்படுகிறது.

**சுற்றுலாத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு**

★ கடந்த 4 ஆண்டுகளில் சுற்றுலாத்துறைக்கு ரூ.107.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் தமிழக சுற்றுலாத்துறை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

★ தமிழகத்தில் ஓட்டல்களில் விதிக்கப்படும் சொகுசு வரி 2002–2003இல் குறைக்கப்பட்டுள்ளது.

★ ரூ.19 கோடி திட்ட மதிப்பீட்டில் 8.1.2003 அன்று மாமல்லபுர வளர்ச்சிப் பணிகள் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விழாவின்போது, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 சுற்றுலாத் தகவல் மையங்கள் அகமதாபாத், சண்டிகர், கவ்காத்தி, வாரணாசி, புவனேஸ்வர் மற்றும் ஆக்ரா, ஜெய்ப்பூரில் சுற்றுலா அலுவலகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிக்காக வேலையில்லா பட்டதாரிகளைத் தேர்வு செய்து 90 பேருக்கு சென்னை, மதுரை, ஊட்டி போன்ற மையங்களில் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிகள் ரூ.5 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டன.



★ ஆதிசங்கரர் மற்றும் விவேகானந்தா சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டுப்பணிகளுக்கு ரூ.427.64 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சுகாதார மற்றும் மனவளச் சுற்றுலாவுக்கு உகந்த முன்னணி இடமாகத் தமிழக சுற்றுலாத்துறை விளங்குகிறது.

**கிராமியச் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்**

கழுகுமலை மேம்பாட்டிற்கு : ரூ.48.68 இலட்சம்
செட்டிநாடு மேம்பாட்டிற்கு : ரூ.50.00 இலட்சம்
தீர்த்தமலை மேம்பாட்டிற்கு : ரூ.50.00 இலட்சம்
நிதிஒதுக்கீடு செய்துள்ளது.

★ நவகிரகத் தலங்கள், செட்டிநாடு, பழவேற்காடு, பிச்சாவரம் மற்றும் தரங்கம்பாடி உள்ளிட்ட புராதனப் பெருமை கொண்ட இடங்களை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் சுற்றுலாத்தலங்களை சுற்றுலாத் துறை மேம்படுத்தியுள்ளது.

★ மதுரை திருமலைநாயக்கர் மகாலிலுள்ள ஒலி–ஒளிக் காட்சி ரூ.96.18 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

★ கன்னியாகுமரியில் படகு குழாம் பகுதியில் ஒலி–ஒளிக் காட்சி அமைக்க மைய அரசு ரூ.225 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**ஸ்கால் மாநாடு**

64ஆவது ஸ்கால் மாநாடு 2003ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 முதல் 24 வரை சென்னையில் நடைபெற்றது. ஸ்கால் மாநாட்டில் 700 முக்கியப் பிரமுகர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து பங்கேற்றனர். மாண்புமிகு முதலமைச்சர் இம்மாநாட்டில் பங்கேற்று சிறப்புச் செய்தார்கள். சென்னையில் நடத்தப்பட்ட இம்மாநாட்டிற்கு மத்திய அரசு விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. 2003ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளதால், தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் இரண்டாம் மாநிலமாகத் திகழ்கிறது.

**சுனாமி 2004**

சுனாமி தாக்கியவுடன் சுற்றுலாத்துறை நிவாரணப் பணிகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டது. இந்தியாவின் பிற பகுதிகள்/வெளிநாடுகளில் வசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் உறவினர்களுக்குத் தகவல் அளிக்க ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டார். சுனாமிக்குப் பின் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளைப் பற்றிய தகவல்கள் வலைதளம் மூலம் வழங்கப்பட்டன.

**சுற்றுலாத் துறைக்கு விருது**

தமிழ்நாடு சுற்றுலாத்துறை "ட்டி 3" அமேடியஸ் விருது, கலிலியோ எக்ஸ்பிரஸ் பயணம் மற்றும் சுற்றுலா விருது, பாட்வா சர்வதேச விருது போன்ற தேசிய மற்றும் உலக அளவில் பல பெருமைக்குரிய பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளது.

**கப்பல் சுற்றுலா**

கப்பல் வழிச் சுற்றுலாவை ஈர்ப்பதில் தமிழக சுற்றுலாத்துறை பெரும் பங்கு வகிக்கிறது. கப்பல் வழி சுற்றுலாப் பயணிகளைச் சென்னை மாநகர், மாமல்லபுரம், காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது.

**சுற்றுலா வலைதளம்**

தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் பற்றிய விவரங்கள், விழாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் உணவகங்கள், தங்கும் விடுதிகள் பற்றிய விரிவான விளக்கங்களை உலகில் எந்தவொரு மூலையில் இருக்கும் சுற்றுலாப் பயணியும் எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம் ஒரு சுற்றுலா வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இணையத்தள (Online Reservation) முன் பதிவு வசதி 2–7–2004 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் மார்ச் 2005 வரை ரூ.14.13 இலட்சம் வரை வருமானம் கிடைத்துள்ளது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**இரயில் சுற்றுலா**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இரயில் சுற்றுலாவைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கொல்கத்தா, மும்பை, டில்லி, அகமதாபாத், லக்னோவிலிருந்து இரயில் சுற்றுலாவை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதன் மூலம் ரூ.127 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. சுற்றுலா மேம்பாட்டிற்காக இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மற்றும் இதர மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது.

**கம்பி வழிப் பயணம்** (Rope Car)

அதிக வருவாய் ஈட்டக்கூடியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், மைய அரசும் இணைந்து கம்பி வழிப் பயணத்திற்காக 2003–2004 நிதியாண்டில் கொடைக்கானலுக்கு ரூ.1,452 இலட்சமும், உதகமண்டலத்திற்கு ரூ.1,597 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்காடு மற்றும் கன்னியா குமரியிலும் இதனை அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த நான்காண்டுகளில் ரூ.616.01 இலட்சம் இலாபம் ஈட்டி சிறப்புடன் செயல்படுகிறது. ★

# பொருளாதாரப் புரட்சிக் காணும் கூட்டுறவுத்துறை



"கூட்டுறவே நாட்டுயர்வு"

– என்ற தத்துவத்தை நிலைநாட்டிடும்வகையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்த் துறையில் கூட்டுறவுத் துறை ஒரு முக்கிய அங்கமாகவும், மாநில ஊரகக் கடன் வசதித் திட்டத்தின் முதுகெலும்பாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டு காலமாக பொதுமக்களுக்கு வேண்டிய அரிசி மற்றும் இன்றியமையாப் பொருள்கள் பொது விநியோகத் துறையின் மூலம் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு அரசின் தளராத முயற்சியால் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆக்கப்பூர்வமானப் பணிகளை நாட்டு மக்களுக்குச் செய்து வருகிறது.

**விவசாயிகளுக்கான வட்டி தள்ளுபடி**

★ விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடித் திட்டம் 2001ன் கீழ் விவசாயிகளுக்கு 226.56 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 6,11,193 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

★ 2002–2003ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாகவும், வேளாண் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்புக் காரணமாகவும் 250 கோடி ரூபாய் குறுகிய காலப் பயிர்க்கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு தன் பங்காக ரூ. 20 கோடிக்கு ஒப்புதல் அளித்தது.

★ 2002–03ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியின் காரணமாக ஏற்பட்ட இன்னல்களைத் தீர்க்கும் வகையில் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களின் மீதான வட்டியை அரசு தள்ளுபடி செய்தது. இந்நோக்கத்திற்காக அரசு ரூ. 61.05 கோடி ஒப்பளிப்புச் செய்தது. இத்திட்டத்தின் கீழ் 1,67,000 விவசாயிகள் பயனடைந்தனர்.

★ 2003–04ஆம் ஆண்டில் விவசாயிகளால் செலுத்தப் படவேண்டிய பயிர்க்கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை ரூ. 62 கோடி அளவிற்கு அரசு தள்ளுபடி செய்தது. இத்திட்டத்தின் கீழ் 2,43,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

★ நீலகிரி மாவட்டத்தில் தேயிலை உற்பத்தியாளர்கள் பெற்ற கடன்கள் மீதான தவணை கடந்த வட்டி, தள்ளுபடி செய்ய ரூ.1.80 கோடி அரசால் அனுமதியளிக்கப்பட்டது.

★ 1999ஆம் ஆண்டுக்கு முன் மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன் மற்றும் மத்திய கால மாற்றுக் கடன்களில், 31.3.2004 அன்று நிலுவையில் இருந்த கடன்கள் மீண்டும் ஒரு தொகுப்புக் கடனாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்காக அரசால் ரூ.68.95 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழக அரசுதான் 31.3.2004 அன்று நிலுவையிலிருந்த பயிர்க்கடன் மற்றும் அதன்மீதான வட்டியை, 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக மாற்றியமைத்து (Reschedulement) அதில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு கடனைக் கட்ட வேண்டியதில்லை என்றும், அடுத்த மூன்று ஆண்டுகளில் அக்கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 31.3.2005 அன்றுள்ளபடி ரூ. 1,556.83 கோடி அளவிற்கு 7,65,607 விவசாயிகளின் கடன்கள் மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

**பயிர்க்கடனுக்கான வட்டி விகிதம் குறைப்பு**

★ விவசாயிகள், தற்போது நிலவிவரும் வட்டி விகிதத்தில் கடன் பெறுவதை உறுதி செய்வதற்காகப் பயிர்க்கடனுக்கான வட்டி விகிதம் 12% லிருந்து

9% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழக அரசுதான் பயிர்க்கடன் மீதான வட்டியை இந்த அளவிற்குக் குறைத்தது.

**கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன்**

★ 2004–2005ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் 1,037 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கவேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட குறியீடு அளவைவிட அதிக அளவில் 5,29,446 விவசாயிகளுக்கு ரூ.1,080.58 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**கடன் தீர்வுத் திட்டம்**

★ நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், நீண்டகாலமாக உள்ள நிலுவைத் தொகைகளை வசூலித்திட வழிவகுத்திடவும் ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டம் (One Time Settlement Scheme) என்ற திட்டத்தை அரசு அறிவித்தது. இதுவரை 32,008 நபர்கள் ரூ.42.47 கோடி அளவிற்குப் பயனடைந்துள்ளனர்.

★ சிறு தேயிலை பயிரிடுவோர்களின் துயர் துடைக்கும் நோக்கத்துடன், இன்கோசர்வ் நிறுவனம் பதப்படுத்திய தேயிலைத் தூளைப் பொது விநியோக நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யும் திட்டத்தின்கீழ் இதுகாறும் 9,545 மெ.டன் ஊட்டி டீத்தூள் 85.91 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**காதிப் பொருட்கள் விற்பனை**

★ கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பு விற்பனை செய்யும் திட்டத்தில் இதுவரை 65,724 மெட்ரிக் டன் உப்பு 16.43 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் காதிப்பொருட்கள் விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 4.79 கோடி ரூபாய்க்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன்கள்**

★ கூட்டுறவு வங்கிகளால் பல்வேறு நோக்கங்களுக்காக 2001–02 முதல் 2004–05 வரை வழங்கப்பட்டுள்ள குறுகிய கால விவசாயக் கடன், மத்திய காலக்கடன், நீண்டகால விவசாயக் கடன், நகைக்கடன், பண்ணைசாரா கடன், வேளாண்மை உற்பத்தி ஈட்டுக்கடன், தொழில் கடன், வீட்டுவசதிக் கடன் மூலம் வழங்கப்பட்ட தொகை ரூ.24,858.02 கோடி ஆகும்.

**கூட்டுறவு வங்கிகளில் மகளிர்க்கு வழங்கப்பட்ட கடன்**

★ கூட்டுறவு வங்கிகளின் பெண் அங்கத்தினர்களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.379.37 கோடி. பயனடைந்தோர் எண்ணிக்கை 2,76,489 பேர்.

**தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம்**

★ தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கடன்தாரர்களுக்கு மாநில அரசின் பங்கு ரூ. 26.68 கோடியையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ரூ.60.03 கோடி அளவிற்கு 1,50,355 நபர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

**நீண்டகாலப் பண்ணைக் கடன் பெற்றோருக்கு வட்டியில் சலுகை**

★ சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியினைச் செலுத்துவோருக்கு 31.3.2001 அன்றுள்ள அபராத வட்டி 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டி, கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் பயனாக 145.90 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு மாநிலத்திலுள்ள 1,78,550 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறுவர்.

★ நீண்ட காலப் பண்ணைக் கடன் பெற்ற பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31.3.2001 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையிலுள்ள அசல், வட்டி மற்றும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதி வரை உள்ள வட்டியில் 50 சதவிகிதம் செலுத்துவோருக்கு, 31.3.2001 அன்று நிலுவையில் இருந்த அபராத வட்டியும் 1.4.2001 முதல் செலுத்தும் தேதிவரைக்கான வட்டியில் 50 சதவிகிதமும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டியும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம்

92.12 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும். 57,430 விவசாயிகள் பயன் பெறுவர்.

★ இதர பண்ணைசாரா கடன்தாரர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 31.3.2003 அன்று செயல் இழந்த சொத்துக்களாக நிலுவையில் உள்ள அசலையும், செலுத்தும் தேதி வரையிலான மொத்த வட்டியினையும் செலுத்தினால், 31.3.2003 அன்று நிலுவையில் உள்ள அபராத வட்டி, அதன் பின்னர் விதிக்கப்படும் கூடுதல் வட்டி, மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் 42.28 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு 17,990 கடனாளிகள் பயன் பெறுவர்.

★ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 31.3.2004 அன்றைய தேதியில், 356.01 கோடி ரூபாய் அளவுக்கு நடுத்தரக் காலப் பண்ணைக் கடன் நிலுவையில் உள்ளது. விவசாயிகள் இக்கடன்களைச் சுலபமாகத் திருப்பிச் செலுத்துவதற்காக, இந்தக் கடனையும் நபார்டு வங்கியின் வழிமுறையின்படி முதல் 2 ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளித்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய கடனாக மாற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ நகர கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற தங்களது பழைய கடன்களுக்கு தற்போதைய நடப்பு வட்டி வீதத்திலேயே 1.4.2001 முதல் வட்டி வீதத்தை முன்தேதியிட்டு குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இச்சலுகையினைப் பெறுவதற்கு கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையில் 25% தொகையை ஆணை பிறப்பிக்கப் பட்ட மூன்று மாதங்களுக்குள் செலுத்தி மீதித் தொகையை அடுத்த ஆறு மாதங்களில் செலுத்திட வேண்டும். இத்திட்டம் நிலுவையில் உள்ள அனைத்துக் கடன்களுக்கும் பொருந்தும்.

**சோதனைச் சாவடி நீக்கம்**

★ கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையில் இருந்து வந்த நெல் மற்றும் அரிசி லெவி முறையை (100% Levy system) மாற்றி சோதனைச் சாவடிகளை அகற்றியது இந்த அரசின் மாபெரும் சாதனையாகும்.



**மண்ணெண்ணெய் விலை சீரமைப்பு**

★ மைய அரசின் விலை நிர்ணயப்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9 முதல் ரூ.9.60 வரை விற்கப்பட வேண்டும். ஆனால் இவ்வரசு 9.3.2002 முதல் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9 வரை மானிய விலையில் விற்பனை செய்ய ஆணையிட்டுச் செயல்படுத்தப்படுகிறது.

**அரிசி ஒரு கிலோ ரூ.3.50**

★ பல மாநிலங்களில், ஏழை எளியோருக்கு ஒரு கிலோ ரூ.6 என்ற அடிப்படையிலும் மற்றவர்களுக்கு ரூ.8 முதல் ரூ.9 என்ற விலையில் அரிசி வழங்கப் படுகிறது. இந்த அரசு கடுமையான நிதிப்பற்றாக் குறையை எதிர்கொண்டு வந்தபோதும் பாகுபாடின்றி அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிய அளவு அரிசியைக் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற ஒரே விலையில் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.5.2004 அன்று அறிவித்துள்ளபடி, இதுவரை குடும்ப அட்டை பெறாமல் விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை வழங்கும் வகையில் மாநிலம் முழுவதும் 49,31,757 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்கள் அனைத்தும் விசாரணை செய்யப்பட்டு அதில் 37,70,446 விண்ணப்பதாரர்கள் குடும்ப அட்டை பெற தகுதி உள்ளவர்கள் என்று கண்டறியப்பட்டுக் குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

**உலக நுகர்வோர் உரிமை தினம்**

★ ஆண்டு தோறும் மார்ச் 15ஆம் நாள், உலக நுகர்வோர் உரிமை தினமாக, மாநில அளவில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ★

# மகளிர் நலன் காக்கும் சமூகநலத் துறை

ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அந்நாட்டின், மனிதவளம், சமூகநலம் மற்றும் பொருளாதார வளர்ச்சியையொட்டியே அமைந்துள்ளது. சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வரும் சமூக நலத் துறையின் கீழ் குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரின் நலத்திற்கும் பல்வேறு உன்னதத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் , தொட்டில் குழந்தைத் திட்டம், மகளிர் விடுதிகள், தொண்டு நிறுவனங்கள், ஆதரவற்றோருக்கான இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல், ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு நலத்திட்டங்கள், கர்ப்பிணி மகளிர், பாலூட்டும் தாய்மார்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கான சத்துணவுத் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்டப் பணிகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை மூலம் கடந்த நான்காண்டுகளாகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### மகளிர் சுயஉதவிக் குழு

★ இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், தமிழகத்தில் 19,79,494 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு, 1,20,005 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இம் மகளிர் குழு உறுப்பினர்கள் ரூ.560 கோடியைச் சேமித்துள்ளனர். மகளிர் சுயதொழில் தொடங்கும் வகையில் அவர்களுக்கு ரூ.863.51 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



### புது வாழ்வுத் திட்டம்

★ தமிழகத்தில் வறுமையைக் குறைக்கவும், பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர்களை ஆற்றல்படுத்தவும் ரூ.717 கோடி மதிப்பீட்டில் இந்த "புது வாழ்வுத் திட்டம்" நடப்பாண்டில் தொடங்கப்பட உள்ளது.

### பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

★ பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.75.48 கோடி செலவில், 49,489 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### திருமண நிதியுதவித் திட்டங்கள்

★ 12,562 மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.16.50 கோடி திருமண நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூ.573.4 இலட்சம் செலவில் 6,562 பேர் பயனடைந்துள்ளனர்.

### இலவச தையல் இயந்திரங்கள்

★ ரூ.5.76 கோடி செலவில் 29,299 பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### தொட்டில் குழந்தைகள் திட்டம்

★ தொட்டில் குழந்தைகள் திட்டத்தின் கீழ், 188 இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டு ரூ.20.48 இலட்சம் செலவிடப்பட்டது.

### சுனாமிப் பேரலை – ஆதரவற்ற குழந்தைகளுக்கு எதிர்கால வைப்புநிதி

★ சுனாமிப் பேரலையால் மிகவும் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகள், பெற்றோர்களை இழந்த வளர்இளம் பெண்கள் ஆகியோர் மறுவாழ்வுக்காக, ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் புதிய சேவை இல்லங்கள் ரூ.89.50 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற வளர்இளம் பெண்கள் ஆகியோரின் எதிர்கால மறுவாழ்விற்காகத் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### சமூகப்பாதுகாப்பு நலநிதித் திட்டம்

★ தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு நலநிதித் திட்டத்தின்கீழ் ரூ.7,65,000 மதிப்பில், பாதிக்கப்பட்ட 153 மகளிர் பயனடைந்துள்ளனர்.

### உடல் ஊனமுற்றவர்களுக்குப் பல்வேறு நிதியுதவிகள்

★ 23 அரசுச் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 2,230 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.24.32 கோடி செலவில் சிறப்புக் கல்வி, இலவசத் தங்கும் வசதி, உணவு, சீருடைகள் மற்றும் புத்தாடைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஆண்டொன்றிற்கு 15,971 உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியர்க்கு ரூ.4.28 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழகத்திற்கு அதிக விருதுகள்

★ **மத்திய அரசின் சமூக நீதி மேம்பாட்டுத்துறை, ஊனமுற்றோருக்காக வழங்கிய 70 விருதுகளில் தமிழகம் 14 விருதுகளைப் பெற்று பெருமை சேர்த்துள்ளது.**

★ ஊனமுற்றோருக்குச் சேவை ஆற்றுவதில் அகில இந்திய அளவில் சிறந்த மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தேசிய விருது கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்

★ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 3 புதிய திட்டப் பகுதிகளும், 12,852 புதிதாக மையங்களும் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 434 திட்டப் பகுதிகளில் 42,677 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன.

## அங்கன்வாடி மையங்கள் பழுதுபார்ப்பு

★ 10,000 அங்கன்வாடி மையங்கள் ரூ.7 கோடி செலவில் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 82 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.1,02,50,000 செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

## வளர்இளம் பெண்கள் மேம்பாட்டுத்திட்டம்

★ வளர்இளம் பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சிகள் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்பட்டன. 6,23,000 வளர்இளம் பெண்கள் பயனடைந்துள்ளனர்.

## இலவச முட்டைகள் வழங்கல்

★ சத்துணவு சாப்பிடும் 68.28 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ. 39 கோடி செலவில் இலவசமாக முட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் ரூ.25.10 கோடி செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

★ "ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்குவோம்" என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைக்கேற்ப ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி குறித்த விழிப்புணர்வுப் பிரசாரம் தகவல் தொடர்புப் பணிகள் மூலம் 2001 முதல் மார்ச் 2005 வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

★ சுனாமிப் பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.8.18 இலட்சம் மதிப்புள்ள 39.650 மெட்ரிக் டன் இணை உணவு பயனாளிகளுக்கு கூடுதலாக வழங்கப்பட்டது.

★ அங்கன்வாடி மையங்களின் மூலமாக, 6,71,548 குழந்தைகளுக்கு இணை உணவும், 10,39,767 குழந்தைகளுக்கு சத்துணவும், 5,09,896 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவும், 44,403 முதியோர் உதவித் தொகை பெறுவோர்க்கு சத்துணவும் வழங்கப்படுகிறது.

★ 61,57,528 மாணவ மாணவியர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர்.



## குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சத்துணவு

★ குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சத்துக் குறைபாட்டை நீக்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவுடன் 6 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு வட்டாரங்களில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறிகளுடன் முருங்கைக் கீரைப் பொடி அல்லது கறிவேப்பிலைப் பொடி சமையலுக்கு சேர்த்து வழங்கப்படுகிறது. இதன் மூலம் 35,000 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் நடப்பாண்டில் விரிவுபடுத்தப்படுகிறது.

★ சத்துணவுடன் வாரம் ஒருமுறை அதாவது திங்கட்கிழமை பயனாளி ஒருவருக்கு 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கு மற்றும் வெள்ளிக் கிழமையன்று 20 கிராம் பச்சைப்பயிறு அல்லது 20 கிராம் கருப்புக் கொண்டைக்கடலை வேகவைத்து வழங்கப்படுகிறது.

★ கடந்த நான்காண்டுகளில் சத்துணவு மற்றும் அங்கன்வாடியில் உணவருந்தும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவதற்கு ரூ. 4 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில் சத்துணவு மையங்களில் சமைப்பதற்கு உதவும் பழைய அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்க ரூ.2 கோடி செலவிடப் பட்டுள்ளது.

★ கடந்த நான்காண்டுகளில் சத்துணவு மையங்களைச் செப்பனிட ரூ.25.10 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ சாலையோரச் சிறார்களுக்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் இரவுப் புகலிடங்களுக்கான மானியம் புகலிடம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.65,500/– என்பதாக இருந்தது. இந்த மானியத் தொகை புகலிடம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1,35,000/– என்பதாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ★ ★

# தமிழகத்தில் தரணி போற்றும் தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

தமிழுக்கு அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
– பாரதிதாசன்

தமிழக அரசு தமிழ் மொழியின் பழமையையும், சிறப்பையும் காக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது.

ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகப் 'புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்க 'சொல் வங்கி'த் திட்டம் – தமிழ் வளர்த்த தன்னிகரில்லாத் தலைவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நூற்றாண்டு விழாக்கள் – தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் – தரணியெங்கும் தமிழ் மொழி வளர உலகத் தமிழ் இலக்கிய வரலாறு நூல் உருவாக்கம் – கலைகளில் சிறந்தோங்கும் கலைஞர்களுக்கு விருதுகள் – இயல், இசை, நாடகத் தமிழை வளர்க்க நடவடிக்கைகள் – இந்து அறநிலைய திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் – திருக்கோயில்கள் குடமுழுக்குப் பணிகள் – ஆயிரக் கணக்கான மக்களுக்கு இலவசத் திருமணங்கள் – திருக்கோயில் யானைகளுக்குப் புத்துணர்வு முகாம்கள் என கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறையில் முத்து முத்தான சாதனைகள் படைத்துத் தமிழக அரசு பீடுநடை போட்டு வருகிறது.

## அரசின் சாதனைகள்

### அறிவியல் தமிழ்

✶ வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, தமிழ் மொழி வளப்படுத்தப்பட வேண்டும் எனும் நோக்கில் மிகப்பெரும் அளவில் 5.1.2002 அன்று சென்னையில் "அறிவியல் தமிழ் – தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கம்" நடத்தப்பட்டது.

✶ சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 31 வகைப்பாடுகளாக அதிகரிக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்கும், அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### மும்பைப்பகுதி தமிழ் மாணவர்களுக்கு இலவச நூல்கள்

✶ மும்பைப்பகுதியில் வாழும் ஏழை, எளிய தமிழ் மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 3.10.2002 அன்று ரூ.43,025/– மதிப்புள்ள நூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

### நூல்கள் நாட்டுடைமை

✶ எழுத்தாளர்கள் புதுமைப்பித்தன், ந.மு. வேங்கடசாமி நாட்டார், ந. பிச்சமூர்த்தி, க.நா. சுப்பிரமணியம் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தாருக்கு தலா ரூ.5 இலட்சம் பரிவுத்தொகையும், கு.ப.சேது அம்மாள் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவருக்கு ரூ.3 இலட்சம் பரிவுத்தொகையும், கு.ப.ரா. அவர்களின் மகன் கு.ப.ரா. பட்டாபிராமனுக்கு ரூ.2 இலட்சம் பரிவுத்



தொகையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்டன.

✶ புதுடெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழ் இருக்கை நிறுவ ரூ.50 இலட்சம் ஒரே தவணையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி வழங்கப்பட்டது.

✶ மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர், எழுத்தாளர் கு.ப.ரா., மணிக்கொடி சீனிவாசன் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

* பதினொன்று, பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கும் மாணவர்களிடையே படைப்பாற்றலை உருவாக்கி வளர்க்கும் நோக்கில், "தமிழ் மன்றம்" எனும் அமைப்பு மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதேபோன்று கல்லூரி மாணவ, மாணவியர் களுக்கும் மாவட்டந்தோறும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி, பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**சொல்வங்கித் திட்டம்**

* ஆங்கிலம் மற்றும் பிற மொழிச் சொற்களுக்கு நிகரான புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கிப் பயன் பாட்டிற்குக் கொண்டுவரும் நோக்கில் "சொல்வங்கி" திட்டம் தோற்றுவிக்கப்பட்டு இதுவரை 479 புதிய தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சங்ககாலம் முதல் பாரதிதாசன் படைப்புகள் வரையிலான இலக்கியங்களைக் கொண்டு 'இலக்கியச் சொல்லடைவு' தயாரிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

* "உலகத் தமிழ் இலக்கிய வரலாறு நூல்" உருவாக்கத் திட்டமிட்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* சென்னை ஏழுகிணறு பகுதியில் வள்ளலார் வாழ்ந்த இல்லம் நினைவிடமாக்கப்படும் என அறிவிக்கப் பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்**

* அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில், 32 தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் பெறத்தக்க வகையில் ஓய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டு, ஒவ்வொருவருக்கும் திங்கள்தோறும் ஓய்வூதியமாக ரூ.500/– வழங்கப்பட்டு வருகிறது.

* தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001 மே முதல் இந்நாள்வரை 96 தமிழறிஞர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதமும், 11 மரபுரிமையர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வீதமும் வழங்கப்பட்டுள்ளன.

* சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 23,74,704/– நூலாசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

* தமிழில் "பல்துறைக் கலைக்களஞ்சியம்" தயாரிக்க ஆணையிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

* திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் தமிழ்த் தாத்தா உ.வே.சா. வாழ்ந்த இல்லம் நினைவிடமாக ஆக்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

**தமிழ் வளர்ச்சி வளாகத்திற்குப் புதிய கட்டடம்**

* ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.3.05 அன்று திறந்து வைத்தார்கள்.

* தமிழகம் ஊரும் சீரும் குறுந்தகடுகள், தமிழில் மென்பொருள், மின் அகராதி, கிளவியாக்கம், மொழித்திறம் ஆகியவை தயாரித்தல், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## தொல்லியல் துறை

* கடந்த நான்காண்டுகளில் மட்டும் 5,850 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. இதனை நூல்களாகவும், டிஜிட்டல் முறையிலும் பாதுகாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன.

* நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட 4,582 தொல் பொருள்கள் பதிவு செய்யப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

* அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம் ஓர் ஆய்வு மையமாக மாற்றப்பட்டுள்ளது. இந்நூலகத்தில் 200 புதிய ஓலைச்சுவடிகள் சேர்க்கப்பட்டுள்ளன. நூலக வரலாற்றில் முதன் முதலாக தமிழ் வெளியீடுகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

* செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டு காலத்தில் பேரகரமுதலி 19 பகுதிகள் முடிக்கப்பெற்றுள்ளன.

## கலைப் பண்பாட்டுத்துறை

★ கலைப் பண்பாட்டு இயக்ககத்தின் மூலம் மாவட்டங்கள்தோறும் கலை விழாக்களும், கலைப் பயிற்சி முகாம்களும் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ரூ.62.99 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைசிறந்த 5 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.11.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 285 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

**இசைக்கல்லூரியில் செயல்முறை வகுப்புகள்**

★ 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் வாங்க ரூ.2.50 இலட்சமும், இசை தொடர்பான நூல்கள் வாங்க ரூ.1.70 இலட்சமும், இசைப்பள்ளிகளில் கலை வல்லுநர்களைக் கொண்டு செயல்முறை நிகழ்ச்சிகளை மேற்கொள்ள ரூ.1.70 இலட்சமும் வழங்கப்பட்டன.

**கவின் கலைக் கல்லூரிகள்**

★ சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி கட்டடங்கள் சீரமைக்கும் பணி ரூ.10 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. இக்கல்லூரியில் இள நுண்கலை பயிலும் மாணவர்களுக்கு இலவச வரைபட பொருட்கள் வழங்க ரூ.4 இலட்சம் மதிப்பில் வரைபட பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன.

★ கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் வரைபொருள் களுக்கான தொகை ரூ.250லிருந்து ரூ.1,000/–மாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**இராக ஆராய்ச்சி மையம்**

★ இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு தமிழக அரசால் 1992 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இம்மையத்திற்கு ரூ.15 இலட்சம் நல்கையாக வழங்கப்பட்டுள்ளது.

**தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்**

★ தஞ்சாவூர், தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சமும், 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழக அரசு தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்கு ரூ.200 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

**தனியார் கலை நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி**

★ கலை பயில் பண்பாட்டுக் கழகத்திற்கு கலை வளர்ச்சினைக் கருத்தில் கொண்டு ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது.

★ இந்தியா மற்றும் இந்தோனேஷியா நாடுகளில் புகழ்பெற்ற பரதநாட்டியத்தில் ஒரு பிரிவான அசைவுகள் குறித்து புத்தகத் தொகுப்பு வெளியிட ரூ.7 இலட்சம் நிருத்யோதயா கலை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 3 தொகுதி நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இந்நிறுவனத்தினிடமிருந்து 10 தொகுப்புகள் பெறப்பட்டு அனைத்து இசைப் பள்ளிகளுக்கும், இசைக் கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

**நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி**

★ நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2002–2003இல் 498, 2003–2004இல் 500 மற்றும் 2004–2005இல் 500 கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ மறைந்த கலைஞர்களின் குடும்பப் பராமரிப்பு நிதி உதவித் திட்டத்தின்படி தலா ரூ.5,000 வீதம் 2001–2002இல் 12, 2002–2003இல் 16 மற்றும் 2003–2004இல் 6 குடும்பங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2004–2005இல் இத்தொகை உயர்த்தப்பட்டு ரூ.6,000 வீதம் 32 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம், கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி, நட்டுவாங்க கலைப் பயிற்சி, நாதசுரம், தவில் சிறப்புப் பயிற்சி, குழந்தைக் கலைஞர் ஊக்குவிப்பு, மாநிலங்களுக்கிடையேயான கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டங்கள், புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்கும் திட்டம் ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ 2001 முதல் 2004 வரை 12,879 கலைஞர்களுக்கு இரயில் பயணச் சலுகைச் சான்றுகள் வழங்கப் பட்டுள்ளன.

★ நாடகக் குழுக்களுக்கு 50 சதவிகிதம் பேருந்து கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இந்த வகையில் 2001 முதல் 2005 வரை 137 நாடகக் குழுக்களைச் சேர்ந்த 1,690 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்**

★ 2001–02, 2003–04, 2004–05 ஆகிய ஆண்டுகளில் 39 குழந்தைகள் புதுதில்லியில் நடத்தப்பட்ட இளந்திரு விருது தேர்வுப் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 சிறுவர்கள் தேசிய இளந்திரு விருதினைப் பெற்றுள்ளனர்.

★ சென்னை சவகர் சிறுவர் மன்றத்தில் 2001–2005 வரை கோடைக்கால இலவசக் கலைப்பயிற்சியில் 10,333 குழந்தைகள் பயிற்சி பெற்றுள்ளனர். கைவினைப் பயிலரங்கில் 2002–2005 வரை 160 குழந்தைகள் பங்கு கொண்டனர்.

**தமிழ்நாடு ஒவிய நுண்கலைக் குழு**

★ கவின் கலைகளான ஒவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும் இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும், புது தில்லி லலித கலா அகாதமியுடன் ஒருங்கிணைந்து அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் ரூ.52.11 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**மரபு வழி கலைக்காட்சி**

★ 2001 நவம்பர் மாதத்தில் மாநில அளவில் மரபு வழி கலைக்காட்சி நடத்தப்பட்டது. இதில் தேர்வு செய்யப்பட்ட கலைப் படைப்புகளுக்கு மாநில விருது, புதுப்பாணிக் கண்காட்சியில் தேர்வு செய்யப்பட்ட கலைப் படைப்புகளுக்கு மாநில விருது, கவின் கலைக் கல்லூரி மாணவ மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன. இவற்றால் 130 பேர்கள் பயன்பெற்றனர்.

★ தனிநபர் கண்காட்சி நடத்த 2001–2004 ஆண்டுகளில் 41 ஒவிய சிற்பக் கலைஞர்களுக்கும், 2001–2002இல் கூட்டுக்கலைக் காட்சி நடத்திய 4 குழுக்களுக்கும் நிதிஉதவி வழங்கப்பட்டது.

**"நுண்கலை" கலையிதழ் வெளியிடுதல்**

★ கலை ஆர்வலர்கள் பயன் பெறும் வகையில் தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையில் "நுண்கலை" என்னும் கலையிதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

★ கோவில் கட்டடக் கலை தொழில் நுட்ப நூல் பணிக்கு ரூ.20,000/– முதல் தவணையாக வழங்கப் பட்டுள்ளது.

**"கற்காலம் முதல் தற்காலம் வரை" குறுந்தகடு**

★ "கற்காலம் முதல் தற்காலம் வரை" என்ற தலைப்பில் புகைப்படத் தொகுப்பைத் தயாரித்து குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை பொது மக்களும், கலையார்வலர்களும் பயன்பெறும் வகையில் வெளிக்கொணர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## இந்து சமய அறநிலையத்துறை

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தொடங்கப் பட்ட திருக்கோயில் அன்னதானத் திட்டத்தின் மூலம் 1 கோடியே 87 இலட்சத்து 74 ஆயிரத்து 188 பேர் பயன்பெற்றுள்ளனர்.**

★ 5,81,272 சிறார்கள் ஆன்மிக வகுப்புகளில் பாடம் பயின்றுள்ளனர்.

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனையின்படி கடந்த நான்காண்டுகளில் 2,550 இணைகளுக்கு இலவசத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.**

★ பழநி மலைக் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் பயன்பாட்டுக்கென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கம்பிவட ஊர்தி (ரோப் கார்) தொடங்கிவைக்கப்பட்டு பயன்படுத்தப் பட்டு வருகிறது.

★ 2,000 இலவச மின் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன.



★ யானைகள் புத்துணர்வு சிறப்பு முகாமில் 213 யானைகள் பங்குபெற்றுப் புத்துணர்வு பெற்றுள்ளன.

★ 4,606 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது.

★ 148 திருத்தேர்கள் திருப்பணி செய்யப்பட்டுள்ளன.

★ 6,275 ஆதிதிராவிடர் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ 300 கிராமக் கோயில்கள் திருப்பணியும், 507 திருக்குளங்களைத் தூர் வாரி சீரமைத்துச் செப்பனிடும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

★ ★ ★

# இளைஞர்கள் நலன் போற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை



**நா**ட்டின் வளர்ச்சி மற்றும் வலிமை, இளைஞர்களின் ஒட்டுமொத்த ஆற்றலை நம்பியே உள்ளது என்பது பேருண்மை. எதையும் சாதிக்க நினைக்கும் சக்தியுடன் கூடிய ஆற்றலையும், புத்துலகைப் படைக்கும் ஆற்றலையும் தன்னகத்தே கொண்ட இளைஞர்களை உருவாக்கும் நாடு, எதிர்காலத்தில் ஒரு வல்லரசு நாடாக உருவாகும். விளையாட்டு வீரர்களுக்கு உற்சாகம் அளித்து, ஊக்குவித்து, வீரர்களிடையே போட்டி மனப் பான்மையையும் வெற்றி பெறும் அணுகு முறைகளையும் வளர்த்து, விளையாட்டுத் துறையில் தமிழகத்தின் பெருமையை உலகளவில் அறியச் செய்யப் பல யுக்திகளைக் கையாண்டு, தமிழக அரசு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

## அரசின் சாதனைகள்

### விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை

* ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க தமிழ்நாடு அரசு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை அறிமுகப் படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் 123 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.2.10 கோடி வழங்கப்பட்டது.

### சென்னை "ஓபன்"

* டென்னிஸ் விளையாட்டில் இதுவரையில் சென்னையில் "டாடா ஓபன்" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் IMC (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து இந்தப் போட்டியை "சென்னை ஓபன்" (Chennai Open) என்ற பெயரில் 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு முடிய ஒவ்வொரு ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு ஜனவரி 3 முதல் 9 வரை சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டன.

### சென்னையில் கூடுதலாக வளைகோல் செயற்கைப் புல்தரை

* 2005–ஆம் ஆண்டில் இந்தியாவில், சென்னையில் சேம்பியன் டிராபி (ஆண்கள்) வளைகோல் பந்து போட்டிகளை நடத்திட சர்வதேச வளைகோல்பந்து விளையாட்டு இணையம் அனுமதித்துள்ளது. சேம்பியன் டிராபி போட்டிகளை நடத்திட ஏதுவாக, 2 வளைகோல் செயற்கைப் புல்தரை ஆடுகளம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே, சென்னையில் கூடுதலாக ஒரு வளைகோல் செயற்கைப் புல்தரை அமைக்கப்பட உள்ளது.

### விளையாட்டு வீரர்களுக்கு 10% இட ஒதுக்கீடு

* காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10% இட ஒதுக்கீடு முறை ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத்துறை மற்றும் வனத்துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

### சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டம்

* 2002–2003ஆம் ஆண்டு முதல், சர்வதேச விளையாட்டு வீரர்களைக் கண்டறியும் திட்டத்தின் கீழ் உடற் திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8–ம் வகுப்புகளில் பயிலும் சிறுவர் / சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரசு இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் கண்டறியப் பட்ட திறன்படைத்த மாணவர்களுக்கு அவர்களின்

திறமைக்கேற்ப, சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**பளுதூக்கும் பயிற்சிக்கூடம்**

* பளுதூக்கும் விளையாட்டு வீரர்களின் நீண்டகாலக் கோரிக்கையின் அடிப்படையில் சென்னையில் பளுதூக்கும் கூடம் ஒன்று சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் அமைக்கப்படவுள்ளது.

**தடகளப் போட்டி**

* தமிழகத்தில் தடகளப் பயிற்றுனர்களின் திறனை மேம்படுத்த உலகத்திறன் வாய்ந்த பயிற்சியினை பயிற்றுநர்களுக்கு வழங்க, ஆஸ்திரேலியா நாட்டு தடகளப் பயிற்றுநர் மூலம் ஒரு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில், இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்றுநர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு தடகள சங்கத்தைச் சார்ந்த பயிற்றுநர்கள் மொத்தம் 35 பேர் தடகளப் பயிற்றுநர்களுக்கான சிறப்பு முகாமில் கலந்து கொண்டு தடகள விளையாட்டில் தற்போதைய புதிய யுக்திகளையும், சர்வதேசப் பயிற்சிகளைப் பற்றியும் அறிந்து கொண்டார்கள்.

**சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்**

* சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 53 விளையாட்டுச் சேம்பியன்களைக் கண்டறிந்து அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க, அவர்களது தேவைக்கேற்ப சரியான உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ள விளையாட்டு வீரர்கள் / வீராங்கனை களுக்கு, அயல்நாடு சென்று பயிற்சி மேற்கொள்ள, பயணப்படிகளும், விளையாட்டுப் பொருட்களும், விளையாட்டு உபகரணங்களும், விளையாட்டு மருத்துவ உதவியும், சிறப்பு உணவுத் திட்ட உதவிகளும் மற்றும் மனரீதியான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**இளைஞர் மன்றங்கள்**

* இளைஞர்களிடையேயுள்ள சக்தியினை வெளிக் கொணரும் வகையில் இளைஞர் நலத்திட்டங்களைத் செயல்படுத்திட 300 இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**பீச் வாலிபால்**

* தமிழகத்தின் கடற்கரை ஓரங்களில் உள்ள பள்ளிகள் கண்டறியப்பட்டு, அங்கு படிக்கும் பள்ளி மாணவ, மாணவியர் பயனடையும் வகையில், கடற்கரை மணற்பரப்பில் விளையாடும் "பீச் வாலிபால்" என்ற புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விளையாட்டில் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டன.

**நவீனமுறையில் உயர்தரப் பயிற்சி**

* திறமைமிக்க விளையாட்டு வீரர்களுக்கு அயல்நாட்டில் நவீன முறையில் உயர்தரப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் சர்வதேச அளவில் அயல்நாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 37 விளையாட்டு வீரர்கள் பயனடைந்துள்ளனர்.

* தென்னாப்பிரிக்க வளைகோல் பயிற்றுநர் குமாரி ரீனா வான் ஜி அவர்களால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையப் பயிற்றுநர்கள், இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்றுநர்கள் மற்றும் மாநில வளைகோல் கழகத்தை சார்ந்த 37 வளைகோல் பயிற்றுநர்களுக்கு சென்னை நேரு விளையாட்டு அரங்கில், ஜனவரி 24 முதல் 26 முடிய முற்பகலில் பயிற்சி தொடர்பான சிறப்புக் கருத்தரங்கும், பிற்பகலில் வளைகோல் பயிற்சி அளிப்பதற்கான சிறப்பு செய்முறையும் நடத்தப்பட்டது.

* சாம்பியன் மேம்பாட்டுத் திட்டம் மூலம் இளையோர் மற்றும் மிகவும் இளையோர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

* நேரு விளையாட்டு அரங்கில் கடற்கரை கைப்பந்து மைதானமும், நீலகிரியில் சிந்தடிக் டென்னிஸ் மைதானமும், புதுக்கோட்டை, அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

* திருநெல்வேலி பாளையங்கோட்டையிலுள்ள அண்ணா விளையாட்டு அரங்கத்தில் செயற்கைப் புல்வெளி வளைகோல்பந்து மைதானம் அமைக்கப் பட்டு தயார் நிலையில் உள்ளது.

**"சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயம்**

* தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ரோட்டரி இன்டர்நேஷனல் கழகமும் இணைந்து, "சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயப் போட்டியைச் சர்வதேச மராத்தான் போட்டிகளுக்கு இணையாக கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகிறது.

* பள்ளிக் கல்வி இயக்குநரகத்தால் நடத்தப்படும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் தற்போது உள்ள விளையாட்டுப் போட்டிகளுடன் ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள் சண்டை, குத்துச்சண்டை மற்றும் நீச்சல் ஆகிய 5 புதிய விளையாட்டுப் போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு 2004–2005இல் மேலும் டென்னிஸ், கைப்பந்து மற்றும் டேக்வாண்டோ ஆகிய மூன்று விளையாட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

* துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டிற்கென சர்வதேச அளவிலான ரேஞ்சு கட்டமைப்பு வசதிகள் மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டு உபகரணங்கள் கூடிய துப்பாக்கிச் சுடுதல் தளம் சென்னையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

* சர்வதேச அளவில் போட்டிகளை நடத்திட பன்னாட்டுத் தரத்திற்கேற்ற வகையில் ஸ்கேட்டிங் ரிங்க் ஒன்று சென்னையில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**வாள்சண்டை உபகரணங்கள்**

✶ வாள்சண்டை விளையாட்டில் அதிக விளையாட்டு வீரர்கள் பங்கேற்று, பயிற்சி பெறும் வண்ணம், 5 மண்டல தலைமை இடங்களில் தரம் வாய்ந்த உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது.

✶ ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டை வளர்த்து, முன்னிலைப்படுத்த தேவையான உபகரணங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

✶ "சுவர் பந்து" ஒரு சர்வதேச விளையாட்டாகும். இவ்விளையாட்டினை சேலம், தேனி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ஸ்குவாஷ் ஆடுதளங்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✶ நீச்சல் பயிற்றுநர்களுக்கான சிறப்பு முகாம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 25 பயிற்றுநர்களுக்கு, மார்ச் 2005 முதல், ஆண்டு முழுவதும் பயிற்சி அளிக்கப் படவுள்ளது.

✶ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், இந்திய விளையாட்டு மருத்துவக் கழகமும் இணைந்து 26ஆவது மருத்துவக் கருத்தரங்கத்தை சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடத்தின. இதில் உலகளவில் பிரசித்திப் பெற்ற 175 பேர் பங்கு பெற்றனர்.

✶ அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் விளையாட்டுகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வண்ணம் மாதந்தோறும் போட்டிகள் நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதுவரை அனைத்து மாவட்டங்களிலும் 6 விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

**விளையாட்டுத் திறன் முன்னேற்ற மையம்**

✶ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பன்னிரண்டு நிறுவனங்களுடன் விளையாட்டுத் திறன் முன்னேற்ற மையத்திற்கான கூட்டு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு உள்ளது. மேலும், 10 நிறுவனங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட உள்ளன.

**விளையாட்டு அகாடமிகள்**

✶ கல்வி நிறுவனங்கள், குழுக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தனியார் பங்கேற்புடன் கீழ்க்கண்ட அகாடமிகள் நிறுவப்பட்டுள்ளன.

- விருதுநகரில் ஹாக்கி அகாடமி, திண்டுக்கல்லில் கையுந்துபந்து அகாடமி, தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் ஸ்குவாஷ் அகாடமி, சென்னை பேசின் பிரிட்ஜ் மேஜை பந்து அகாடமி, தமிழ்நாடு செய்லிங் கழகமுடன் செய்லிங் அகாடமி, சென்னை அசோக் நகர் புதூர் அரசு மேனிலைப்பள்ளியில் கிரிக்கெட் அகாடமி, சென்னை முகப்பேரில் டால்பின் நீச்சல் அகாடமிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

✶ 2004–2005ம் ஆண்டிற்கான நிதியாண்டில், பின்வரும் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:

➢ மதுரையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி – இறகு பந்து அகாடமி.

➢ சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து அகாடமி – பேசின்பாலம் தொன்போஸ்கோ மைதானத்தில் மேசைப்பந்து அகாடமி – நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கைப்பந்து அகாடமி – வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் டைவிங் அகாடமி – குறுந்தூர ஓட்டத்திற்கான அகாடமி – நீண்டதூர ஓட்டத்திற்கான அகாடமி – புதூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிரிக்கெட் அகாடமி.

➢ புதுக்கோட்டை அறந்தாங்கியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடைப்பந்து அகாடமி.

➢ திண்டுக்கல்லில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு எறிதல் அகாடமி.

✶ கடலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. ✶


## "தமிழரசு" சந்தா விவரம்

**தமிழரசு தமிழ் இதழ்**

ஆண்டு சந்தா – ரூ.120
ஆயுள் சந்தா – ரூ. 1,000
(10 ஆண்டுகளுக்கு)

**தமிழரசு ஆங்கில இதழ்**

ஆண்டு சந்தா – ரூ.60
(மூன்று மாதத்திற்கு ஒருமுறை)
ஆயுள் சந்தா – ரூ. 500
(10 ஆண்டுகளுக்கு)

**வங்கி வரைவோலையாக அனுப்ப வேண்டிய முகவரி :**

**துணை இயக்குநர் (வெளியீடுகள்)**
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

பார்க்க! படிக்க!! பயன்பெற!!!


விழாக்காலம் – கோ-ஆப்டெக்ஸ் காலம்
கோ-ஆப்டெக்ஸ்
காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.
• காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
• சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
• ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
• கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
• உறையூர் பருத்தி சேலைகள்
• சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
• மதுரை சுங்கடி புடவைகள்
• சென்னிமலை ஏற்றுமதி தரம் வாய்ந்த படுக்கை விரிப்புகள்
• கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த எரலை துண்டுகள் (டவல்கள்)
• குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
• தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்
கோ-ஆப்டெக்ஸ்
Visit us at www.tn.gov.in / www.cooptex.com
இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
வாருங்கள். பாருங்கள். வாங்குங்கள். முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.


தமிழரசு
R N I No 21446/70
RGN No TN/PMG (CCR) 836/03-05 WPP-518